
சிவ சிவ



மூதறிஞர், பண்டிதர்

சிவஸ்ரீ க. வைத்தீசுவரக் குருக்கள்

அவர்களின்



# திருத்தொண்டு பரவும் மலர்

சிவ சிவ

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

*மன்னுக தில்லை! வளர் கநம்*
*பக்தர்கள் ! வஞ்சகர் போய் அகல*
*பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து*
*புவனி யெல்லாம் விளங்க*
*அன்ன நடை மடவாள் உமை கோன்*
*அடியோ முக்கருள் புரிந்து*
*பின்னைப் பிறவி யறுக்க நெறி தந்த*
*பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.*

திருப்பல்லாண்டு

வம்மின் நமரங்காள்! வழுத்து மின்
திருத் தொண்டை !

28 இரத்தினகார இடம்
தெகிவளை
இலங்கை
தொலை. பேசி / தொலைநகல் 714757

**கே. கே. சுப்பிரமணியம்**
பதிப்பு ஆசிரியர்





க. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்கள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# பதிப்புரை

ஈழத்திரு நாட்டின்கண் காலம் தோறும் பல சைவப் பெரியார்கள் தோன்றிச் சைவத்திற்கும் தமிழிற்கும் பல அரிய தொண்டுகளைச் செய்து வந்துள்ளனர். அந் நிரலில் வைத்து எண்ணத் தக்கவரே அருள்மிகு க. வைத்தீசுவரக் குருக்கள் ஐயா அவர்கள் ஆவார். உத்தரகோசமங்கையில் வழி வழியாக வளர்ந்து வந்த ஆதி சைவ மரபில் தோன்றியவர்கள். நல்லாசிரியர், கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் அடிகளின் நிறைவான அருளாசியைப் பெற்றவர். ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் திருக்கோவிலில் முப்போதும் திருமேனி தீண்டி வழிபாடு ஆற்றிவரும் புண்ணிய சீலர்.

ஈழத்துச் சிதம்பரம் திருக்கோவிலில் முதன்மைக் குருக்களாகப் பல்லாண்டுகளாகப் பணி புரிந்தவரும், திருக்கேதீசுவர குரு குலத்தின் காப்பாளருமான அருள்மிகு கணபதீசுவரக் குருக்கள் ஐயாவின் அருந்தவச் செல்வர் ஆவர். தந்தை அறிவு, மகன் அறிவு என்பதற்கு ஏற்ப வாழ்ந்து வந்த பெருமகனான அருள்மிகு மங்களேசுவரக் குருக்கள் அவர்களின் இளவலும் ஆவர். இத்தகைய அருட் செல்வர் காரைநகர் மணிவாசகர் சபையைத் தோற்றுவித்தவருமாவர். இத் திருக்கோயிலில்

ஆண்டுக்கு மும்முறை நடந்துவரும் விழாக்களில் மார்கழித் திருவாதிரைப் பெருவிழாவில் பத்து நாட்களும் விழாவெடுத்து மகிழ்ந்து வரும் அருட் கொடையாளருமாவார். இத் திருக்கோவிலின் அரிய வரலாற்றைத் திருமிகு நாவாலியூர் சோமசுந்தரப் புலவனாரைக் கொண்டு இயற்றிவித்து ஈழத்துச் சிதம்பர புராணம் என்னும் பெயரில், அந்நூலை வெளியிட்டு அருளியவருமாவார்.

செஞ்சொற் கொண்டல் திரு. சொ. சிங்காரவேலனார் அவர்களின் உரையுடன் திண்ணபுர அந்தாதியைத் திருப்பனந்தாள் காசித்திருமடத்தின் வழி வெளியிட்டு அன்பளிப்பாக வழங்கியவருமாவர்

இளைய பல அரிய பணிகளோடு காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம் என்று ஓர் அரிய நிறுவனத்தை நிறுவி, அதன் வழிப் பல அரிய தொண்டுகளை ஆற்றி வருபவரும் ஆவர். “கணபதீசுவரக் குருக்கள் நூலகம்” என்ற ஒன்றைத் தோற்றுவித்து அதன் வழிப் பல அரிய நூல்களும், பழைமையான பல சிறந்த ஏடுகளும் இடம்பெற வைத்து சிறந்த முறையில் அந்நூலகத்தைப் போற்றிவருபவருமாவர். இளைய பல அருள் நலம் சான்ற திருமிகு க . வைத்தீசுவரக் குருக்கள் ஐயா அவர்களின் அரிய தொண்டுகளை அடியேன் அனைய பலரும் போற்றி மகிழ வேண்டும் என்பது அடியேனின் அவாவாகும்.

அருள்மிகு சௌந்தராம்பிகை உடனாய சுந்தரேசுவரப் பெருமான் திருவருளாலும் குருக்கள் ஐயா அவர்களின் அருளாசியாலும் அந் நினைவு இன்று இம்மலர் வழி நிறைவு பெறுகிறது. அருள்மிகு குருக்கள் ஐயா அவர்கள் எங்கள் குடும்பத்துடன் நெருங்கிய தொடர்புடையவர்கள். "எங்கள் குடி முழுகா என்ட அருமருந்தாக வழங்கி வருபவர்கள்!"

அருள்மிகு ஆனந்த நடராஜப் பெருமானின் திருவருள் துணைகொண்டு வெளிவரும் இவ்வரிய மலரை அருள்மிகு குருக்கள் ஐயா அவர்களின் அருளாசியோடு வெளியிட்டு அவர்களுக்கு உரித்தாக்கி மகிழ்கின்றேன்.

குருக்கள் ஐயா அவர்கள் மேலும் பல்லாண்டு, பல்லாண்டுகள் வாழ்ந்து அருள் நலம் வழங்கி அருள எல்லாம் வல்ல கூத்தப் பெருமானை வணங்கி மகிழ்கின்றோம்.

*"மன்னுக தில்லை! வளர்க நம்பக்தர்கள்!!"*

பணிவுள்ள அடியவன்

உ

Email: skmkanci@md.vsnl.in
kanchimutt@vsnl.com
www.kamakoti.org.

Phone: (04112) 22115
Fax: (04112) 24305

Sri Chandramouleeswaraya Namaha :
Sri Sankara Bhaghavadpadacharya Paramparagatha Moolomnaya
His Holiness Sri Kanchi Kamakoti peetadhipathi
**JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL**
**SRIMATAM SAMSTHANAM**

No. 1, Salai Street, Kancheepuram - 63152. Tamilnadu, India

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத் குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் அருளாசி

இலங்கை காரைநகர் ஈழத்து சிதம்பரத்தைச் சேர்ந்த பண்டிதர், முதறிஞர் பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வர குருக்கள் அவர்களுக்கு 85வது வயது பூர்த்தியை ஒட்டி ஒரு விழா எடுக்க இருப்பதும் அச்சமயத்தில் திரு. கே. கே. சுப்பிரமணியம் அவர்கள் மூலம் ஒரு மலர் வெளியிடுவதும் கேட்டு சந்தோஷிக்கிறோம்.

இந்த விழா வெகு சிறப்பாக நடந்து, மலரும் நல்ல முறையில் வெளிவந்து, இந்த விழாவை நடத்துபவர்களும் இதில் பங்கு கொள்பவர்களும் அம்பாள் த்ருபுர சுந்தரி சமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வரர் அருளால் பரம க்ஷேமமாக இருக்க ஆசி வழங்கி அனுக்கிரஹிக்கிறோம்.

*— நாராயண ஸ்ம்ருதி —*

ௐ

*Swami Namaanandha Giri*

Sri Gnanananda Nama
Sankeerthana Mandali
31, Sadayappan Street
Chennai - 600 028
Phone: 495 2498

## சுவாமி நாமானந்தகிரி
## அருளாசி

ஸ்ரீஸத் குருநாதர் துணை நிற்க

அன்புடையீர்!

ராதே கிருஷ்ணா!

எல்லாம் வல்ல ஸ்ரீ சத்குருநாதரின் திருவருட் கருணை எல்லோருக்கும் கிடைக்கப்பெற்று இன்புற்றிருக்க வேண்டுவோம்.

குருஜி திரு ஹரிதாஸ கிரி சுவாமிகளின் முக்கிய சீடர்களில் ஒருவராக விளங்கும், என்றும் குருநாதர் சிந்தனையுடன் இயங்கும், எப்பொழுதும் குரு சேவையே மஹேசன் சேவையாக நினைத்து நடப்பவருமாகிய திருவாளர் கே. கே. சுப்ரமணியன் அவர்கள் இலங்கைத் திருநாட்டில் பக்தி மணம் கமழும் ஈழத்துச் சிதம்பரத்தில் பாமர மக்களைப் பக்திவழியில் நெறிப்படுத்த வேண்டிச் செய்யும் தொண்டுகள் பலவற்றில் தற்சமயம் அங்கு தெய்வத் தொண்டாற்றி வரும் மூதறிஞர், பண்டிதர் சிவத்திரு வைத்தீஸ்வர

குருக்கள் அவர்களின் 85 வது வயது நிறைவையொட்டி பக்தி மலர் ஒன்றைப் பூக்க முயற்சிப்பது கண்டு மகிழ்ச்சியுற்று, வெளிவரும் மலர் மணம் கமழ்ந்து மக்கள் அனைவருக்கும் சேர்த்து, பக்தி வழியில் மேலும் ஈடுபடச் செய்து மலரைப் பூக்கச் செய்தவருக்கும் அதற்குக் காரணமாயிருந்தவருக்கும், மற்றும் மலரின் மணத்தை அனுபவிப்பவர்களுக்கும் ஸ்ரீ குருநாதரின் திருவருள் பூர்ணமாகக் கிடைக்கப்பெற்று மன அமைதியுடன் வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ குருநாதரின் திருவடியை வேண்டுவோம்.

ராதே கிருஷ்ணா

சுவாமி நாமானந்த கிரி

## பஞ்ச சபைகள்

*(1) கனக சபை - சிதம்பரம் - ஆகாசலிங்கம்*
*(2) வெள்ளியம்பலம் - மதுரை*
*(3) ரத்தின சபை - திருவலான்காடு*
*(4) தாமிர சபை - திருநெல்வேலி*
*(5) சித்திர சபை - திருக்குற்றாலம்*

ஈழத்து சிதம்பரத்தின் இராஜ கோபுர புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் 10.12.2001 திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

உ

*சிவ சிவ*

கயிலைமாமுனிவர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர், ஸ்ரீ காசிமடம்

திருப்பனந்தாள் .. 612504
(தஞ்சை மாவட்டம்)
தேதி 23. 03. 1990

# திருப்பனந்தாள் கயிலை மாமுனிவர் அருள் ஆசி

## 1990 இல்

தெஹிவலை, (இலங்கை) திரு. கே. கே. சுப்பிரமணியம் அவர்கட்குச் செந்திலாண்டவன் திருவருள் முன்னிற்க.

காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஈடுபாடு கொண்டு, தக்க பணிகளையாற்றிய தாங்கள், 'திண்ணபுர அந்தாதி' வெளியீட்டை விமரிசையாக நிகழ்த்தி, ஒல்லுமாற்றான் எல்லாம் உதவியிருப்பதறிந்து மிக்க மகிழ்ச்சி.

'செந்தமிழ்' என்ற சொல்லைக் கேட்டுச் செவிவழித் தேன் மாநதியதாக உவந்த கவியுள்ளங்களைப் பெற்றதால் சீரிளமைத் திறம் மிக்க செந்தமிழ் தன்னகத்து நவில்தொறும் நயமிக்க நூல்களைப் பெற்றுள்ளது. அந்நிரலுட்படும் நூல்களில் ஒன்றான *'திண்ணபுர அந்தாதி'* வெளியீடு சிறந்திடப் பல்லாற்றானும் பிரம்மஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்கட்கு உறுதுணையாக இருந்த தாங்கள் இத்தகு நற்பணிகளை மேன்மேலும் ஆற்றிப் புகழ் மிகுத்து நலம் நிறை வாழ்வு வாழச் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சுபம்.

சிவ சிவ

**Mr. K. K. Subramaniam,**
28, Ratnakara Place,
DEHIWELA, SRI LANKA.

நல்லை ஆதீனம்
குருமகா சந்நிதானம்

# அருளாசிச் செய்தி

**2வது குருமஹா சந்நிதானம்**
***ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள் நல்லை ஆதீனம்***

*அன்புசார் பெருந்தகையீர்!*

தனித்துவமான ஆலயமான ஈழத்துச் சிதம்பரத்தின் குருவாக விளங்கிய சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்களின் மகனாகிய சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் அடக்கம், அறிவு, பண்பு, சீலம், சொற்பிறழாமை, நேர்மை அனைத்துக்கும் எடுத்துக்காட்டாக வாழ்பவர். அவரது சேவை காரைநகர் மக்களுக்கு மட்டுமன்றி அனைத்து மக்களுக்கும் பயனுடையதாகின்றது. அந்தணருக்கு உரிய ஆறு கடமைகளைக் கொண்டு எளிமைக்கு உரியவராக வாழ்ந்து வழிகாட்டிக் கொண்டிருக்கும் இவருடைய வாழ்க்கை எல்லோரையும் சிந்தித்துச் செயற்பட வைக்கின்றது. ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்தில் வளர்ச்சிக்குப் பல்லாண்டுகளாக உழைத்துக் கொண்டிருக்கும் குருக்கள் பல நூல்களை வெளியிட்டு நூல் களஞ்சியங்களை உருவாக்கி எல்லோரையும் நன்மனிதராக வாழ வழி சமைப்பது மனநிறைவைத் தருகின்றது. இவரது பணி தொடர்வதற்கு இறைவனை வேண்டுகின்றோம். இவரது பணியைக் கௌரவிக்கும் எங்கள் ஆதினத்துடன் பல்லாண்டு தொடர்பு உள்ள கலாரசிகமணி திரு. கே. கே. சுப்பிரமணியம் அவர்களை வாழ்த்துகின்றோம். சிவஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்கள் குடும்பத்தினரையும் இறைவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

*வாழ்க வளமுடன்*
*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

உ

*திண்ணபுரம் ஈழத்துச்*

*சிதம்பரப் பெருமான் துணை.*

# அருளாசி

*பிரதிஷ்டா குரு சிவாச்சாரிய சக்கரவர்த்தி சிவஸ்ரீ*

சாமி. விஸ்வநாதக் குருக்கள்

*(நவாலியூர்)*

*வெள்ளவத்தை.கொழும்பு.*

சகல பாடல் பெற்ற ஸ்தலங்களைத் தன்னகத்தே கொண்ட இலங்காபுரியில் வடபால் அமைந்த யாழ் நகரில் மேற்குத் திசையில் சமுத்திரக் கரையில் அமைந்த ஆலயம் ஈழத்துச் சிதம்பரம் ஆகும்.

இந்த மகிமை பொருந்திய திருத்தலத்தில் வேத சிவாகம மரபில் உத்தரகோச மங்கையாகிய தென்னாட்டில் இருந்து வந்த குரு பரம்பரையராகிய பிரம்மஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்கள் அவர்கள் சிவாசாரியராக ஈழத்துச் சிதம்பரம் (காரைநகர்) சிவன் ஆலயப் பிரதம குருவாக இருந்து சைவ சமய ஆசார அனுஷ்டான ஆன்மார்த்த பரார்த்த வழிபாடுகளை வழுவாமற் செய்து வைத்த உத்தம குருவாக மதிக்கப்பட்டு ஆலய நித்திய நைமித்தியக் கிரியைகளை வழிநடத்திய பெருமைக் குரியவர். இவர் மூத்த புதல்வன் மங்களேஸ்வரக் குருக்கள் (தியாகராஜக் குருக்கள்). இளைய குமாரன் வைத்தீஸ்வரக் குருக்கள். இவர்கள் இருவரும் தந்தை எவ்வழி மைந்தரும் அவ்வழி என அமைந்த உத்தம சிவாசார்யர்களாகவும், சிதம்பரப் பெருமானின் திருவருள் கருணை பெற்ற அருள்

ஞானியாகவும், பக்தப் பெருமக்களிடம் கருணை, அன்பு, பரிவு, உபதேசம் செய்யும் திறன் கொண்ட உத்தமர்களாகவும் காரைநகர் வாழ் பெருங்குடி சைவப் பெருமக்களின் மதிப்புக்கு உரியவர்களாகவும் விளங்கினர். வைத்தீஸ்வரக் குருக்கள் மணிவாசகர் சபை, சைவதமிழ் மலர்ச்சிக் கழகம் போன்ற சபைகளுக்கு அரிய தொண்டுகளைச் செய்தும், திண்ணபுர அந்தாதியை ஆக்கியும், ஈழத்துச் சிதம்பர புராணத்தை நூலாக்கும் பணியிலும், நவாலியூர் சோமசுந்தரப் புலவர் இளமுருகனாரிடம் சென்று இந்தப் புராணத்தை வெளியிட்டது அரும் பெரும் முயற்சியாகும். இத்துடன் திருவெம்பாவை பத்துத் தினங்களிலும் தென்னாட்டி லிருந்தும் பிரபல சமய சொற்பொழிவாளர்களை வரவழைத்து சமயத் தொண்டில் முன்னின்று நடத்திய பெருமைக்குரியவர். உடல் நலம் குன்றி இருந்தும் நாம் நடத்திய மகா கும்பாபிஷேகத்தில் நடக்க வேண்டிய கிரியைகள் சிறக்க பலவகையில் கண்ணும் கருத்துமாகப் பாடுபட்டார்கள்.

எனவே அவரின் 85வது வயது நிறைவை ஒட்டி எம் ஆசிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

*ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன்கோயில் மணிவாசகர் மடலாய அன்னதான சபை பவள விழாவை 30. 12. 2001 சிறப்பாக கொண்டாடியது*

அலுவலகம் / Office
248, 2/1, காலி வீதி, கொழும்பு-04.
248, 2/1, Galle Road, Colombo-04.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்
MINISTER OF HINDU RELIGIOUS AFFAIRS
தியாகராசா மகேஸ்வரன் பா. உ.
Thiyagaraja Maheswaran M. P.

இல்லம் / Residence
110/3, விஜேராம மாவத்தை, கொழும்பு-07.
110/3, Wijarama Mawatha, Colombo-07.

தொலைபேசி / Telephone
அலுவலகம் / Office 554801, 554802
தொலைநகல் / Fax 554803
இல்லம் / Residence 580953
தொலைநகல் / Fax 580953


சிவமயம்

# கௌரவ இந்து கலாச்சார அமைச்சர் திரு. தி. மகேஸ்வரன் அவர்களின் வாழ்த்துரை

புண்ணிய பூமியாகிய காரைநகரில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானுக்குப் பூசைகள், விழாக்கள் ஆசாரமாகவும் விதிமுறைப்படியும் நடாத்தி வரும் பரம்பரை சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்கள் பரம்பரை. அப்படியான பரம்பரையில் அவதரித்தவர்தான் மூதறிஞர் சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்கள். தமிழுக்கும் சைவத்திற்கும் சிறப்பாக எம் ஈழத்துச் சிதம்பர திருக்கோவிலுக்குச் செய்து வரும் தொண்டுகள் பல. இவரது 85வது அகவை ஒட்டி அவரின் அளப்பரிய சேவையைச் சைவ உலகிற்குப் பறைசாற்றும் வகையில் "திருத்தொண்டு பரவும் மலர்" வெளிவருவதை வரவேற்று மனசார வாழ்த்துகிறேன்.

இம்மலரை வெளியிடக் காரண கர்த்தாவாக இருக்கும் என் தாய் மாமனாரும் நாடறிந்த சைவ சமூகத் தொண்டருமான திரு. கே. கே. சுப்பிரமணியம் அவர்கள் எங்கள் மூதாதையர் செய்த சமயத் தொண்டைத் இத் திருத்தலத்திற்கும் சிவாச்சாரியார்களுக்கும் 60 ஆண்டுகளாகச் செய்து வருகின்றார்கள். இதனால் அடியேனும் பல அளப்பரிய தொண்டுகள் மாமனாரைப்

பின்பற்றிச் செய்து வருகின்றேன். மாமா அவர்கள் பல ஆண்டுகள் அரச உயர் பதவிகள் வகித்தும், மார்கழித் திருவாதிரைத் தேர் உற்சவத்திற்குச் செவ்வந்திப் பூக்கள், தலை சிறந்த நாதஸ்வரத் தவில் வித்துவான்களையும், பாரத நாட்டில் இருந்து சிறந்த பேச்சாளர்களையும் வரவழைப்பார்கள். எங்கள் குருக்கள் ஐயாவின் ஆலோசனையைப் பெற்று அதன்படி ஒழுகுவார்.

எங்கள் சிவத்தமிழ் வித்தகர் ஐயாவின் சேவையை யானும் பல ஆண்டுகளாக நன்கு அறிவேன். ஆலய திருப்பணிச் வேலை, மணிவாசகர் சபை, மாணிக்க மடாலய அன்னதானச் சபைகள் போன்றன சிறந்த திருத்தொண்டுகளைச் செய்யும் எம் ஈழத்துச் சிதம்பர கோவில் இன்று சிறப்பாக உள்ளது. மக்களும் சிறப்பாக உள்ளார்கள். எங்கள் மாமா இத் தெய்வீக மணம் கமழும் "திருத்தொண்டு மலரை" பதிப்பு ஆசிரியராக இருந்து சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிடுவதைப் பாராட்டி, வாழ்த்துகிறேன்.

30. 03. 2002 சனிக்கிழமை என் தலைமையில் எங்கள் குல தெய்வமான காரைநகர் மணற்காடு, முத்துமாரியம்மன் ஆலய வசந்த மண்டபத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க இரண்டாம் நாள் மகோற்சவத் தினத்தன்று பல சமயப் பெரியார்கள், அரச உயர் அதிகாரிகள், வர்த்தகப் பெருமக்கள், சமய, சமூகத் தொண்டர்கள் போன்றோர்கள் முன்னிலையில் வெளியிட இருப்பது அம்பிகையின் திருவருள். குருக்கள் ஐயாவின் ஆசிகள் எப்பொழுதும் எங்களுக்கு உண்டு.

*வாழ்க வாழ்க*

*தி. மகேஸ்வரன் (பா.உ.)*
*அமைச்சர்*
*இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு*
*இல. 248 2/1, காலி வீதி, கொழும்பு - 04*

குருக்கள் ஐயாவுக்கு நடராஜப் பெருமான் 1970இல் கனவில் தோன்றி அன்னை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு "சிவத்தமிழ்ச் செல்வி" என்ற பட்டம் வழங்குமாறு அருளினார்.



# சிவத்தமிழ் செல்வியின் ஆசி !

*கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, **J.P.***
*தலைவர்*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்*
*தெல்லிப்பழை, இலங்கை.*

*" அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்*
*செந்தண்மை பூண்டொழுக லான்"*

என்று பாடியருளினார் வள்ளுவப் பெருமான். அறப்பணியிலும் ஆன்மீகப் பணியிலும் சிவனை நினைந்து உருகும் சிந்தையிலும் தன்னிகரில்லாதவர் குருக்கள் ஐயா அவர்கள். இப் பெரியாருடைய காலத்திலே ஈழத்துச் சிதம்பரம் ஓங்கி உயர்ந்து மிளிர்கிறது என்பது முற்றிலும் உண்மை. அதுவுமன்றி எம்மைப் போன்ற பலரை அங்கு அழைத்துச் சொற்பொழிவுகள் ஆற்ற வைத்துக் கௌரவித்த சிறப்பும் ஐயா அவர்களுக்கு உண்டு.

உயர்ந்த பக்தியும், நிறைந்த புலமையும், ஒழுக்க சீலமும் ஒன்றாகப் பெற்றவர் குருக்கள் ஐயா அவர்கள். இதனைக் கடந்த ஐம்பது ஆண்டுகளாக நான் நன்கு அறிவேன். காரைநகர் மண்ணுக்குப் பக்தி வித்தை விதைத்து உரமூட்டியவர் இவர். ஆசிரியராக இருந்து அதிபராக உயர்ந்து ஆன்மீகப் பேராளராக வளர்ச்சி கண்ட பெருமை இவருக்கு உண்டு. ஐயா அவர்களுடைய ஆழ்ந்த நுண்ணிய கருத்துக்கள் இடம்பெறாத பத்திரிகைகளோ சஞ்சிகைகளோ இந் நாட்டில் இல்லை என்றே கூறலாம்.

ஈழத்துச் சிதம்பரத்திலே இடம்பெற்ற அத்தனை நிகழ்வுகளிலும் அறங்காவலர்களையும் மணிவாசகர் சபையினர்களையும் தனது சொல்லாலும் செயலாலும் ஊக்குவித்த பெருமை இவருக்கு உண்டு. ஆண்டு தோறும் மார்கழி மாதத்தில் திருவெம்பாவை காலத்தில் இடம்பெறும் மணிவாசகர் விழாவிலே இவருடைய ஆளுமையையும் ஆற்றலையும் கால் நூற்றாண்டு காலமாக நான் நேரில் கண்டு பெருமிதம் அடைந்தேன். **1970**ஆம் ஆண்டு *'சிவத்தமிழ்ச் செல்வி'* என்ற பட்டத்தை சுந்தரேசப் பெருமானின் வாக்குப் போல் எனக்கு எடுத்து வழங்கியவர் இவர். அன்றைய விழாவின் எழுச்சியைக் காரைநகர் சிவன் கோயில் முன்றிலிலே கண்டு இறும்பூது எய்திய மகிழ்ச்சி என்றும் நினைவு கூரத்தக்கது. அந்த ஆண்டு ஈழத்துச் சிதம்பரத்திலே குடமுழுக்கு நடந்த ஆண்டாகும். உலகெங்கணும் செறிந்து வாழும் காரைநகர் மக்கள் அவ்விழாவுக்கு வருகை தந்திருந்தனர். இந்த வருகையின் காரணமாகவே நான் மலேசியா, சிங்கப்பூருக்குச் சொற்பொழிவு செய்வதற்கு அழைக்கப்பட்டேன். இந் நிகழ்வுகள் என் வாழ்நாளில் என்றும் பசுமையாயகவே பதிந்துள்ளன. இதற்கு முக்கிய காரணமாக அமைந்தனர் சிவத்திரு வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா என்பதை எடுத்துக் கூறுவதில் நான் மேலும் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

22. 09. 2001 கனடாவில் நற்பணியாற்றிவரும் 'சைவ சித்தாந்த மன்றம்' குருக்கள் ஐயாவின் பணிகளைப் பாராட்டியது வரவேற்கத்தக்கதாகும். கனடா மாத்திரமல்ல; உலகம் முழுவதும் ஐயாவின்

பணிகளைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. எண்பத்தைந்து வயது எய்த இருக்கும் இப் பெரியாரை, சைவத்தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் பாராட்டக் கடமைப்பட்டவர்கள் என்பதை நினைவில் இருத்தி, ஐயா அவர்களின் திருவடிகளை வணங்கி இம் மலரை தொகுத்து வெளியிடும் என் உடன் பிறவா சகோதரனையும் வாழ்த்துகின்றோம்.

குறிப்பு:

*கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P. அவர்களின் 77வது பிறந்த நாள் அறக்கொடை விழாவும் சிவத்தமிழ்ச் செல்வி சைவத் தமிழ் ஆய்வு நூலகத் திறப்புவிழாவும் 07. 01. 2002 சிறப்பாக நடந்தது.*

பேரறிஞர் வைத்தீஸ்வரக் குருக்களின் அருளாசியுடன்

*மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலயத் தேர்முட்டி வேலைகள் பூர்த்தியாகி சித்திரத்தேர் சிறப்பாக நடைபெறுகின்றது. அம்பிகையின் திருக்குள வேலைகளும் சிறப்பாக நடைபெறுகிறது. பதினைந்து நாள் மகோற்சவத் தினங்களில் அன்னதானம் வழங்கி வருகிறார்கள்.*

# முத்தமிழ் போல் பல்லாண்டு வாழி! வாழி!

அருட்கவி சீ. விநாசித்தம்பி
*(தலைவர், இந்து சமயப் பேரவை)*

கலைமலரும் நிதிமலரும் சிவானந்தத் தேன்மலரும்
காரைநகர் மலரநின்ற
மலைமலரும் ஈழத்துச் சிதம்பரப் பெருமானின்
மலரடி பிடித்த வள்ளல்,
தலைமலரும் மறைமலரும் சைவ விதிமுறை மலரத்
தந்த கண பதீஸ்வ ரக்குரு
நிலைமலரும் மைந்தனாம் வைதீஸ்வ ரக்குருக்கள்
நீடூழி வாழி! வாழி!

அருளாளன் ஆதிசதுர் மறையாளன் அன்புவளர்
அறிவறிந்து தெளிந்த இன்பப்
பொருளாளன், பிறையாளன், பணியாளன், தெய்விகப்
புண்ணியச் சிந்தனையாளன்
தெருளாளன், ஆசிரியத் திறலாளன், தவமிக்க
சீராளன், வாய்மை தாங்கும்
திருவாளன், வேதாந்த சித்தாந்த பாஸ்கர
சிவ வைத்தீஸ்வரக் குருக்கள்.

புன்முறுவல் பூத்தமுகம் பொலிநீறு பூத்தநுதல்
புராண திரு முறை பேசும்வாய்
அன்பருவி பாயும் மனம் அணிந்தபூ ணூல் தாங்கும்
ஆகமச் சுருதிப் பண்பு
பொன்பெருகு கொடைக்கரம் தளராத செயல் நலம்
பூசை வழுவாத வாழ்க்கை
என்பன சிறந்த வைத் தீஸ்வரக் குருக்கள் உயர்
இமய மென வாழி! வாழி!!

# ஈழத்தில் பிறக்க வேண்டும்

*பேராசிரியர்*
*முனைவர் இரா. செல்வக்கணபதி*
*மயிலாடுதுறை, தமிழ்நாடு.*

*"அரிது அரிது மானிடர் ஆதல் அரிது"*

என்பது மூத்தோர் வார்த்தை. மானிடப் பிறவியிலும், சைவமாம் சமயம் சாருதல் அதனிலும் அரிது. சைவசமயத்தில் பிறந்தாலும், தமிழால் இறைவன் திருமேனி தீண்டிப் பூசிக்கும் சைவ ஆசாரியர் குலத்தில் பிறத்தல் பூர்வ புண்ணியப் பேற்றாலேயே அமையும்.

சேக்கிழார் பெருமான் தம் பெரியபுராணப் பகுதியில், தடுத்தாட்கொண்ட புராணத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் குலமரபு பேசவந்தவிடத்து, "மாதொரு பாகனாருக்கு வழிவழி அடிமை செய்யும் வேதியர் குலம்" என்று சைவ ஆசாரிய மரபினைப் புகழ்ந்துரைக்கின்றார்.

உலகில் பலரும், மாமன்னர்களும், குருநில வேந்தர்களும், பெருஞ் செல்வர்களும் சைவத்தையும், சிவாலயங்களையும் பாதுகாத்து நின்றதாகக் கூறக் கேட்கின்றோம். உண்மையில் வறுமையில் வாடியபோதும், போர் மேகங்கள் சூழ்ந்தபோதும், பிற மதத்தார் படையெடுப்புக்களால் நாசம் வந்துற்ற போதும், மனம் தளராது சிவாலயங்களையும், இறையவர் திருமேனிகளையும், தங்கள் கண்களின் மணிகளாகக் காத்து நின்ற செம்மாப்பு உடையவர்கள் சைவ ஆசாரியப்

பெருமக்களே ஆவர். தமிழர்களும் சைவப் பெருமக்களும் கைகூப்பி வணங்க வேண்டியது அன்னார் திருவடிகளையே என்பது சத்தியத்திலும் சத்தியமாகும்.

காரைநகர் மணிவாசகர் சபையின் காப்பாளரும், கனடா சைவசித்தாந்த மன்றத்தின் புரவலரும், "அன்பு நெறி" என்ற இதழின் சிறப்பாசிரியரும், காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் நிறுவனருமாகிய பண்டிதமணி சிவத்திரு க. வைத்தீஸ்வரக் குருக்கள் பன்னூறு விழுதுகளுடன் வேர்விட்டு எழுந்து நிற்கும் ஓர் ஆலமரமாகத் திகழ்பவர்.

பணநாட்டம் சிறிதும் இன்றித் தம் 85 ஆவது அகவையிலும் "செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே" என்ற சிந்தை நிறைவோடு வறுமை வாழ்க்கையில் மகிழ்ந்திருக்கும் மாமனிதர்.

1982 இல் நடைபெற்ற காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் மணிவாசகர் மன்ற வெள்ளிவிழா நிகழ்ச்சிக்கு தலைமைவகிக்க நானும், என் துணைவியார் திருமதி சந்திரா செல்வக்கணபதி அவர்களும் ஐயா அவர்களால் அழைக்கப்பட்டோம். அங்கே தங்கியிருந்த நாள்களில் குருக்கள் ஐயா அவர்களின் அன்பிலும், அரவணைப்பிலும் சிறு குழந்தைகள் போல் மகிழ்ந்திருந்தோம். அவர்களின் அன்பையும் பண்பையும் வேதாகமக் கல்விப் பெருமிதத்தையும், நியமம் தவறாத பூசைச் சிறப்புக்களையும் அருகிலிருந்து கண்டு அகம்

மகிழ்ந்தோம். நட்பைப் போற்றும் பண்பாளராகிய ஐயா அவர்கள் கடந்த 19 ஆண்டுகளில் இடையறாது கடித வழியும், அன்பர்கள் வழியும் என் தொடர்பைப் போற்றிப் புதுப்பித்து வந்துள்ளார்கள்.

எண்பத்து ஐந்து அகவை நிறையும் ஐயா அவர்கள் நூறு ஆண்டுகள் வாழ்ந்து சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றி மகிழ வேண்டும் என்று அன்னை சிவகாமி உடனமர் தில்லைபுரத் திருக்கூத்தன் திருந்தாள் மலர்களை வந்தித்து வாழ்த்துகின்றேன்.

மீண்டும் ஒரு பிறப்பு அமையுமாயில் அப்போதும் எங்கள் மதிப்புக்குரிய குருக்கள் ஐயா அவர்கள் ஈழத்தில், தமிழ் மரபில், சைவம் வளர்க்கும் குலமரபில் அவதரித்து, தமிழ்ச் சைவத்தை ஈடேற்ற சிவபெருமான் கருணை பாலிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

*காரைநகர் மணிவாசகர் சபை 40 வருடங்களாக சமய பாடப் பரீட்சை நடாத்தி வருவதும் பரீட்சைச் செயலாளராக மூதறிஞர் கடமையாற்றி வருவதும் பாராட்டுக்குரியது. சைவமக்களாகிய நாங்கள் மணிவாசகர் சபைக்கு பரிசில்கள், பண உதவி செய்வோமாக.*

# மனிதருள் மாணிக்கம்

அருள் மொழி அரசி, வித்துவான்

திருமதி வசந்தா வைத்தியநாதன் ஜே. பி.

*கரிய மாலினும் கண்ணுதலானினும்*
*உரிய தாமரைமேல் உறைவானிலும்*
*விரியும் பூ தம் ஓர் ஐந்திலும் மெய்யினும்*
*பெரியர் அந்தணர், பேணுதி உள்ளத்தால்.*

மும்மூர்த்திகளினும், உலகத் தோற்றத்திற்குக் காரணமான பஞ்ச பூதங்களினும் சிறந்தவர் அந்தணர்கள் என்பது கவிச்சக்கரவர்த்தி கம்பனின் பதிவு. வாய்மை, ஒழுக்கம், கருணை, ஒப்புரவு நிரம்பிய மறையவர்கள் இருப்பதால்தான் மழையே பொழிகின்றது.

*வேதம் ஓதும் வேதியர்க்கோர் மழை*
*நீதி நின்றிடும் மன்னவர்க்கோர் மழை*
*மங்கை மாதர் கற்பினுக்கோர் மழை*

என்று திங்கள் மும்மாரி பெய்து வையகம் வளம் சிறக்கும். சம்பந்தக் குழந்தையும்

*வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்*
*வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக*
*ஆழ்க தீயதெல் லாம் அரன் நாமமே*
*சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.*

வையகம் துயர்தீர வைதிகர் வாழ வேண்டும் என்று உறுதிபடக் கூறுகின்றது.

சிவஸ்ரீ குருக்கள் அவர்களது ஆழ்ந்த புலமை பாராட்டப்பட வேண்டியது. பழைய நூல்களில் அவர் கொண்டிருக்கும் ஈடுபாடு போற்றத்தக்கது. காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆணிவேராக விளங்கியவர் சிவத்திரு. குருக்கள் அவர்கள். ஈழத்துச் சிதம்பர புராணத்தைப் பண்டிதர் இளமுருகனார், பண்டிதை பரமேஸ்வரி ஆகிய இருவராலும் ஆக்கமும் உரை விளக்கமும் செவ்விக்கப்பெற்று அச்சேற்றி உலாவரச் செய்த பெருமை குருக்கள் அவர்களையே சாரும். அதே போல இருபாலைச் சேனாதிராச முதலியாரின் மாணவரும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் காலத்தவருமான திரு. கார்த்திகேயப் புலவர் எழுதிய திண்ணபுர அந்தாதிக்குத் தக்காரைக் கொண்டு உரை விளக்கம் காணவேண்டும் என்ற பேராவல் உந்த தருமையாதீன வித்துவான் செஞ்சொற் கொண்டல் தமிழாகரர் திருமுறைமணி அமரர் டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன் அவர்களைக் கொண்டு ஆழ்ந்து அகன்ற செவ்விய உரை விளக்கத்தை வெளியிட்ட அரிய முயற்சியாளர். தெய்வப் பணியல்லாது வேறு பணியறியாத் தகைமையாளர். தூய அன்பினால் அனைவரையும் வசமாக்கும் இப் பெரியார் பல்லாண்டு பல்லாண்டு சிறந்து வாழ்ந்து தமிழிற்கும் சைவத்திற்கும் மேலும் பல ஆக்கப்பணிகளைப் புரிந்து வாழ, ஸ்ரீ சௌந்திரநாயகி உடனுறை ஸ்ரீ சுந்தரேஸ்வரப் பெருமான் திருவருள் பாலிக்க இறைஞ்சி வணங்குகின்றேன்.

நலமே நிறைக!!!

செஞ்சொற்கொண்டல், தமிழாகரர், திருமுறை உரைமணி இடம் மயிலாடுதுறை
டாக்டர். சொ. சிங்காரவேலன், எம். ஏ., பிஎச், டி.,
அ. வ. அ. கல்லூரி, மயிலாடுதுறை. நாள் 23. 03. 90

# தர்மபுர ஆதீனப் புலவர் செஞ்சொற் கொண்டல் அமரர் சொ. சிங்காரவேலன் 1990இல் வழங்கிய மடல்

வணத்திற்குரியீர்!

வணக்கம். நலம் இருபாலும். தங்கள் கடிதங்கள் யாவும் முறையே கிடைத்தன. கட்டுரை வேண்டி எழுதிய கடிதமும், பிறகு விழா அழைப்பிதழும், விழா நிகழ்ந்து முடிந்த விவரம் காட்டும் தினகரன், வீரகேசரி ஆகியவற்றின் விவரங்களும், திண்ணபுர அந்தாதி – ஒரு கண்ணோட்டம் பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் கட்டுரை ஆகியனவும் கிடைக்கப் பெற்று விவரமறிந்தேன். பெருமகிழ்ச்சி அடைந்தேன். இந்த நூல் வெளியீட்டின் பொருட்டுத் தாங்கள் மேற்கொண்ட முயற்சிகள், சிரமங்கள் எல்லாம் என் நினைவில் எழுகின்றன. நான் எவ்வாறு தங்களுக்கு நன்றி கூறுவதென்று அறியாது திகைத்து நிற்கின்றேன். திரு. கே. கே. சுப்பிரமணியம் அவர்களுக்கும் பிற அன்பர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பத்திரிகைகள் காட்டிய ஒத்துழைப்பும் ஊக்கமும் வியந்து போற்றுதற்குரியன. திண்ணபுரத்திறைவன் மீது தாங்கள் கொண்டுள்ள ஆழ்ந்த பக்தியின் விளைவே சொல்லாக மலர்ந்துள்ளன என்றால் அது மிகையன்று. அண்மையில்

திருப்பனந்தாள் சென்று ஸ்ரீ காசிமடம் சுவாமிகளைத் தரிசித்த போது தங்கள் முயற்சி பற்றியும் பேசி மகிழ்ந்தேன். தாங்கள் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து எழுதி மகிழ்ந் திருப்பீர்கள் என்று நம்புகின்றேன்.

திண்ணபுர அந்தாதி வெளியீட்டு மலர் அனுப்புவதாக எழுதியிருக்கிறீர்கள். மகிழ்ச்சி. இத்துடன் "திருமுறை – சாத்திர விளக்கம்" என்ற கட்டுரையை அனுப்பியிருக்கிறேன். காரைநகர் மணிவாசகர் சபை பொன்விழா மலருக்கு இதனைத் தந்து வெளியிடச் செய்யலாம். இங்கும் பல்வேறு கடமைப் பொறுப்புகளால் கட்டுரை எழுதுவதிலும் கடிதம் எழுதுவதிலும் தாமதம் ஏற்பட்டது. மன்னித்தருள்க.

தங்களுக்கு இந்த முதுமையில் தமிழ்த் தொண்டும் சிவத்தொண்டும் ஆற்ற இறைவன் அருளியுள்ள உற்சாகமும் தெம்பும் தொடரட்டும்.

ஸ்ரீ கைலாசநாதக் குருக்களின் கட்டுரையைக் "குமரகுருபரன்" இதழில் வெளியிடச் செய்வேன். கலாநிதி கா. கைலாசநாதக் குருக்களுக்கு என் தனிப்பட்ட நன்றியைத் தெரிவித்தருள்க. எத்துணை அழகுற விரிவாக எழுதியுள்ளார்; கார்த்திகேயப் புலவரின் கவிதைக்கு – நாவலர் பரம்பரைக்கு – அஞ்சலிக் காணிக்கை அன்னார் கட்டுரை. தாங்கள் என்பாற் கொண்டுள்ள அன்பை எழுமையினும் மறவேன்.

அன்பன்

சொ. சிங்காரவேலன்

# நூறாண்டு காணும் கலாநிதி தியாகராஜ மகா வித்தியாலயம்

*க. வைத்தீசுவரக் குருக்கள்*
*தமிழ் வளர்ச்சிக் கழகம்*
*காரைநகர்.*

*(06.05.1990 இல் வாரமுரசொலியில் எழுதிய கட்டுரை)*

சைவப் பிள்ளைகள் சைவப் பாடசாலையிலே கற்றல் வேண்டும் என்பது அந்நாள்களில் நாவலரின் முழக்கமாக இருந்து வந்தது. அவர் 1884ஆம் ஆண்டு வண்ணார்பண்ணையில் ஒரு சைவப் பாடசாலையை ஆரம்பித்தார். நாவலரின் முழக்கம் சைவர்களாக வாழத் துடித்துக் கொண்டிருந்த தமிழர்களைச் சிந்திக்க வைத்தது. எனவே அவர்களுட் சிலரால் சைவப் பாடசாலைகள் ஆங்காங்கே நிறுவப்பட்டன.

நாவலர் மறைந்த பின்பும் எங்கும் பதிந்திருந்த அவரது முழக்கத்தின் நாத அலைகளால் ஈர்த்துச் செல்லப்பட்டவர்களுள் முன்னிலையில் நின்றவர், காரைநகர் மடந்தை செய்த தவம் வாய்த்ததென வந்த திரு. ச. அருணாசலம் அவர்கள் ஆவர். நாவலரின் தமையனாரது மகனாகிய திரு. த. கைலாசபிள்ளை அவர்களால், 'அவர்களுக்குப் பின் அருணாசலம்', 'அவர்கள்' என்றது இங்கே 'நாவலர் அவர்களை' இந்த அருணாசலத்தின் ஆலோசனைப்படி, காரைநகர் மாப்பாணபூரியைச் சேர்ந்த திரு. கந்தப்பர் இலட்சுமணபிள்ளை அவர்களதும், அவ்விடத்துக்குத்

தெற்கே வசித்த திரு. சிதம்பரப்பிள்ளை கந்தப்பு அவர்களதும் திரு. கோவிந்தபிள்ளை அவர்களதும் உதவியுடன் திரு. கோவிந்தபிள்ளை அவர்களின் சொந்த நிலத்தில் 1888 ஆம் ஆண்டு ஆவணித் திங்களில், பெரியார் திரு. முத்து சயம்பு அவர்களால் ஒரு கிடுகுக் கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்டதுதான் காரைநகர் இந்து ஆங்கில வித்தியாசாலை. இவ்வித்தியாசாலை சைவ கலாசாரத்திற்கு ஒவ்வாத பழக்கவழக்கங்கள், நடைமுறைகள், நாகரிகம் என்பவற்றை முற்றாக அழித்தொழித்து சைவ கலாசாரத்தை மேலோங்கச் செய்யும் ஆற்றல் மிக்க மாணவர்களை உருவாக்கும் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருந்து வந்ததனால் அவர்கள், வித்தியாசாலையை ஒரு வரப்பிரசாதமாகக் கருதியதில் வியப்பேதுமில்லை. காலக்கிரமத்தில், இவ்வித்தியா சாலை திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் ஆங்கில வித்தியாசாலை என்ற பெயரைப் பெற்று விளங்கியது.

## சயம்பு உபாத்தியாயர்

இவ்வித்தியாசாலையில் பெரியார் சயம்பு ஆசிரியராக இருந்து பணிபுரியத் தொடங்கினார். அவர் தாம் வேறு வித்தியாசாலை வேறு என்று கருதி னாரல்லர். சயம்பு உபாத்தியாயரே வித்தியாசாலை, வித்தியாசாலையே சயம்பு உபாத்தியாயர் என்ற நிலையே இருந்து வந்தது. அவர், வித்தியாசாலையுடன் அத்துவிதமுற்றிருந்தார் என்று கூறுவது சிறிதும் மிகையாகாது.

வித்தியாசாலை நாளுக்கு நாள் முன்னேறி வருவதையுணர்ந்த அன்பர்கள் ஒரு மண்டபத்தையும் இரண்டு அறைகளையும் பாடசாலைக்கென அமைத்துக் கொடுத்தனர். இவற்றை யாழ்ப்பாண அரசாங்க அதிபராக இருந்த திரு. துவைனம் அவர்கள் 1905 ஆம் ஆண்டு திறந்து வைத்தார்கள்.

காலஞ் செல்லச்செல்ல மாணவர்களின் தொகையும் கூடிக்கொண்டே வந்தது, வெளியூர் மாணவர்களும் வந்து கற்கத் தொடங்கினர். வகுப்புக்களும் அதிகரித்து விட்டன. வித்தியாசாலை மனேஜராக திரு. வி. காசிப்பிள்ளை அவர்கள் நியமிக்கப்பட பெரியார் மு. சயம்பு அவர்கள் உள்ளூர் மனேஜராகவும், ஆசிரியராகவும் இருந்து வந்தார்கள்.

1911 ஆம் ஆண்டு பிரம்மசிறி ஈ. கே. சிவசுப்பிரமணிய ஐயர் பி. ஏ. அவர்கள் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து, சயம்பு உபாத்தியாயரின் உத்தம மாணவரும், பின்னர் பிரபல சட்டத்தரணியுமாக விளங்கிய திரு. ஐ. வ. குலசிங்கம் உபாத்தியாரின் மற்றொரு சிறந்த மாணவரும், பின்னர் எவ். ஆர். ஏ. எஸ். பட்டம் பெற்றவருமான பிரம்மசிறி கா. சீ. மஹேசசர்மா என்போர் உட்பட நால்வர் உதவி ஆசிரியராக நியமிக்கப்பட்டனர். பாடசாலையின் கல்வித்தரம் மேலோங்கி வருதலையும், அதன் இன்றியமையா மையையும் அறிந்த அரசினர் 1912 ஆம் ஆண்டு பாடசாலையைப் பதிவு செய்து உதவி நன்கொடை வழங்க முன்வந்தனர்.

## வெள்ளிவிழா

பாடசாலை மாணவர்கள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் மேம்பாடுற்று விளங்குவதைக் கண்ட ஆசிரியர்களும் பெற்றோரும் பெருமகிழ்ச்சியடைந்து மனேஜர் திரு. வி. காசிப்பிள்ளை அவர்கள் தலைமையில் 07. 09. 1912 ஆம் திகதி இப்பாடசாலையின் இருபத்தைந்தாம் ஆண்டு ஆரம்ப விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடினர். பிரம்மசிறி ஈ. கே. சிவசுப்பிரமணிய ஐயர் பி. ஏ. அவர்களைத் தொடர்ந்து, முறையே, பிரம்மசிறி எஸ். இராமகிருஷ்ண ஐயர் பி. ஏ. அவர்களும், திரு. பொ. வேலுப்பிள்ளை அவர்களும் தலைமை ஆசிரியராக இருந்து பணியாற்றி வந்தனர்.

பெரியார் சயம்பு அவர்கள் முதுமையை நெருங்கிக் கொண்டிருந்தனர். தாம் பிள்ளைபோல பாவித்துப் பாதுகாத்து வந்த பாடசாலையை ஒரு நல்ல சபையினரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற எண்ணம் அவர் மனத்தை உறுத்தி கொண்டது. எனவே, 1918 ஆம் ஆண்டு பாட்சாலையின் நிருவாகப் பொறுப்பை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பரிபாலன சபையிடம் ஒப்படைத்தார். எனினும் சபையாரின் விருப்பப்படி அவரே உள்ளூர் மனேஜராகத் தொடர்ந்து பணிபுரிந்து வந்தார்.

திரு. பொ. வேலுப்பிள்ளை அவர்களைத் தொடர்ந்து முறையே திரு. ந. கந்தையா, பிரம்மஸ்ரீ எஸ். சீதாராமஐயர், திரு. அ. சரவணமுத்து, திரு. கே. எஸ். இராசரத்தினம் என்போர் தலைமை ஆசிரியர்களாகப் பணியாற்றினர்.

சயம்புச் சட்டம்பியார் **1931** ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தமது கடமையின்றும் ஒய்வு பெற்றார். காரைநகர் மக்கள் **31. 12. 1931** ஆம் திகதி பிரபல சட்டத்தரணி திரு. ஐ. வ. குலசிங்கம் அவர்கள் தலைமையில், சயம்புச் சட்டம்பியாருக்கு மகத்தான ஒரு பாராட்டு விழா நடத்தித் தங்கள் பேரன்பையும் அவருக்கு தெரிவித்துக் கொண்டார்கள்.

பெரியார் சயம்பு, தமது வாழ்நாள் முழுவதையும் பாடசாலை வளர்ச்சிக்கு அர்ப்பணித்ததோடு அமையாது சமய, சமுகப் பணிகளிலும் ஈடுபட்டார். இளஞ் சிறார்கள் சைவவாழ்வு வாழ வேண்டும் என்ற பெருங் கோட்பாட்டினால் அவர்களை வெள்ளிக்கிழமை தோறும் ஈழத்துச் சிதம்பர ஆலயத்திற்கு வரச் செய்து வழிபாடு, பிரார்த்தனை முதலியவற்றிற் கலந்து கொள்ளச் செய்தார். காரைநகரின் முன்னேற்றத்தின் முன்னோடியான இவரது உருவச் சிலை, இன்று கல்லூரியை அலங்கரித்துக் கொண்டிருப்பதுடன் காரை மக்களின் நன்றியுணர்வினை நாட்டிய நவின்று கொண்டிருக்கிறது. இத்தருணத்தில், காரைநகர், மக்களின் உதவியுடன், காரை முத்தமிழ் மன்றச் சார்பில் உருவச் சிலையை நிறுவிய கவிஞர் சி. பொன்னம்பலம் அவர்களையும் நாம் நினைவு கூர்தல் மிக இன்றியமையாதது.

திரு. கே. எஸ். இராசரத்தினம் அவர்களைத் தொடர்ந்து பிரம்மஸ்ரீ. எஸ். சீதாராம ஐயர் இரண்டாம் முறையாக, தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவர் காலத்தில் **1934** ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், ஜே. எஸ். ஸி. பரீட்சையில், இப்பாடசாலையிருந்து

தோற்றிய 15 மாணவர்களுள் பதின்மூவர் இரண்டாம் பிரிவிலும் ஒருவர் முதலாம் பிரிவிலும் சித்தி பெற்றனர். முதலாம் பிரிவிற் சித்தி பெற்ற இவர், வடமாகாணத்தில் முதற் பிரிவிற் சித்தி பெற்ற ஒரேயொரு மாணவர் ஆவர். அந்நாள்களில் கல்லூரி 'மாணவர்கள் தான் அகில இலங்கை பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டிகளிற் கலந்து கொள்வதுண்டு. ஆனால் 1934 ஆம் ஆண்டு நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் இப் பாடசாலையிலிருந்தும் மாணவர் இருவர் கலந்து கொண்டு பரிசுகளைப் பெற்றனர். இவை பாடசாலையின் புகழை மேலோங்கச் செய்தன.

பின்னர், திரு. எ. கனகசபை பி. ஏ. அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். இவர் காலத்தில் பாடசாலை சிரேஷ்ட பாடசாலையாகி 'காரைநகர் இந்துக் கல்லூரி' என்ற பெயரைப் பெற்றது. எஸ். எஸ். ஸி. மற்றிக்குலேஷன் என்னும் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. மாணவர் தொகையும் 500 க்கு மேற்பட்டுவிட்டது. இவர் 10 ஆண்டுகள் அதிபராகப் பணி புரிந்துள்ளார்.

## பொற்காலம்

திரு. கனகசபை அவர்களைத் தொடர்ந்து திரு. ஆ. தியாகராஜா எம் ஏ. எம். லிற். அவர்கள் (பின்னர் கலாநிதி தியாகராஜா) அதிபரானார். இவரின் காலத்தையே கல்லூரியின் பொற்காலம் எனலாம். இவர் காலத்தில், எச். எஸ். ஸி. வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. நூல் நிலையம் விஸ்தரிக்கப்பட்டது; தேவையான கட்டடங்கள்

அமைக்கப்பட்டன. ஒரு சிறந்த விஞ்ஞான கூடம் உருவாக்கப்பட்டது. அக்காலத்தில் திரு. ந. சபாரத்தினம் பி. ஏ., திரு. மா. வைத்தியநாதன் பி. எஸ். ஸி., திரு. ஆ. நடராஜா பி. ஏ., திரு. ஏ. எஸ். கனகரத்தினம் பி. ஏ., திரு. பீ. ஏ. திரு. எம். வைத்திலிங்கம் திரு இளையதம்பி பீ. ஏ. (உபஅதிபர்) முதலானோர் கல்லூரியில் ஆசிரியர்களாக இருந்து அரும்பணியாற்றிக் கல்லூரியின் புகழை எங்கும் பரவச் செய்தனர்.

இக்கல்லூரியின் வைரவிழா 19. 20. 21. 09. 1950ஆம் தேதிகளில் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரியின் பழைய மாணவரும் பிரபல சட்டத்தரணியுமாக விளங்கிய நீதியரசர் அமரர் திரு. ந. நடராஜா கே. சி. அவர்களின் நினைவாக அவரது மனைவியாராகிய பண்டிதர் தங்கம்மா அவர்களால் கல்லூரிக்கு அண்மையில் உள்ள அவரது சொந்த நிலத்தில் எறத்தாழ அறுபதினாயிரம் ரூபா செலவிற் கட்டப்பட்டுக் கல்லூரிக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட, நடராஜா ஞாபக மண்டபம் அக்காலத்தில் நீதி மந்திரியாக இருந்த கௌரவ ஏ. எஸ். இராஜபக்ச கே. சீ. அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மண்டபத்திலுள்ள திரு. நடராஜா கே. சீ. அவர்களின் உருவப் படம், அப்போது இலங்கைப் பல்பலைக்கழகத் துணைவேந்ததராக இருந்த டாக்டர் ஐவர் ஜென்னிங்ஸ் அவர்களால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. இக்கல்லூரியின் பவளவிழா 1963 ஆம் ஆண்டும் முத்து விழா : 1968 ஆம் ஆண்டும் கொண்டாடப்பட்டன. இந்த நிகழ்ச்சிகள் என்றும் மறக்க முடியாத சிறப்புவாய்ந்தவை.

1970 ஆம் ஆண்டு. திரு. தியாகராஜா அவர்கள் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து திரு. பீ. எஸ். குமாரசுவாமி பீ. ஏ. திரு. ஆ. நடராஜா பீ. ஏ, திரு. எஸ். சுப்பிரமணியம் பீ எஸ். ஸி., திரு. கே. கே. நடராஜா டி. எஸ். ஸி, திரு. வி. தர்மசீலன் பி. எஸ். ஸி, கவிஞர் காரை எஸ். சுந்தரம் பிள்ளை (எம். ஏ.) பிரம்மசிறி ஏ. கே. சர்மா பீ.எஸ். ஸி., திரு. எஸ். பத்மநாதன் பீ. எஸ்ஸி என்போர் அதிபர்களாகக் கடமையாற்றினர். இக்கல்லூரி 1983 ஆம் ஆண்டு கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம் என்ற பெயரைப் பெற்றது.

*குறிப்பு:*

***இக் கல்லூரியின் சிறந்த பழய மாணவர்கள் வரிசையில் திரு. கே. கே. சுப்பிரமணியம் ஒருவராகப் பல பாராட்டுக்கள் பெற்றுவருபவர். அத்துடன் நீதி அரசர் நினைவுப்பேருரையை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் ஆற்றியும் உள்ளார்.***

*இக்கல்லூரியிற் கல்விகற்ற பழைய மாணவர்கள் உலகின் எப்பாகத்தில் வசித்தாலும் தத்தம் முகவரிகளை உடன் கல்லூரி அதிபருக்கு அனுப்பி வைக்கவும்*

# ஆயிரம் பிறைகண்டு வாழ்க!

*தமிழாகரர், வித்துவான்*
*திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ.*
*தருமபுரம்*

1979 ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் ஈழத்தமிழ் மக்களோடு நான் மனங் கலந்து பழகி உறவாடிய இனிய காலம்.

இலங்கையில் யாழ்ப்பாணத்தை ஒட்டியுள்ள ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்பெறும் காரைநகர் மணிவாசகர் சபை என்னைத் திருவாசக விழாவிற்கு அழைத்துப் பேசச் செய்து பெருமைப்படுத்தியது.

காரைநகர் மணிவாசகர் சபையின் அடித் தளமாகவும், அச்சபை நன்கு இயங்குவதற்கு வழிகாட்டியாகவும் விளங்கும் திரு. க. வைத்தீஸ்வரக் குருக்களின் நட்பு எனக்குக் கிடைத்தது. அவர் என்னை வரவேற்றுப் போற்றியதோடு நாடோறும் தமது இல்லத்தில் உணவருத்தி இன்புறுத்தினார். திரு. வைத்தீஸ்வரக் குருக்கள் இனிய பண்பாளர். ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோராய்த் திகழ்பவர். புலமை நலம் மிக்கவர். சான்றாண்மைக்கு ஆணியாய் விளங்குபவர்.

குருக்கள் அவர்கள் என்னை உபசரித்துப் போற்றியதோடு இலங்கைத் தமிழ் நாளேடுகளில் என் பேச்சை வெளியிடச் செய்தும் ஈழத்து மக்களுக்கு என்னை 'சைவப் பெரியார்' என அறிமுகப்படுத்தியும் பல இடங்கட்கும் அழைத்துச் சென்று பேசச் செய்தும் பெருமை சேர்த்தார். அரிய பல நூல்களை எனக்கு அன்பளிப் புக்களாகத் தந்துதவினார்.

அவர் ஆயிரம் பிறை காண் விழாவைத் தொடர்ந்து நூற்றாண்டு விழா முதலிய அனைத்துச் சிறப்புக்களையும் எய்தி, உடல் நலத்தோடு இனிது வாழ ஈழத்துச் சிதம்பரேசன் இன்னருள் புரியப் பிரார்த்திக்கின்றேன்.

*தில்லைச் சிற்றம்பலம் திருநாவுக்கரசு நாயனார் காலத்தில் பொன்னினால் வேயப்பட்டிருந்தது.*

# காரை மண்ணுக்கு பெருமை சேர்த்த பெரியார்

வே. சாம்பசிவம்
(B.A.Cey-இலங்கை திட்டமிடற் சேவை)
உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கச்சேரி, யாழ்ப்பாணம்.

*செயலாளர், மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை*
*சிவன் கோவில், ஈழத்துச் சிதம்பரம்*
*காரைநகர்*

ஈழமணித் திருநாட்டில் சைவத்தையும் தமிழையும் போற்றி வளர்த்ததிலும் வளர்ச்சிக்கு முக்கிய பங்கேற்றலிலும் யாழ்ப்பாணம் தனக்கே உரிய வரலாற்றுச் சான்றினைக் கொண்டு விளங்குகின்றது. இந்த யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமேற்குத் திசையில் அமைந்துள்ள காரைநகரில் பல அறிஞர்களும் கல்விமான்களும் சைவத்திற்கும் தமிழிற்கும் முக்கிய பணி ஆற்றி உள்ளார்கள். காரைநகரின் சைவ பாரம்பரியத்தை பேணிக்காப்பதிற்கும் சைவப்பண்பாட்டின் வளர்ச்சிக்கும் பல ஆலயங்கள் தமது பங்களிப்பினைச் செய்துள்ளமை வரலாற்றுச் சான்றாகும். அவற்றில் வியாவில் ஐயனார் ஆலயம், மணற்காடு முத்துமாரியம்மன் ஆலயம், களபூமி மாதா கோவில், ஈழத்துச் சிதம்பரம் என வழங்கும் காரைநகர் சிவன் கோவில் என்பன முக்கிய இடத்தை வகிக்கின்றன.

ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோவில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றால் சிறந்து விளங்குகின்றது. இத்தகைய

பெருமை மிக்க கோயிலின் பண்பாட்டுப் பின்னணியில் ஓர் உன்னதமான சிறந்த சிவாச்சரிய பரம்பரையில் உதிர்த்தவர்தான் மூதறிஞர், பண்டிதர் சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா அவர்கள் ஆவார்.

இன்று எங்கள் மத்தியில் வாழ்ந்து வரும் மூதறிஞர் அவர்கள் 85வது அகவையை நிறைவு செய்து வாழ்வதால் காரைநகர் வாழ் மக்களும் சைவ உலகமும் பெருமை அடைகின்றனர். குருக்கள் ஐயா அவர்கள் அன்றும் இன்றும் ஈழத்துச் சிதம்பரத்தின் வளர்ச்சிக்கும் சைவத்தையும் தமிழையும் வளர்க்கவும் பல வழிகளிலும் தங்களை ஈடுபடுத்தி கொண்டிருக்கின்றார்கள். சிவஸ்ரீ க. வைதீஸ்வரக்குருக்கள் அவர்கள் காரைநகர் மணிவாசகர் சபை, காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம் போன்றவற்றினை ஸ்தாபித்து அதன் வளர்ச்சியிலும் அதன் முன்னேற்றத்திற்கும் அரும்பணி ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் பண்டிதர் அவர்கள் தங்களது கடந்த 85 வருடகாலத்தில் தேடிய அரும்பெரும் சொத்தான அறிவுப் பொக்கிஷமான 4000ற்கும் மேற்பட்ட சைவசமய, தத்துவ, புராண, இலக்கிய, இதிகாச, இலக்கண, சோதிட , சிற்ப நூல்களையும் மற்றும் ஏட்டுப் பிரதிகளையும் காரைநகர் மணிவாசகர் சபைக்கு நன்கொடையாக வழங்கி கணபதீஸ்வரக் குருக்கள் நூலகத்தையும் அமைத்துக் கொடுத்துள்ளார்கள். இந்தக் கணபதீஸ்வரக் குருக்கள் நூலகத்தினால் புதிய இளம் தலைமுறையினர் பழைய புராண, இதிகாச, சமஸ்கிருத

நூல்களை வாசித்து பயன் அடையக் கூடிய நிலைமையையும் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் தமது ஆய்வுக்கட்டுரைகளை எழுதுவதற்கும் வரப்பிரசாதமாக அமையும் என்பதையும் பெருமையுடன் கூறவேண்டி உள்ளது. மேலும் குருக்கள் ஐயா அவர்கள் ஈழத்துச் சிதம்பரத்தின் வளர்ச்சியில் அன்று தொட்டு இன்று வரை அரும்பணி ஆற்றி வருவது சைவ உலகம் அறிந்த விடயமாகும். கடந்த திருவாதிரை உற்சவத்தின் போதும் ஈழத்துச் சிதம்பரத்தின் தேரோடும் மூன்றாம் வீதியினைச் சிறப்பாகச் செப்பனிட வேண்டும் எனவும் Retainning wall கட்டி உயர்த்தி செப்பனிட வேண்டும் எனவும் 3ம் வீதியில் நிழல் மரங்கள் வளர்க்க வேண்டும் என்றும் ஈழத்துச் சிதம்பரத்திற்கு வரும் அடியவர்கள் தங்குவதற்கு வசதியாக சிவ ஆச்சிரமத்தினை திருத்தி தில்லைக் கூத்தனின் திருநடனங்களைத் திருவாதிரைக் காலங்களில் அடியவர்கள் காண வேண்டும் என விரும்பி சிவ ஆச்சிரமத்தினைத் திருத்த வேண்டுமென அங்குவரும் அடியவர்களுடனும் கொடைவள்ளல்களுடனும் தொடர்பு கொண்டதனை எங்கள் பலரால் அறிய முடிந்தது.

எனவே சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்கள் ஈழத்துச் சிதம்பரத்தினுடைய வளர்ச்சிக்கும் சைவத்திற்கும் தமிழிற்கும் ஆற்றிய தொண்டினை இந்த சைவ உலகமும் தமிழ் உலகமும் காலத்தால் மறக்க முடியாததொன்றாகும். தற்காலத்தில் எமது மக்கள் தங்கள் வசதி வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்காக எமது மண்ணைவிட்டு மேற்குலக நாடுகளுக்கும் இலங்கையின்

தென் பகுதிகளுக்கும் சென்று கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் இப்பெரியார் எமது மண்ணிலிருந்து எமது மண்ணிற்கும் சைவத்திற்கும் தமிழிற்கும் திருத்தொண்டு செய்து வருகின்ற பெருமை காலத்தால் அழியாததொன்றாகும்.

*திரு. வே. சாம்பசிவம் யாழ்ப்பாண மக்களுக்குச் செய்து வரும் சமய,சமூக சேவைகள் பலராலும் பாராட்டப் பெற்றுள்ளார். சிறப்பாக ஈழத்துச் சிதம்பர சேதப்பட்ட தேர்கள், சப்பரத்தை கொழும்பில் இருந்து சென்ற திரு. சோமபால குணதிராவை அழைத்துச் சென்று ஆலயத்தின் சேதங்களை நன்கு விளக்கினார். பாலாவோடை அம்மன் கோவில் பாதை, சிவன் கோவில் பாதை அப்படிப் பல அபிவிருத்தி வேலைகள் செய்துள்ளார். மணற்காடு அம்பிகையின் பதினைந்து நாள் உற்சவத்திலும் 'அன்னதானம்' சிறப்புறச் செய்து வருகிறார். அத்துடன் ஈழத்துச் சிதம்பர மணிவாசகர் மடாலய அன்னதான சபையின் 'பவள விழா' சிறப்பாக 30.12.2001 நடத்திய பெருமையும் இவரையே சாரும். இவரின் இலட்சியம், தொண்டு.*

# குன்றின் மேல் இட்ட விளக்கு

*பேராசிரியர் டாக்டர் கு. சுந்தரமூர்த்தி எம். ஏ. பிஎச். டி.,*
*(முன்னாள் முதல்வர்,*
*கே. வி. எஸ். எஸ். கலைக்கல்லூரி, திருப்பனந்தாள்)*
*அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்,*
*தருமபுரம், மயிலாடுதுறை – 609001.*

"முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்" என வணங்கி மகிழ்வார் சுந்தரர். இவ்வரிய பேற்றிற்கு இலக்காக இருப்பவர்கள் சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்கள் ஐயா அவர்கள் ஆவார். எளியேன் செய்த சிவப்புண்ணியத்தால் 1974 ஆம் ஆண்டில் காரைநகர் மணிவாசகச் சபையினரால் அழைக்கப்பட்டு வந்தபொழுது காரைநகரில் அவர்களைக் கண்டு மகிழும் பேறுடையன் ஆனேன். அவர்கள் அது பொழுது காட்டிய அன்பும், வழங்கிய இன்சொற்களும் என்றும் என் நெஞ்சில் நீங்கா நீர்மையாய் உள்ளன.

இவர்களின் சைவப் பணியும் தமிழ்ப் பணியும் எண்ணிப்போற்றி மகிழ்தற்குரியனவாம். காரைநகர் மணிவாசகர் சபை, காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம் ஆகிய இரு அமைப்புக்களும் இவர்களால் நிறுவப் பெற்றனவாகும். இவற்றின் பணிகள் குன்றின்மேல் இட்ட விளக்கென விளக்கி நிற்கின்றன.

அறன் அறிந்த மூத்த அறிவுடைய பெருந்தகையாராகிய நம் ஐயா அவர்கட்கு எண்பத்தைந்து ஆண்டுகள் நிறைவுபெற உள்ளது. ஆண்டுகள் நிரம்பினும்

ஐயா அவர்களின் திருவுள்ளம் என்றும் இளையதாய், அழகியதாய், இறைத் தொண்டாற்றி வரும் பாங்குடையதாய் நிலவி வரும் அவ்வகைப் பணி நம் சமயத்திற்கும் தமிழுக்கும் தொடர்ந்தும் அடர்ந்தும் நம்மனோரை உய்விக்கும் பாங்குடையதாகும் என்பது ஒரு தலை.

உறுவது நீற்றின் செல்வம் எனக்கொள்ளும் உள்ளமும், பெறுவது சிவன்பால் அன்பாம் பேறு எனக் கருதி வாழும் பெற்றிமையும் உடைய ஐயா அவர்கள், பல்லூழிக் காலம் பயின்று அரனை அர்ச்சித்து வாழ இறைவனை இறைஞ்சுகின்றேன்.

*"மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்*
*நின்றது எங்கும் நிலவி உலகெலாம்"*

பேரறிஞர் வைத்தீஸ்வரக் குருக்களின் அருளாசியுடன்

*புதிய திருப்பணிச் சபையை வாழ்த்த வேண்டியது கடமை.*
*திரு. சு. முருகேசு, அமரர் நல்லதம்பி சுப்பிரமணியம் ஆகியோரது அர்ப்பணிப்புகளுக்கும், திருப்பணித் தொண்டுகளுக்கும் என்றும் மறக்க முடியாதவை.*

# பயன் கருதாப் பணியாளர்

*பேராசிரியர், கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்*
*தலைவர்,*
*இந்து நாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்*

## *என்றும் நலத்துடன் இனிதே வாழ்க!*

காரைநகர் தந்த தவப்புதல்வர்களுள் ஒருவராக விளங்கும் மூதறிஞர் பண்டிதர் சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களுக்கு எண்பத்தைந்தாவது அகவை நிறைவு பெறுவதோடு சதாபிஷேக வைபவத்தைக் காணும்பேறு கிடைத்துள்ளதையிட்டு சைவ உலகம் பூரிப்படைகின்றது. சைவத்திற்கும் தமிழுக்கும் தன் வாழ்நாளை அர்ப்பணித்து வரும் நல்லறிஞராக விளங்குபவர் சிவஸ்ரீ குருக்களாவார். அன்பு, எளிமை, அடக்கம், கல்வி, ஒழுக்கம், குடிப்பிறப்பு, வாய்மை, தூய்மை, அழுக்காறு இன்மை, அவாவின்மை ஆகிய நற்பண்புகளுக்கு உறைவிடமாக விளங்கும் அந்தணச் செம்மல் சிவஸ்ரீ குருக்களாவர். மனிதநேயப் பண்புகளாகிய அன்புடைமை, பண்புடைமை, அடக்கமுடைமை, ஒழுக்கவுடைமை, அறிவுடைமை ஆகியவற்றைத் தமது செல்வமாகக் கொண்டு வாழ்ந்து வருபவர். எமது சைவப் பாரம்பரியத்துக்கும், சிவாச்சாரிய பாரம்பரியத்திற்கும் நல்லதொரு இலக்கணமாகத் திகழ்பவர். பிறர் நலன் பேணும் பண்பும், பிறருக்கு உதவும் பண்பும் உடைய சீர்மையாளர். சிறந்தவொரு சிவாச்சாரிய பாரம்பரியத்தில் வந்த சிவாச்சாரியார். ஆற்றல்மிகு நல்லாசானாகப் பணியாற்றியபின், தமது மூதாதையர் வகுத்தவழி சைவசமய

வளர்ச்சிக்கு உதவும் வகையில் பல்வேறு நிறுவனங்களில் பணியாற்றியது மட்டுமன்றி, பல நூல்களை இயற்றியும், பதிப்பித்தும் அரும்பணியாற்றி வருபவர். காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர் மணிவாசகர் சபை ஆகியவற்றின் ஸ்தாபகராக விளங்கி இவ்விரு நிறுவனங்களும் சிறந்த வளர்ச்சியடைய ஊக்க சக்தியாக விளங்கி வருபவர்.

சிவஸ்ரீ குருக்களுடைய பயன் கருதாத இத்தகைய அரிய பணிகளினாலும் குண நலன்களினாலும் ஈர்க்கப்பட்ட காரைநகர் அன்பு நெஞ்சங்களும் வெளிநாடுகளில் வாழும் அன்பு நெஞ்சங்களும் இவரைக் கௌரவிக்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக கனடாவில் உள்ள சைவசமய மன்றத்தினர் 'அன்பு நெறி' இதழை, சிவஸ்ரீ குருக்களின் சிறப்பு இதழாக வெளியிடவும், அவர் பற்றிய நூலினை வெளியிடவும், விழா எடுக்கவும் முயற்சி எடுத்துள்ளதையிட்டு மகிழ்ச்சி யடைகின்றோம். இத்தகைய அரிய முயற்சி அனைவரது பாராட்டுக்குரியதாகும். காரைநகர் சைவ அறிஞர் வரிசையில் தனக்கென ஓர் இடத்தை வகுத்துக்கொண்ட சிவஸ்ரீ குருக்கள் அவர்கள் நல்ல தேக சுகத்துடன் பல்லாண்டு காலம் இனிதே வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரர் பெருமானினதும், ஐயனாரினதும் திருவருள் பொழிவதாக! மேலும் சைவப் பாரம்பரியம் மேன்மையுற இப்பெருந்தகை எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் இறைவன் திருவருளால் வெற்றிபெற வேண்டுமென அவருடைய எண்பத் தைந்தாவது அகவை நிறைவு பெறும் இந்நன்னாளில் வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

## அறுசீர்க்கழி நெடி விருத்தம்

*காரைநகர் மணிவாசகர் சபையினர்.*

சிவனருளால் இளம்பரிதி எனவளர்த்து
வைத்தீசச் செம்மால் நீயும்
தவம்பலிப்பச் செந்தமிழின் கடல்குடித்தாய்
சைவம்தோர்ந்(து) ஏப்பம் விட்டு
நவமாகப் பண்டிதராம் நல்வரிசை
நாடிநினை வரவும் கண்டாய்
உவமையிலா ஆசானே உத்தமனே
சற்குருவே வாழி வாழி

## வேறு

## எண் சீர்க்கழி நெடிலடி விருத்தம்

மறையினுக்கு வரம்பாகி நின்றாய் வாழி
மாண்புடையார் தலைவன் நீ வாழி வாழி
இறைதானும் தற்புகழ்ச்சி இல்லாய் வாழி
இரும்பொறையின் கொள்கலமே வாழி வாழி
கறையிடற்றெம் அண்ணலருள் காப்ப வாழி
சாசினியில் புகழ்நட்டாய் வாழி வாழி
துறைபோய மூதறிஞ வாழி வாழி
தூயோனே வைத்தீச வாழி வாழி

திண்ணபுர அந்தாதி பாடிய கார்த்திகேயப் புலவர் 1819ஆம் ஆண்டு பிறந்தவர். புலவரின் பேரனார் நொத்தாரிசு கா. சி. மகேசசர்மா F. R. A. S

# மூதறிஞர் வாழ்நாளில் ......
# சிறப்பு நிகழ்வுகள்

| | |
|---|---|
| பிறப்பு | - 1916 – 09– 22 |
| தந்தையார் | - சிவஸ்ரீ ச.கணபதீஸ்வரக்குருக்கள் *(ஈழத்துச் சிதம்பர பிரதம சிவாச்சாரியர்)* |
| தாயார் | - க. சிவயோகசுந்தராம்பாள் |
| ஆரம்பக் கல்வி | - காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை |
| உயர்கல்வி | - அளவெட்டி அருணோதயக் கல்லூரி |
| சமஸ்கிருதத்கல்வி | - பி. வி. சிதம்பர சாஸ்திரி அவர்களிடம் |
| பண்டிதர் கல்வி | - மகாவித்துவான் சி. கணேசையர் அவர்களிடம் |
| ஆசிரிய பயிற்சி | - திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை |
| ஆசிரிய சேவை | - 1940ல் – கொழும்பு விவேகாநந்தக் கல்லூரி ஆரம்பம் |
| ஆசிரிய சேவையில் ஓய்வு | - 1970 |
| நிறுவிய அமைப்புகள் | - 1. காரைநகர் மணிவாசகர் சபை (1940)<br>2. காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம் (1960) |
| எழுதிய நூல்கள் | - ஈழத்துச் சிதம்பர புராணச் சுருக்கம்; காரைநகரில் சைவ சமய வளர்ச்சி; தொடர் மொழிக்கு ஒரு சொல்; க. பொ. த. மாண வர்களுக்கான தமிழ்ப் பயிற்சி நூல்கள். |

| | | |
|---|---|---|
| மலராசிரியர் பணி | - | 1. மணிவாசக சபையினரின் திருவாதிரை மலர்கள் (5)<br>2. காரைநகர் சைவ மகாசபை – பொன்விழா மலர் (கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலயத்தில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளால் வெளியிடப்பட்டது).<br>3. காரைநகர் மணிவாசகர் சபை – பொன்விழா மலர்<br>4. வியாவில் ஐயனார் கோயில் கும்பாபிஷேக மலர் (அச்சில்)<br>5. ஈழத்துச் சிதம்பர கும்பாபிஷேக மலர் (1970) |
| பதிப்பாசிரியர் | - | ஈழத்துச் சிதம்பர புராணம், திரு முறைப் பெருமை, திண்ணபுர அந்தாதி, திக்கை அந்தாதி, நன்னூற் காண்டிகை உரையும் நாவலர் பெருமானும், நாவலர் பிள்ளைத் தமிழ், அருள் நெறித்திரட்டு, தெரிநிலை வினையெச்சம், வினைத் தொகை. |
| விருதுகள் | - | அகில இலங்கைக் கம்பன் கழகம் 1995இல் – ''மூதறிஞர்'' விருது அளித்து கௌரவித்தது, ஈழத்துச் சிதம்பர புராண நூல் பதிப்புக்குரிய சிறப்பு விருதுச் சான்றிதழ் இலங்கை அரசால் வழங்கப்பட்டது. |

# யாம் இருவேம் .........

*வட்டுக்கோட்டையூர்,*
*புலவர்மணி, பண்டிதர்*
*க. மயில்வாகனனார்*
*ஓய்வு பெற்ற அதிபர்.*

காரை மருத்துவனார் என்னும் புனை பெயர் கொண்ட சிவத்திரு க. வைத்தீவரக்குருக்கள் ஐயாவுடன் – அவர் குடும்பத்தாருடன் – அவரை நூற்றாண்டுக்கு மிகையாகப் பழகி உள்ளேன். குருக்கள் ஐயாவை எண்ணும் போதெல்லாம் பத்துப் பாட்டினுள் ஒன்றாய திருமுருகாற்றுப்படையில் இடம் பெற்ற சில வரிகள் என் மனத்திரையில் நிழலாடும். ஆம்

*"...............இகலொடு*
*செற்றம் நீக்கிய மனத்தினர்; யாவதும்*
*கற்றோர் அறியா அறிவினர்; கற்றோர்க்குத்*
*தாம் வரம் பாகிய தலைமையர்; காமமொடு*
*கடுஞ் சினம் கடிந்த காட்சியர்; இடும்பை*
*யாவதும் அறியா இயல்பினர்; ......................"*

*– திருமுருகு 131–136*

"புலன் அழுக்கற்ற அந்தணாளரா" கிய குருக்கள் ஐயாவிடம் இத்துணை உயரிய விழுமியங்கள் அமைந்து கிடத்தல் உண்மை! உண்மை!! உண்மையே!!! "வெறும் புகழ்ச்சி இல்லை".

எங்கள் குருக்கள் ஐயாவுடன் பல்லாண்டு காலம் பழகியவன் என்று தொடக்கத்தில் கூறியிருந்தேன். ஐயா அவர்கள் முன்னாளில் ஈழமணித் திருநாட்டில் தலைசிறந்து விளங்கிய பேராசான் மார்களாகிய வித்துவ சிரோமணி கணேசையர், வித்தகம் கந்தையாபிள்ளை, முகாந்திரம் சிவத் திரு சதாசிவஐயர், வித்துவான் பண்டிதமணி ந. சுப்பையாபிள்ளை நவநீதகிருஷ்ண பாரதியார் பல்கலைப்புலவர் சு. நடேசபிள்ளை மற்றும் புலவர்மணி பண்டிதர் சோ. இளமுருகனார் ஆகியோருடன் நெருங்கிப் பழகியிருந்தார். அவர்களின் சீர்மையையும் செயற்றிறமைகளையும் என்றும் பாராட்டிப் பேசுவார். பெரும் புலமைமிக்க புலர்மணி பண்டிதர் சோ. இளமுருகனார், இவருக்கு அஞ்சல் எழுதும் போதெல்லாம், திருவடிகளைத் தெண்டனிட்டு வணங்குகிறேன் என்று வரைவதனைக் கண்டுள்ளேன்.

விதுரர் தமது இல்லத்தை மாதவம் செய்த சிறுகுடில் என்று குறிப்பிடுவார். குருக்கள் ஐயாவின் சிறு குடிலில் தென்னகத்துத் தமிழ்ச் சான்றோர்கள், ஈழத் தமிழ் அறிஞர்கள் எல்லோருமே சென்றுவந்துள்ளனர். அந்த மாதவஞ் செய்த குடிலுக்கு யானும் செல்வது வழக்கம். இக்கட்டுரையை எழுதும்போது அவ்வினிய இரவுகள் நினைவிற்கு வருகின்றன.

அங்கு பெரிய நூலகம் ஒன்று இருந்தது. தண்டமிழ்த் தொன்னூல்கள் இருந்தன. வடமொழி நூல்களும் சிறப்பாக ஆகமம், பத்ததி போன்றவற்றின்

ஏட்டுப் பிரதிகளும் இருந்தன. கணபதீஸ்வரக் குருக்கள், கார்த்திகேயப் புலவர் முதலிய முந்தையோர்களின் நூல்களும் காணப்பட்டன. நூலகத்தை உயிரிலும் மேலானதாக ஓம்பினார். தமிழகத்து நாளிதழ், வார இதழ், மாத இதழ் முதலியனவும், ஈழத்துச் செய்தித்தாள்களுள் சிறந்தனவும் சேமிக்கப்பட்டு இருந்தன. குருக்கள் ஐயாவே ஒரு நடமாடும் நூலகம்.

நுண்மாண் நுழைபுலம்மிக்க இவர், சமயக் குரவர், சந்தான குரவர்களிடம் இறுக்கமான பக்தியுடையார். தோத்திர சாஸ்திரங்களிலும் முழுமையான தேர்ச்சி உடையவர். திருவாசகத்தேனை அருத்தியுடன் மாந்தும் அமைதியினர். தேவாரங்களில் ஈடுபாடுகொண்டு பொன்வேண்டும் போதும் நோயுற்றபோதுமெல்லாம் "இடரினும் தளரினும்", "அங்கத்துறு நோய்கள்" முதலிய தேவாரங்களை ஓதுவார்.

*மூதறிஞர் பண்டிதமணி பிரமஸ்ரீ க. வைத்தீசுவரக் குருக்கள் அவர்கட்குக் கனடாச் சைவசித்தாந்த மன்றம் சைவத் துக்கும் தமிழுக்கும் ஆற்றிய அளப்பரிய தொண்டுகளைக் கௌரவித்து மன்ற வெளியீடான 'அன்புநெறி' இதழைச் சிறப்பு மலராக வெளியிட்டுள்ளமை பாராட்டுக்குரியது.*

# விழாக் காண விழையாத வித்தகர்

*பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளை,*
*தலைவர்,*
*காரைநகர் மணிவாசகர் சபை,*
*அதிபர் கலாநிதி ஆ. தியாகராசா*
*மத்திய மகா வித்தியாலயம்,*
*காரைநகர்*

செந்தமிழின் சிறப்பையும் மேன்மைகொள் சைவத்தின் நுட்பத்தையும் கட்டிக்காத்து வருகின்ற அறிஞர்களில் ஒருவராக விளங்கும் பண்டிதர் சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா அவர்கள் காரைநகர் மணிவாசகர் சபையை யோகர் சுவாமிகளின் அருளாசியுடன் 1940 இல் ஆரம்பித்தவராவார். ஆல்போல் தழைத்த இச்சபை பல கைங்கரியங்களைச் செய்து வந்ததை உலகறியும். இச்சபையை உந்துசக்தியாக இயக்கிப் பல பணிகளைச் செய்வித்த பெருமை ஐயாவைச் சாரும். சமயப் பணியோடு நின்றுவிடாது, காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகத்தை ஆரம்பித்துக் கற்கும் மாணவச் செல்வங்களுக்கு வேண்டிய நூல்களை ஆக்கித் தந்துள்ளார். பல அறிஞர்களின் நூல்களை எழுத்துப் பிழையின்றிப் பதிப்பித்துத் தந்துள்ளார். திருவாதிரை மலர்கள், மணிவாசகர் சபையின் பொன்விழா மலர், சைவமகா சபையின் பொன்விழா மலர் போன்ற மலர்களை மலரச் செய்த பகலவனாவார்.

சைவத்தினதும் தமிழினதும் தொன்மையை உணர்த்துகின்ற பழம் பெரும் பொக்கிஷங்களாக விளங்குகின்ற ஆகமங்கள், இதிகாசங்கள், புராணங்கள்,

சங்க நூல்கள், காப்பியங்கள், நீதி நூல்கள், இலக்கண நூல்கள் யாவற்றையும் சேகரித்துப் பேணிப் பாதுகாத்து வைத்திருந்ததோடு துருவித்துருவி ஆராய்ந்த அறிஞருமாவார். இத்தகைய ஐந்து இலட்சத்துக்கு மேற்பட்ட பெறுமதியும் பெறுதற்கரியதுமான நூல்களை மணிவாசகர் சபையினருக்கு மனமுவந்து வழங்கிய புரவலருமாவார். மணிவாசகர் சபை இந்நூல்களை அறுபத்துநான்கு ஆண்டுக் காலமாக ஈழத்துச் சிதம்பரத்தில் சிவாச்சாரியராகப் பணிபுரிந்து வந்த இவரது தந்தையார் சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக் குருக்கள் அவர்களின் நினைவு நூலகமாக இயக்கி வருகின்றது. நிரந்தர நூலகக் கட்டிடத்தைக் கட்டி இயக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

ஐயா அவர்கள் மிக எளிமையும், அடக்கமும், பணிவும் மிக்கவர். பிறர் மனம் நோகாத வண்ணம் செயலாற்றும் தன்மை கொண்டவர். நடமாடும் நூலகமாகவும், அறிவுக் களஞ்சியமாகவும் விளங்குபவர். ஐயா அவர்கள் சிலு சிலுப்புக்களை விரும்பாத ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோராவார். விழாக்கள் பல கண்டவர்.. தனக்கென விழாக் காண விழையாத வித்தகர்.

இன்றைய நன்னாளில், உடல் நலத்தோடு பணிசெய்து நெடிது வாழ ஈழத்துச் சிதம்பர சுந்தரேஸ்வரப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் 22.09.2001 காலை 10 மணிக்கு நடந்தது.

# பிரதிபலன் பாராத நன்னட்பாளர் ..................

செந்தமிழ்த் திலகம், வித்துவான்
டாக்டர் பா. நீலா, எம். ஏ. எம். பில்., பிஎச். டி.,
முதல்வர் (ஓய்வு)
தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரி, தருமபுரம்,
மயிலாடுதுறை – 609001.

*மொய்த்துவளர் பெருந்தமிழின் மூத்த வடிவமேயோ – பகை*
*சாய்ந்து நிமிர் சாத்திரத்தின் சரித படிவமேயோ வகை*
*வாய்த்து ஒளிர் காலத்தின் கவடு வணங்குமேயோ தொகை*
*தோய்த்து நிமிர் தமிழினத்தின் தவமும் உணங்குமேயோ.*

தோத்திர சாத்திர தமிழ்ப் பண்பாடு கால் கொண்டு இறுமாந்து எண்பத்தைந்து ஆண்டுக் காலமாய்த் தங்கள் திருவடி நிழலில் வீற்றிருந்த செம்மாப்புக்குத் தமிழ்கூறு நல்லுலகம் என்ன கைம்மாறு செய்யும்?

மாரிபோல் பிரதிபலன் எதிர்பாரா நன்னட்பாளராய் – வழிகாட்டியாய் எங்கள் முன் உதாரணமாய் வாழ்ந்து சோற்றுச் செருக்கால் உலகூட்டி வாழ்ந்த உத்தமரே!

தங்களை நேரில் கண்டும், விருந்தாடியும், சொல்லாடியும் மகிழ்ந்த இந்தத் தமிழ் மகள் தங்கள் திருவடி தொழுது அவற்றைத் தலைக்கணியாய் ஏற்று

வணங்குகிறாள். 'யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய' என்ற சங்கத் தமிழில் 'தமிழுள்ளளவும் தங்கள் வாழ்வு சிறக்க வேண்டும்' என வாழ்த்துகிறேன்.

செய்தக்க செய்யாமை யானும் கெடும் – என்ற பழி ஏற்காது காலமுண்டாகவே விழா எடுத்து வீறு பெறும் குழுவினருக்கு நேயம் தெரிவிக்கின்றேன். இன்னும் மின்னும் பணிசெய்து பிணியின்றி நூறு நூறாயிரத்தாண்டு வாழ ஸ்ரீ நடராஜப் பெருமான் அருளட்டும்.

*'அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்*
*செந்தண்மை பூண்டொழுக லான்'*

*On 17. 3. 90 Mr. S. T. Poopalapillai, Former Secretary, Karai Abiviruthi sabai, Colombo writes in an article Thirumuruga Kirubananda Variyar Swamigal releasing the Saiva Maha Sabai Golden Jubilee Malar at Ginthupitiya Temple: "Our Hindu Scholar Sri Vaitheeswara Kurukkal has put Elathu Chithambaram on the Map with Elathu Chithambara Puranam and Thinnapura Anthathi".*

# வாழ்க பல்லாண்டுகள்!

பேராசிரியர், **Dr. இ. கனகசுந்தரம்** M.A.B.S. Ph.D S.D.E. Hon.
தேசிய பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.
யாழ் பல்கலைக்கழகம்

பண்டிதமணி சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்கள் பெரும் புகழ் வாய்ந்த சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக் குருக்கள் அவர்களின் மகன் ஆவார். அவர் ஈழத்துச் சிதம்பரத்திலே பிறந்த பெரும் புண்ணியவான் என்ற பெருமைவாய்ந்தவர். பிராமண குலத்திலே பிறந்து அக்குலத்திற்குத் திலகமாக விளங்குபவர். நானும் அவரும் காரைநகர் இந்துக் கல்லூரியில் மாணவர்களாய் ஒரே வகுப்பிற் கற்றோம். அதனால் எனக்கும் அவருக்கும் 70 வருடங்களுக்கு முன்னரே தொடர்பு ஏற்பட்டுவிட்டது. ஆனால் நான் வேறு இடங்களுக்குச் சென்றமையால் அவருடன் கொண்ட நெருங்கிய உறவு துண்டிக்கப்பட்ட போதிலும் கடிதங்கள் வாயிலாகவும் இருவருக்குமுள்ள மன அன்புத் தொடர்பு மூலமும் ஒருவரையொருவர் மறவாதிருக்கின்றோம். வைதீஸ்வரக் குருக்கள் என்ற பெரியார் என்னிலும் பார்க்க அறிவிலும், வயதிலும் முதிர்ந்தவர். அவரைப் பற்றி வாழ்த்துரை எழுதுமாறு என்னை வேண்டிக்கொண்டதற்காகப் பெருமகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். குருக்கள்

*"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப் புடும்".*

என்ற வள்ளுவர் வாக்குக்கமையத் தமது வாழ்க்கையை நடத்தி, தர்மத்தைக் கையாள்பவர். இப்பெரியாரே காரைநகர் மணிவாசகர் சபையை ஏறக்குறைய 60 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்துத் தொடக்கத் தலைவராயும் இருந்தார். மேலும் இன்று காப்பாளருமாயிருந்து வருகின்றார். குருக்கள் அவர்களே ஈழத்துச் சிதம்பரபுராணத்தின் பதிப்பாசிரியருமாவார். கல்வி விருதுகள் பலவற்றைப் பெற்றும் மிகுந்த பணிவுடன் வாழ்க்கையை நடத்தும் குருக்கள் இன்னும் பல்லாண்டுகள் பூரண சுகத்துடனும் கீர்த்தியுடனும் வாழவேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*எங்கள் மூதறிஞர் பரம்பரை உத்தரகோச மங்கையில் இருந்து கி. பி. 1505ஆம் ஆண்டு வருகை தந்தவர்கள். இவர்கள் வியாவில் ஐயனார் கோவில், மணற்காடு முத்துமாரியம்மன் ஆலயம், ஈழத்துச் சிதம்பரத்தில் பூசைகள் முறையாகச் செய்த சிறந்த அந்தணர் பரம்பரை.*

# 4,000 திருப்பாடல்களை மனனம் செய்தவர் திருமுறை முருகேசர்

## மூதறிஞர் ஆதீனகர்த்தா திரு. முருகேசு பற்றி

*க. வைத்தீசுவரக் குருக்கள் ஈழத்துச் சிதம்பரம்*

ஆங்கிலங் கற்று அரச உத்தியோகத்தில் அமர வேண்டுமென்று இளைஞர்கள் பகீரதப் பிரயத்தனஞ் செய்து கொண்டிருந்த காலத்தில் ஆங்கிலப் பரீட்சையிற் சித்திபெற்றிருந்தும் வலிய வந்த உத்தியோகத்தைப் புறக்கணித்து விட்டவர்களும் ஒரு சிலர் இருந்தார்கள். அவர்களுள் ஒருவர்தான்அண்மையில் சிவபதமடைந்த ஈழத்துச் சிதம்பர ஆலய அறங்காவலர் து. முருகேசு அவர்கள்.

ஈழத்துச் சிதம்பர ஆலய ஸ்தாபகராகிய பெரியார் அம்பலவி முருகரின் கொள்ளுப் பேரனாக 1912 ஆம் ஆண்டு காரைநகரில், திரு. துரையப்பா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தவர் அமரர் முருகேசு. இவர், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கற்று, ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றார். அக்காலத்திலேயே உத்தியோகத்தைப் புறக்கணித்து விட்டு ஆலய சேவையில் ஈடுபடலானார்.

இவர், கல்லூரி அதிபராக இருந்த சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்களையே தமது ஆத்மிகக் குருவாகவும் கொண்டு, அவரிடத்தில் சித்தாந்த சாத்திரங்களையும் திருமுறைகளையுங் கற்றார்.

"ஒரு காலத்தில் ஆலயங்கள் அழிக்கப்பட்டாலும் திருமுறைகள் இருக்கும் வரையும் சைவத்துக்கு அழிவில்லை" என்று பெரியார் சிவபாதசுந்தரம் தமக்கு ஒருமுறை கூறினாரென்றும், அதன் பின்னரே தமக்குத்

திருமுறைகளில் அதிக ஈடுபாடு ஏற்பட்டதென்றும் அமரர் முருகேசு இடையிடையே சொல்லி வந்தார்.

இவர் ஏறத்தாழ 4,000 தேவார, திருவாசகங்களை மனப்பாடம் செய்திருந்தார். ஒரு திருப்பாடலின் ஈற்றடியைச் சொன்னதும் உடனடியாக எவ்விதச் சுணக்கமுமின்றி முழுப்பாடலையுஞ் சொல்லக்கூடிய தெய்விக சக்தி இவரிடமிருந்தது. எனவே மக்கள் இவரைத் திருமுறை முருகேசர் என்று அழைப்பதுண்டு.

நாகலிங்கப் பரதேசியார், தேவாரம் செல்லையாக் குருக்கள் முதலானோரிடம் இவர் தேவாரங்களைப் பண்ணோடு ஓதுவதற்குக் கற்று வல்லவரானார். இதனால் ஈழத்துச் சிதம்பர ஆலய ஓதுவா மூர்த்தியாகவும் விளங்கினார்.

இவரது திருவாசகப் பாராயணம் யாவரையும் கவர்ந்து விடும் தன்மையது. 1979 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீன முதல்வர் சீலத்திரு. ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள், சுவாமி தரிசனஞ் செய்ய ஈழத்துச் சிதம்பர ஆலயத்துக்கு வந்திருந்தபோது, அமரரின் திருவாசக பாராயணத்தைக் கேட்டுத் தம்மை மறந்த நிலையில் இருந்ததை யான் அவதானித்ததுண்டு.

1940ஆம் ஆண்டு தொடக்கம் 1996 ஆம் ஆண்டு வரையும் இவர் அறங்காவலராக இருந்து பெரும் பணியாற்றினார். சிறந்த அறங்காவலருக்கு ஓர் எடுத்துக்காட்டு வேண்டுமானால் அமரர் முருகேசுவை எவ்விதத் தயக்கமுமின்றி எடுத்துக் காட்டலாம்.

சமயத் தொண்டேயன்றி வேறு எதையும் அறியாதிருந்த இவரின் நாமம் திருமுறைகள் உள்ள வரையும் நிலைத்திருக்கும்.

# எங்களை வாழவைத்த தெய்வம்

பரோபகாரமணி
K. K. *சுப்பிரமணியம்* J.P

எங்கள் வணக்கத்துக்கும் போற்றுதலுக்கும் உரிய பிரம்மஸ்ரீ க . வைதீஸ்வரக் குருக்கள் ஐயாவுக்கு 85வது அகவை நிறைவையொட்டி அவர் ஆற்றிய அரும்பெரும் தமிழ், சைவத் தொண்டைப் பாராட்டி நூல் வடிவில் வெளிவருவது சைவ உலகம் வரவேற்கும். நாடறிந்த சைவப் பெருமகன் எங்கள் குருக்கள். குருக்கள் ஐயாவின் மூதாதையர் உத்தரகோசமங்கையிலிருந்து வரவழைக்கப் பெற்ற அறவழி அந்தணர் குடும்பம். இவரின் தந்தையார் இலங்கையில் புகழ்பெற்ற பிரம்மஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்கள் ஆவார். பாடல் பெற்ற திருக்கேதீச்சரத்தின் குருகுல போஷகராகவும் இருந்தவர். ஈழத்துச் சிதம்பர பிரதம குருவாகப் பல்லாண்டு இருந்து பல கும்பாபிஷேகங்கள் செய்து எல்லோரது அன்பையும் பெற்றவர். மேலாகப் பெரும் ஞானியாக விளங்கியவர். பிரம்மஸ்ரீ கணபதீசுவரக் குருக்கள் அவர்களின் பின் அவரின் மூத்தமகன் பிரம்மஸ்ரீ க. மங்களேசுவரக் குருக்கள் பிரதம குருவாக இருந்தார். இப்போது வயது சென்றபடியால் அவரின் பேரன் பிரம்மஸ்ரீ ஈசுவரக் குருக்கள் நல்ல முறைப்படி பூசைகள், விழாக்கள் செய்கின்றார். பண்டிதர் பிரம்மஸ்ரீ க. வைத்தீசுவரக் குருக்கள் ஐயா அவர்கள் உழைப்பின் அவதாரம். எடுத்த விடயத்தை மிகச் சிறப்பாகச் செய்யும் ஆற்றல், அனுபவம் மிக்கவர். 1970 இல் ஈழத்துச் சிதம்பரத்தில் வரலாறு காணாத மகா

கும்பாபிஷேகம் பிரம்மஸ்ரீ நவாலி சாமி விஸ்வநாதக் குருக்கள் சர்வ போஷகராக இருந்து நடாத்தி வைத்தார். கும்பாபிஷேக மலர் ஆசிரியராக அன்று இருந்து சிறந்த பாராட்டைப் பெற்றார். மேலாக அதே தினம் 25 ஆண்டுகளாக காரைநகர் மணிவாசகர் சபையினர் மார்கழித் திருவெம்பாவைக் காலத்தில் கலாநிதி அன்னை *சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஜே. பி.* தொடர்ந்து சேவை நேக்கில் சமயச் சொற்பொழிவை ஆற்றிய தொண்டுக்கு அவருக்கு ஆனந்தக்கூத்தன் குருக்கள் ஐயாவுக்கு *சிவத்தமிழ்ச் செல்வி* என்ற பட்டம் சூட்டும்படி ஆலய வாசலில் இருந்து பெற்ற ஆணையை அப்படியே வசந்த மண்டபத்தில் மண்டாலபிஷேகத்தன்று வழங்கப்பட்டது. அன்றே களபூமியைச் சேர்ந்த சைவப்பெருமகன் பொன்னம்பலம், மலேசியாவுக்கு அழைத்து விமான டிக்கற்றும் வழங்கினார். அம்மையார் இன்றும் குருக்கள் ஐயாவை மறப்பது இல்லை.

ஈழத்தச் சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் சுந்தரேசுவரப் பெருமான் மீது தலபுராணம் ஒன்று வேண்டும் என்று எண்ணி ஈழத்துக் கலைஞர் பரம்பரையைச் சேர்ந்த சோமசுந்தரப் புலவரது மூத்த புதல்வர் புலவர்மணி இளமுருகனாரின் சிவானந்த தேன் ததும்பும் அருவியாக வந்ததே இத்தல புராணம். ஈழத்துச் சிதம்பரபுராணம் ஓர் காவியம். இத்தல புராணம் 1971 இல் உருவாக்கிய பதிப்பாசிரியர் எம் சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்கள் அவர்கள் பெருமைக்கும் பாராட்டுக்கும் பாத்திரமாகி விளங்குகின்றார். தலபுராணம் ஓர் சிறந்த பொக்கிஷம். (692 பக்கங்கள்) ஈழத்துச் சிதம்பர புராணம் வெளியீடு காரைநகர் மணற்காடு முத்துமாரியம்மன் ஆலயத்தில் இருந்து

ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு ஈழத்துச் சிதம்பர வசந்த மண்டபத்தில் வெளியிடப்பட்டது. பல சைவப் பெரியார்கள் இவ்விழாவில் கலந்து சிறப்பித்தனர்.

யாழ்ப்பாணம் காரைநகரைச் சேர்ந்த கார்த்திகேயப் புலவர் ஈழத்துச் சிதம்பரம் பற்றி திண்ணபுர அந்தாதி பாடியுள்ளார் இவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் சமகாலப் புலவர். இருபாலைச் சேனாதிராசா முதலியாரின் மாணாக்கரும் ஆவார். திண்ணபுரத்தில் கோயில் கொண்டருளியுள்ள அருள்மிகு சௌந்தராம்பிகை உடனுறையும் சுந்தரேசுவரப் பெருமான் மீது பாடியுள்ள அந்தாதி சிவநெறிச்செல்வர், ஒய்வுபெற்ற நல்லாசிரியர் எம் சிவத்திரு. க. வைத்தீசுவரக் குருக்கள் காரைநகர் தமிழ் வளர்ச்சிச் சங்கத்தின் அன்பு வேண்டுகோளுக்கு இணங்கி ஸ்ரீகாசி மடம் குமரகுருபர அச்சகத்தில் அச்சிடப்பட்டது. இதன் உரையாசிரியர் தருமை ஆதீனப் புலவர் செஞ்சொற் கொண்டல் டாக்டர் *சிங்காரவேலனார்.* தருமை ஆதீனப் பண்ணையில் வளர்ந்த செந்தமிழ்ப் புலவர் ஈழத்துச் சிதம்பரத்துக்கு வருகை தந்து பன்முறை மணிவாசகர் சபை நடாத்தும் திருவாசகவிழாவில் உரையாற்றி, எம்பெருமானைப் பன்முறை தரிசித்தவர். இப்பெருமை மிக்க திண்ணபுர அந்தாதி 09. 03. 1990 இல் கௌரவ அமைச்சர் சௌ. தொண்டமான் அவர்களின் அமைச்சின் கேட்போர் கூடத்தில் பெரும் ஆலய அறங்காவலர்கள், அறிஞர்கள் முன் வெளியீட்டு விழா அடியேன் தலைமையில் வெளியிடச் செய்த பெருமை குருக்கள் ஐயாவைச் சாரும். அப்படி ஒரு நூல் வெளியீட்டு விழா இன்னும் கொழும்பில் நடைபெறவில்லை என்று பல சைவமக்கள் கூறுவார்கள். ஐயாவின் ஆற்றல் சக்திவாய்ந்தது. Dr. சொ. சிங்காரவேலன்

மறுபிரசுரம் செய்த திண்ணபுர அந்தாதியின் முகவுரையில் தான் திருவாசக விழாவிலும், யாழ்ப்பாணம் நாவலர்பெருமான் சிலைத் திறப்பு விழாவிலும் பங்கேற்று எங்கள் இலங்கைத் திருநாட்டுக்கு வருகை தரும்போதெல்லாம் குருக்கள் ஐயாவின் அன்பு மழையில் நனைந்து உருகியிருக்கிறேன் என்று வர்ணித்துள்ளார். குருக்கள் ஐயா மணிவாசகர் சபை வெள்ளிவிழா மலர், காரைநகர் சைவமகாசபைப் பொன்விழா மலர், காரைமான்மியம் இப்படிப் பல ஆரிய நூல்கள் வெளிவரச் செய்த பெருமை குருக்கள் ஐயாவைச் சாரும்.

எங்கள் குல தெய்வங்களாக நாம் வணங்குவதில் இன்றும் எம்மண்ணில் வாழ்ந்து கொண்டு இருக்கின்ற எங்கள் குலகுரு பிரம்மஸ்ரீ க. வைத்தீசுவரக் குருக்கள் அவர்களைத் தினமும் நினைந்து வணங்கிய வண்ணம் உள்ளோம். அவரின் ஆசியால் பல அறிஞர்களின் தொடர்பும், ஆன்மிக வாழ்வும் என்னைப் போன்ற பலருக்குக் கிடைத்தது பெரும் பாக்கியம். காரைநகரில் இன்று உதிக்கும் கதிரவனாக விளங்கும் அவரது ஒளிப்பிரகாசம் எழுதி முடிக்க இயலாது. குருக்கள் ஐயாவின் திருநாமம் என்றும் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

காரைநகர் மக்கள் போர்ச் சூழலினால் இடம்பெயர்ந்து கிராமத்தை விட்டுச் சென்றும், எம் சிவன் ஆலயத்தில் நித்தியபூசை நடைபெற அயராது உழைத்தவர் எம் பெரும் மதிப்பிற்குரிய குருக்கள். 1991 தொடக்கம் 1996களில் மிகவும் வேதனையும், சோதனையுமான காலத்தில் எம் சிவன் ஆலயத்துக்கு ஆற்றிய அருட்பணியை ஆதீன கர்த்தர்களான அமரர் து. முருகேசு, அ. அம்பலவி முருகன், மு. சுந்தரலிங்கம் குருக்கள்

ஐயாவைப் பாராட்டி, வாழ்த்தி உள்ளனர். கனடா அடியார்கள் அக்காலத்திலும் பூசைக்கு நிதியுதவியவர்கள் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

எம் சிவாலயத்தில் உள்ள பஞ்ச ரதமும் சப்பரமும் படையினரின் ஷெல் தாக்குதலாலும், மழை, வெயில் பட்டும் சேதமடைந்தது. அரசிடம் இருந்து நட்டஈடு பெற அடியேனுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்தவர்களில் குருக்கள் ஐயாவும் ஒருவர். மேலாக மணிவாசகர் அன்னதான மடாலயத்தில் நிரந்தரமாக குடி கொண்டிருந்த கடற் படையினரை வெளியேற்றக் காரைநகர் பிரஜைகள் குழுவினரை ஊக்குவித்து, அடியேன் உயர் அதிகாரிகளைக் கொழும்பில் பார்த்து 07. 06. 1998 இல் நடைபெறும் மகாகும்பாபிஷேகத்துக்கு முன் வெளியேற்றியது எம்பெருமான் திண்ணபுர திருக்கூத்தன் திருவிளையாடல். இப்ப மடத்தின் சேவை சிறப்பான சேவை.

வருங்காலச் சந்ததிக்கு "கணபதீசுவரக் குருக்கள் நூலகம்" ஆரம்பித்துப் பெரும் விலையுயர்ந்த அரிய ஏடுகள், நூல்கள் அன்பளிப்புச் செய்த பெருமை எம் குருக்கள் ஐயாவைச் சாரும். சைவ உலகம் போற்றும் வகையில் 07. 06. 1998 இல் நடந்த மகா கும்பாபிஷேகத்துக்குக் கொழும்பில் இருந்து சென்ற நவாலி சாமி விஸ்வநாதக் குருக்கள், பாரியார் மற்றவர்களும் அடியேனும் ஆலயத்தில் தங்கியகால், அவரும் பிள்ளைகளும் கண்ணை இமை காத்தது போல் நன்கு உபசரித்தார்கள். இந்து சமயக் கலாசார அமைச்சும் பல அரிய நூல்களை நூலகத்துக்கு வழங்கி உள்ளனர். குருக்கள் ஐயா பல்லாண்டு, பல்லாயிரம் ஆண்டு வாழ எல்லாம் வல்ல திண்ணபுரத் திருக்கூத்தனை வணங்குவோமாக.

*வாழ்க ! வாழ்க !*

அண்மையில் சிவபதம் அடைந்த
ஈழத்துச் சிதம்பர பிரதம சிவாச்சாரியார்

## சிவஸ்ரீ சு. மங்களேஸ்வரக் குருக்கள்

*(திருமிகு க. தியாகராஜக் குருக்கள்)*

*தோற்றம்: 17. 07. 1911* *மறைவு: 26. 12. 2001*

சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக் குருக்கள்– சிவயோகசுந்தராம்பாள் தம்பதிக்கு மகனாக 1911–07–17இல் இவர் பிறந்தார். உரிய காலத்தில் வித்தியாரம்பம் செய்யப்பெற்ற இவர் காரைநகர் வலந்தலையிலுள்ள அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரை கல்வி கற்றார். மிகச் சிறு வயதிலேயே தன் தந்தையாரிடம் சமஸ்கிருதத்தைக் கற்கத் தொடங்கிவிட்டார்.

தமிழகத்திலுள்ள வைத்தீஸ்வரன் கோவிலில் இவருடைய ஆசாரியாபிஷேகம் நடைபெற்றது.

ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத்தில் 1941ஆம் ஆண்டு பங்குனி மாதம் நடைபெற்ற பிரம்மோற்சவத்தில், தந்தையார் சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக்குருக்கள் அவர்களின் அனுசரணையுடன் இவரே மஹோற்சவ குருவாக இருந்து சகல கிரியைகளையும் மிகச் சிறப்பாகச் செய்தார். 1952ஆம் ஆண்டில் சிவஸ்ரீ கணபதீஸ்வரக்குருக்கள் அவர்களின் தர்மபத்தினியும் இவருடைய தாயாருமான ஸ்ரீமதி சிவயோக சுந்தராம்பாள் சிவபதமடைந்த பின்னர் இத் தேவஸ்தானத்தின் பிரதம சிவாச்சாரியராக 58 ஆண்டுகள் இருந்து சகல நைமித்தியக்

கிரியைகளையுஞ் செய்தார். மகத்தான ஆற்றலும் ஆழ்ந்த அறிவும் நீண்ட அனுபவமுடைய தந்தையாரின் ஆலோசனையும் உதவியும் வழிகாட்டலும் சிறந்த ஒரு சிவாச்சாரியராக இவர் உயர்வதற்குக் காரணங்களாக இருந்தன.

கோவிலின் பாரம்பரியங்கள் பேணப்பட வேண்டும் என்பதில் மங்களேஸ்வரக் குருக்கள் கண்ணும் கருத்துமாக இருந்தார். கோவிற் பூசைகள் ஒழுங்காகவும் உரிய நேரத்திலும் நடந்தால்தான் வீடும் நாடும் செழிக்கும் என்பதில் தளரா நம்பிக்கை கொண்டிருந்த இவர் பணத்தைப் பெரிதாகக் கருதாமல் 64 ஆண்டுகள் பிரதம சிவாச்சாரியராக இருந்த தந்தையின் வழி நின்று பக்தியுடன் பரமனைத் துதிப்பதிலேயே அதிக நாட்டம் கொண்டிருந்தார்.

காரைநகர் வாழ் மக்களும், குடாநாட்டில் ஏனைய இடங்களில் வசிக்கும் காரை மக்களும், தம் குடும்பங்களில் நடைபெறும் விவாஹம், புதுமனை புகுவிழா, பூப்புனித நீராட்டுவிழா போன்ற மங்கல வைபவங்களுக்கு இவரையே குருவாக வரிப்பதுண்டு. கோவிலில் தான் செய்யவேண்டிய கடமைகள் எவ்விதத்திலும் பாதிப்படையாத வகையில் அந்த மங்கல நிகழ்ச்சிகளை நிறைவேற்றி வைப்பார்.

தன்னுடைய இளைய சகோதரர் பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்கள் அவர்கள் காரைநகர் மணிவாசகர் சபை, ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத்தில் திருவெம்பாவை காலத்தில் ஆண்டுதோறும் நடத்தி வரும் மணிவாசகர் விழாவின் சிறப்பிற்கும் வெற்றிக்கும் இவர் தன்னாலான சகல பங்களிப்பையும் செய்தார்.

ஒரு தேவஸ்தானத்தின் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் முன்னேற்றத்திற்கும் காரணமாக இருப்பது அதன் தர்மகர்த்தாக்களுக்கும் சிவாச்சாரியர்களுக்கு மிடையேயான சமுகமான உறவாகும். இந்த உண்மையை நன்குணர்ந்த மங்களேஸ்வரக் குருக்கள், தர்மகர்த்தாக்களான அமரர் அ. ஆண்டி ஐயா, அமரர் து. முருகேசு ஆகியோருடன் எந்நாளும் ஆரோக்கியமான உறவையே பேணிவந்தார். இத்தேவஸ்தானத்தின் இப்போதைய தர்மகர்த்தாக்களான திரு. அம்பலவி முருகன், திரு. மு. சுந்தரலிங்கம் ஆகியோரைப் பொறுப்பு வாய்ந்த ஒரு தந்தையின் ஸ்தானத்தில் நின்று, நல்லாலோசனைகளை வழங்கி வழிநடத்தினார்.

உடல் நலம் குன்றி சிவாச்சாரியப் பணிகளைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டபோது தன் சகோதரியின் மகன் சிவஸ்ரீ வி. ஈஸ்வரக் குருக்களைப் பிரதம சிவாச்சாரியராக்கி, கோவிலின் பாரம்பரியம் தொடர்ந்து காப்பாற்றப்படுவதற்கு வழி செய்தார்.

நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந்த வேளையிலும், தன்னிடம் வருபவர்களிடம் ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத்தின் பணிகளைப் பற்றிப் பேசுவதில் இவர் நிறைவு கண்டார்.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் என்றும் ஈழத்துச் சிவனையே நினைத்துக் கொண்டிருந்த சிவஸ்ரீ மங்களேஸ்வரக் குருக்கள், 26-12-2001 அன்று புதன்கிழமை அதிகாலை ஆறு மணியளவில் சுவர்க்கவாயில் ஏகாதசித் திதியில் ஈழத்துச் சிதம்பரேஸ்வரனின் திருவடிகளை அடைந்தார்.

*குருக்கள் ஐயாவின் அன்புக்குரியவர்களில் Dr. கு. தெண்டாயுதபாணியும் ஒருவர். பெரும் சிவபக்தர்*

# அமரரான அருமைப் பெரியப்பா பற்றி ஓர் நோக்கு.......

செல்வி இராணி
வைத்தீஸ்வரக் குருக்கள்

"இருவரும் இராமரும் – இலட்சுமணரும் போல"

பெரியப்பா எம் ஊர் மக்களால் பெரிதும் போற்றப்பட்டார். இடம்பெயர்ந்து இருந்தபோதுகூட எம் ஊர் மக்கள் அவரிடம் வந்து ஆசிபெற்றுச் சென்றார்கள். வட்டுக்கோட்டையில் இரு வருடங்கள் அவருடன் இருந்தபோது அங்கே உள்ள மக்களும் அவரிடம் மிகுந்த மரியாதையும் அன்பும் வைத்திருந்தனர். ஓர் அன்பர் தினமும் பெரியப்பாவின் பாதங்களில் மலர்கள் இட்டு வணங்கி வந்தார். இன்னோர் அன்பர் பெரியப்பாவைத் தரிசித்தால் ஈழத்துச் சிதம்பர நடராஜரைத் தரிசித்தது போல இருக்கும் என்று கூறுவார்.

எமது ஊரில் நூறுக்கு மேற்பட்ட திருமணங்கள், புதுமனைப் பிரவேசங்கள் எல்லாம் பெரியப்பாவால் நிறைவேற்றி வைக்கப்பட்டன. அவர் பணத்தையோ பொருளையோ என்றும் விரும்பியது இல்லை. 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற முதுமொழிக்கு இலக்கணமாக வாழ்ந்தவர். ஆடம்பரங்களை அவர் என்றும் விரும்பியது கிடையாது. எளிமையான வாழ்க்கை, அவர் வாழ்ந்த இல்லம் முனிவர்கள் வாழும் ஆச்சிரமம் போன்றிருந்தது. தம் வாழ்நாள் முழுவதும் ஈழத்துச் சிதம்பர சுந்தரேசனுக்குச் சேவை செய்வதற்கே அர்ப் பணித்திருந்தார். அவரின் சிந்தை முழுவதும் சுந்தரேஸ்வரப்பெருமானே நிறைந்திருந்தார்.

அவர் எமக்குக் கற்றுத் தந்த நன்நெறிகளின் படி ஒழுகுவதே நாம் அவருக்குச் செய்யும் கைம்மாறு ஆகும்.

உ

சிவமயம்

## திருப்பணிச் சபை, அன்னதான சபையைச் சேர்ந்த ஆயிலி காரைநகர் திரு. ஆ. சுந்தரேஸ்வரன் அவர்களின்

# வாழ்த்துரை

ஒருவன் தனக்காகவும் தனது மனைவி, பிள்ளைகள் முதலியோரின் வாழ்வுக்காகவும் வளத்துக்காகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இக் காலத்தில், பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயாவின் வாழ்க்கை புறநடையாக உள்ளது. இப்படிப் பொது வாழ்வுக்காக வாழ்பவர் லட்சத்தில் ஒருவர் என்று கூறலாம்.

ஈழத்துச் சிதம்பரத்தில் வீற்றிருக்கும் கூத்தப் பிரானினதும் ஐயனாரினதும் அருமை, பெருமைகளைச் சைவ உலகத்தின் எல்லாத் திசைகளிலும் பரப்பி இன்பம் காணும் ஒரே நோக்கத்திற்காகத் தனது வாழ்வை அர்பணித்தவர் குருக்கள் ஐயா அவர்கள். இந்த நோக்கத்தை அடையவே ஈழத்துச் சிதம்பர புராணத்தின் பதிப்பாசிரியராயிருந்து அப்புத்தகத்தை வெளியிட்டார்.

1991ஆம் ஆண்டு எமது ஊரிலிருந்து நம்மவர்கள் இடம் பெயர்ந்த பொழுது குருக்கள் ஐயா அவர்கள் இடம் பெயராமல் பலவித கஷ்டங்களை அனுபவித்து, கோயிலுக்குரிய எந்தச் சபையும் நித்திய பூசையைக் கவனிக்காமல் இருந்த பொழுது ஒரு நித்திய பூசைச் சபையை உருவாக்கி கோவிலின் நித்திய பூசையைக்

குறைவில்லாமல் நடாத்திவந்த பெருமை ஐயா அவர்களையே சாரும். ஐயா அவர்களும் அவர்களின் முன்னோர்களும் அதன் பின் வழிவந்தவர்களும் பிராரத்துவத் தொடர்பால் மேற்படி கோயிலின் வருமானத்தை எதிர்பார்க்காமல் பூசையைக் குறைவில்லாமல் நடாத்தி வந்தார்கள் என்பதை எவரும் மறைக்கவோ அல்லது மறுக்கவோ முடியாது. கோவிலின் நித்திய நைமித்திய பூசையைப் செய்து பூர்த்தி பூரணப்படுத்துவது எமது மாணிக்கவாசக மடாலயத்தின் மகேஸ்வர பூசை என்று ஞாபகப்படுத்திக் கொண்டிருப்பார்.

அப்படித் தொண்டு புரியும் பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயாவின் தேகசுகம் நலம் பெற்று வாழ கூத்தபிரானும் ஐயனாரும் துணைபுரிய வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

*காரை - கனடா கலாசார மன்றமும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் மூதறிஞரின் படம் போட்டு மலர் வெளியிட்டுள்ளது. அத்துடன் மன்றம் எம் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேசுவரப் பெருமானுக்குத் தங்களாலான தொண்டுகளைக் கனடாவில் இருந்து செய்கிறார்கள்.*

# வாழ்த்தி வணங்குகிறேன்

*செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன்* B.A.

துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பளை.

**கா**ரைநகரின் ஒப்பற்ற ஒளிவளர் விளக்காய் விளங்குபவர் மூதறிஞர் சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்கள். சிவப் பணியாலும் தமிழ்ப் பணியாலும் சிவபூமி முழுவதும் தனக்கென முத்திரை பதித்தவர் இவர். தென்னகத்துக் தமிழ் அறிஞர்கள் எம் தேசத்துக்கு வருகைதந்தபோதெல்லாம் தேடிக் கண்டு கொள்ள விரும்புவது இப்புண்ணிய மனிதரை. இலங்கை அனுபவங்களை எழுதிய இந்தியத் தமிழ் அறிஞர்களின் கட்டுரைகளில் இவருக்கு முக்கியத்துவம் கொடுத் துள்ளனர். பழுத்த பழமாக இன்றும் எம் மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கும் இப்புனிதப் பிறவி சாதித்தவை ஏராளம். எம் அன்னை *சிவத்தமிழ்ச் செல்வி* அவர்கட்கு உலகம் அறிய இப்பட்டத்தை வழங்கியவர் வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா. எந்த ஒரு இளைய தலைமுறைக் கலைஞர்களையும் வாழ்விப்பதற்குத் தன்னாலான உதவிகளைத் தாராளமாக வழங்கும் ஒப்புரவாளர். இப்பெரியாரின் நல்லாசியைப் பெறுகின்ற வாய்ப்பு பெரும்பேறாக எனக்குக் கிடைத்தது. தேடற்கரிய பல நூல்களைச் சிறியேனுக்கு வழங்கி இன்றுவரை என் வளர்ச்சிக்கு உறுதுணை செய்தவண்ணம் உள்ளார். ஈழத்துச் சிதம்பரக் கும்பாபிஷேகத்தின் போது கோபுரத்தை நோக்கிப் போடப்பட்ட உயரப்படிகளில் ஏறி வந்து என்னை வாழ்த்திய காட்சி கடவுள் காட்சி கொடுத்ததுபோல இன்றும் அற்புதமாக அகத்தில்

நிறைந்திருக்கிறது. சிவநெறிச் சீலர்கள் கல்வியாலும் செல்வச் செழிப்பாலும் காரைத் திருவூரில் நிறைந்து வாழ்கிறார்கள். இவ்வூர் மக்கள் தம் குலகுருவாக, ஆஸ்தான வித்தகராக, திரிகால ஞானியாக, தெய்வமாக இப்பேரறிஞரைப் பெரிதும் போற்றி மதித்து வருகின்றனர். இப்பெரியாரின் தொண்டர் அடிப்பொடியாக விளங்குபவர் ஸ்ரீமான் கே. கே. சுப்ரமணியம் அவர்கள். வைத்தீஸ்வரக் குருக்கள் பற்றி உரையாடுகின்றபோதிலே திசைநோக்கி வணங்கி கண்ணீர் மல்குவதை யான் பல தடவை கண்டிருக்கிறேன். சிவநெறிக் காவலராய் கலைஞர்களின் காவலராய், விளங்கும் ஸ்ரீமான் கே. கே. சுப்ரமணியம் அவர்கள் தம் குலகுருவாகிய வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா அவர்களின் வரலாற்றுச் செய்திகளைத் தொகுத்து வெளியிடுவது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்நூல் மிக முக்கியமான ஓர் ஆவணமாகும். எனவே இந்நூலை வெளியிடும் மதிப்பார்ந்த சைவப் பெரியார் கே. கே. சுப்ரமணியம் ஐயா அவர்களை வாழ்த்துவதோடு நூலின் கருப்பொருளாக விளங்கும் சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா அவர்களின் திருப்பாதங்களை நினைந்து வாழ்த்தி வணங்குகிறேன்.

*ஈழத்துச் சிதம்பரத்துக்கு நடராஜப் பெருமானுக்குச் சித்திரத்தேர், வசந்தமண்டபம் நல்லபடி செய்யவேண்டும்.*

# ஆலய வழிபாட்டிற் கிரியைகள்

பண்டிதர் க. வைத்தீசுவரக் குருக்கள்,
தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர்.

இவ்வுலகில் உயிர்கள் மாயாகாரியமான உடல்களோடிருந்து உலக இன்ப துன்பங்களைப் பெற்று வாழ்கின்றன. இந்த வாழ்வு இகலோக வாழ்வு எனப்படும். இவ் வாழ்வு தற்காலிகமானது. நிலையா இயல்போடு கூடியது; இன்ப துன்ப மயக்க நிலை வேறுபாடுகளுக்கு இடமானது; சனன, மரணத் தொடர்ச்சிகளால் நிறைந்திருப்பது; சுவர்க்க, நரக அனுபவங்கட்குமுரியது.

இந்த உடலிற் பொருந்தாமலும் இங்குள்ள இன்ப, துன்ப மயக்கங்கட்கு ஆட்படாமலும் வாழும் வாழ்வுமொன்று உயிருக்குண்டு. அது பரலோக வாழ்வு என்று கூறப்படும். அது நிரந்தரமானது; போக்கு வரவு மாற்றம் மலைவு முதலியன இல்லாதது; பிறப்பு இறப்பு நிலையைக் கடந்தது. சிவனைச் சார்ந்து சிவமயமாய் அமைந்து சிவானந்த உணர்வில் திளைப்பது. இகவாழ்வில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வோருயிருக்கும் முடிவான இலட்சியமாயிருப்பது அப்பரவாழ்வேயாகும். அப்பர வாழ்வைப் பெறுதற்கான தகுதிப்பாட்டை உயிர்கள் இகவாழ்விலேயே பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அதிலும் பிரதானமாக மனிதப் பிறவி வாய்த்திருக்கும்போதே பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது நெடுங்காலமாக உணரப்பட்டு வருகிறது.

இத்தகுதிப்பாட்டை மனித உயிர்களிடத்தில் வருவிக்கு முகமாகவே உலகில் சமயங்களும் சமய சாதனைகளும் அமைந்துள்ளனவாகும்.

நமது சைவசமயம் ஆலய வழிபாட்டை இதற்கேற்ற பொருத்தமான சாதனமாக வகுத்திருக்கின்றது. பரலோக வாழ்வாகிய பேற்றை அடைவதற்கு ஓர் உயிர் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற படிநிலைகளில் முறையே தேறித்தேறி மேலேறிப் போதல் வேண்டும் என்ற சைவசித்தாந்தக் கருத்துக்கு முற்றிலும் அனுசரணையாக இருப்பது இந்த ஆலய வழிபாடேயாம். ஆலய வழிபாட்டுக்கு வகுக்கப்பட்டிருக்கும் நியமங்கள், அங்கே செய்யலாம் என விதிக்கப்பட்டிருக்குஞ் செயல்கள், அங்குள்ள மூர்த்திகளின் இலட்சணங்கள், அங்கே நடக்கும் நித்திய நைமித்திகக் கிரியைகளின் நோக்கங்கள், அங்கு நடைபெறும் உற்சவங்களின் தத்துவக் கருத்துக்கள், ஆலய மண்டப அமைப்பு முறைகள் முதலியனவற்றை நன்கு விசாரித்து அவற்றின் விளக்கங்களை அறியும்போது, ஒருவர் மேற் கூறிய சரியை முதலிய நான்கு நிலைகளிலும், அவற்றின் உட்பிரிவுகளாயுள்ள பல்வேறு துறைகளிலும் பொருந்திப் பொருந்தி முன்னேறுவதற்கான பெருவாய்ப்புக்குப் போதிய இடமிருத்தல் நன்கு புலனாகும். அவற்றுள் சரியை, கிரியை என்னும் இரண்டு படிநிலைகளும் மிகத் தூலமாகவும், யோகம் ஞானம் என்னும் இரண்டும் அவற்றுள் மறைபொருள்களாகவும் அமைந்திருக்குஞ் சூத்திரம் விவேகித்து உணரத்தக்க தாகும். ஆலயக் கிரியைகளுக்கு உரியவராயிருக்கும் சிவாசாரியர் புரிதற்குரிய கடமைகள் புறத்தோற்றமளவிற் கிரியைகளாயிருக்கும். ஆனால் அவர்

முற்று முழுதாக யோக ஞான அனுபவ நிலைகளைத் தமது அகத்தினால் உணர்ந்து அவற்றில் ஒன்றிநின்று கொண்டு தமது புறக்கிரியைகளைச் செய்யாதவிடத்து அக்கிரியைகள் பலன்படுங் கிரியைகள் ஆகமாட்டா. அவர் புரிதற்குரிய கிரியைகளின் தத்துவார்த்தங்களை, அவற்றை விரித்துரைக்கும் ஆகம விளக்கின் உதவியினாலே காண்பவர்க்கு இவ்வுண்மை தெற்றெனப் புலப்படும்.

கிரியை ஆரம்பிக்கு முன்னமே சிவாசாரியர் தம்மைச் சகல விதத்திலும் மனித நிலையிலிருந்து விடுவித்துச் சிவநிலைக்கு மாற்றிக்கொள்கிறார். அவர் புரியும் ஆன்மார்த்த பூசை, அந்தர்யாகம், பூதசுத்தி, சகளீகரணம் முதலான காரியங்கள் அனைத்தும் அவர் தம்மைச் சிவமாகவே மாற்றிக்கொண்டுவிட்டமைக்கு அத்தாட்சியாகும். அந்நிலையில் தாம் சிவமே என்ற பாவனைமூலம் சிவனோடு ஒன்றிநின்று செய்யும் பிராணாயாமம், ஆவாஹனம் முதலாகிய கிரியைகள் அவருடைய யோகப் பயிற்சிக்கு அத்தாட்சியாகும். எந்தக் கிரியையும் அதன் உண்மையான தாற்பரியத்தை விளக்கிச் செய்தாலல்லாது பயன்படுவதில்லை என்பர் அறிஞர். தாம் சிவமேயாய் நின்றுகொண்டே ஒரு சிவாசாரியர் கிரியைகளைச் செய்யவேண்டும் என்பதன் தாற்பரியம் யாது?

அவனன்றி ஒரணுவும் அசையாது. எவ்வுயிரின் எச்செயலும் சிவனாலேயே செய்விக்கப்படுகிறது. அவரே செய்தும் செய்வித்தும் நிற்கிறார். ஆனால் சாமானியமாக எந்த உயிருக்கும் அந்த உணர்வு நேர்படுவது இல்லை. எந்த ஒரு செயலில் தலைப்படும்போதும் அது தன்செயல் என்ற நினைப்பும் அதன் சார்பான சகல அடைவுகளுக்கும்

தானே உத்தரவாதி என்ற முனைப்பும் ஒவ்வோருயிர்க்கும் சர்வசாமானியமானவை. ஆணவச் சார்பான இத்தகைய நினைப்பும் முனைப்பும் வினைவினையாய்ப் பெருகி மேலும் மேலும் உயிரை உலக இன்னல்களில் ஆழ்த்திவிடுதல் சைவசித்தாந்த ஞான அனுபவ உண்மையாகும். வழிபாட்டு விஷயத்திலும் இந்நிலை இடம்பெறின் வழிபாடு கருதிய பலன் கிட்டாது என்பதில் ஆட்சேபமில்லை. ஆதலின், நான் என்ற நினைப்பு முனைப்பு நிலைகளுக்கு அப்பாற்பட்டு நின்று தம் கடமையைச் செய்யவேண்டிய சிவாசாரியர் 'செயல் எனதன்று; செயலின் பெறுபேறும் எனக்கன்று; என்மூலம் எல்லாஞ் செய்பவனும் சிவனே, அவற்றின் பெறுபேற்றுக்குரியவனுஞ் சிவனே' என்ற பூரண விளக்க நிலையில் நின்றே செய்தல் வேண்டும். இந்த விளக்க நிலைக்குப் பெயர் ஞானம்.

*"சிவோ தாதா சிவோ போக்தா சிவஸ் ஸ்ர்வம் இதம் ஜகத்*
*சிவோ யஜதி சர்வத்ர சிவோஹம் ஏவ து"*

என்ற ஆகம மந்திரமூலம் இவ்வுண்மை பிரசித்தமாகின்றது.

ஆலயத்தில் நிகழுங் கிரியைகள், யோக ஞானப்பேற்றுக்கு உரியவையாம். இவற்றுக்கு முன்னும் பின்னும் இடம்பெறும் கிரியைகளல்லாத மற்றுங் கோயிற் பணிகளனைத்துஞ் சரியைகளாம். ஸ்நானம், சந்தியா வந்தனம், பிரதட்சணம், நமஸ்காரம், திருவலகிடல், திருமெழுக்கிடல் முதலாகிய யாவும் இச் சரியையில் அடங்கும். இச் சரியைகளும் சிறப்பாக ஆலயக் கிரியைகளுக்குஅங்கமாகவே அமைந்தவை என்ற விளக்கம் இன்றியமையாதது.

ஆலயங்கள் மக்களுக்காகவே அமைந்தவை. மக்களினத்தில் ஒவ்வொருவரும் ஆலய வழிபாட்டினால் முன்னேறவேண்டியவர் ஆவர். அவர் பெறும் முன்னேற்றம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற படிமுறை வழியினதாகவே நிகழவேண்டும். அந்நிலைக்கு அவர்களிடத்தில் ஆகவேண்டிய முன்னேற்றக் குறிகளை விருத்தியாக்குதற்குரியவர் சிவாசாரியர் ஆவர். ஆலய வழிபாடு சம்பந்தப்பட்ட ஒவ்வொரு கிரியையிலும் வைத்து இவ்வுண்மையை நன்கு புரிந்துகொள்ளலாம்.

ஆலய வழிபாட்டில் மிகச் சர்வசாதாரணமான ஒரு கிரியை அர்ச்சனையாகும். 'வழிபடச் செல்லும் பக்தனொருவன் வெறுங்கையுடன் செல்லாது பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய் என்பனவற்றுடன் தனது தகுதிக்கேற்றவாறு செம்புக்காசோ, பொன்னோ கொண்டு செல்லல் வேண்டும். அவற்றைச் சுவாமிக்கு அர்ப்பணிக்க வேண்டும்; பின்னர் பிரசாதம் பெற்று மீளவேண்டும்' என்ற ஒழுங்கு உண்டு. இதன் தாற்பரியம் யாது? குறித்த பக்தன் தன்னை முற்றாகச் சுவாமிக்கு அர்ப்பணித்தலே இதன் தாற்பரியமாகும். கனிந்த வாழைப்பழம் அவனது பண்பட்ட உள்ளத்தைக் குறிக்கிறது. வெற்றிலையும் பாக்கும் அவனைச் சுருட்டி மயக்கும் சுகபோக இச்சைகளைக் குறிக்கின்றன. தேங்காய் முழுமையாயிருக்கும் போது அவன் மலத்திணிவில் மூடுண்டிருக்கும் நிலையைக் குறிக்கின்றது. பணம் அவன் தன்னுடைமையாக வைத்துக் கொண்டிருப்பவற்றைக் குறிக்கின்றது. கோயிற் கிரியை சம்பந்தப்பட்ட மட்டில் இஃது எவ்வாறு பிரயோகமாகின்றது என்று பார்ப்போம்.

கோயில் சிவாசாரியர் முதலில் அப் பொருள்களைப் பக்தனிடமிருந்து ஏற்கின்றர். பழம், பாக்கு, வெற்றிலைகளைச் சுவாமியின் முன்னர் வைத்து, அவன் மனப் பக்குவத்தையும் அவன் தன் உலகபோக இச்சைகளை அங்கு அர்ப்பணித்துவிட்டமையையும் சுவாமிக்கு அறிவித்தலோடு தேங்காயை உடைத்து அதன் மூலம் அவனது மலத்திணிப்பு நீங்கி உள்ளே காணும் வெண்பருப்புப்போல அவன் சுத்த ஆன்மாவாகிறான் என்பதையும் தெரிவித்து, பணத்தையும் எடுத்துச் சுவாமியின் பாதத்தில் வைத்து 'இனி அவனுடைமை யெல்லாம் உன்னுடைமையாகவே அர்ப்பணிக்கப்பட்டு விட்டன; சுவாமீ! அவனை ஆட்கொள்ளல் வேண்டும்' என்று பிரார்த்தித்துக் கொள்கின்றார். தம்முடைய பிரார்த்தனைக்குச் சுவாமி செவிசாய்க்கச் செய்யும் பொருட்டாகவே சுவாமியின் நாமங்களை உருக்கமாக ஓதியோதி மலர் தூவுகிறார். முடிவில் கற்பூர ஒளியில் அவனைத் தரிசிக்கவைத்து, அவனுக்கு ஒரு மனநிறைவை ஏற்படுத்துகின்றார்.

அதன்மேல் அர்ச்சனைப் பொருள்களையும் வீபூதி, தீர்த்தம் ஆகியவற்றையும் எடுத்துவந்து பக்தனிடம் கொடுக்கிறார். சுவாமி உன் அர்ப்பணித்தலை ஏற்றுக் கொண்டு உனக்குத் தமது கருணையைப் பாலித்திருக்கின்றார் என்று தெரிவிப்பதே இச்செயலின் கருத்தாகும். திரும்பவும் அவன் கையிற் கொடுக்கப் பட்டவை பார்வைக்குப் பழம் முதலியனவாகத் தோற்றினாலும் உண்மையில் அவை குறிப்பது சுவாமியின் கருணையையேதான். அவற்றைப் பிரசாதம் என்ற பெயரால் வழங்குவதே இதற்குப் போதிய அத்தாட்சியாகும்.

வேறெந்தப் பொருளுக்காவது பிரசாதம் என்ற பெயரில்லை. சுவாமியின் கருணைக்கு மாத்திரமே பிரசாதம் என்ற பெயருண்டு. இனி அப் பிரசாதம் கொடுத்தற்கு நியமிக்கப்பட்ட இடத்தைக் கவனித்தால் அர்ச்சனைப்பேறு ஆத்மிகத் தூய்மையாகிய ஞானப்பேறுதான் என்பது எளிதில் விளங்கும். ஆலயத்தில் தம்ப மண்டபத்தில் இருக்கும் நந்தி எந்நேரமுஞ் சிவனையே ஒரே நோக்காக நோக்கி நிற்கும் பரிசுத்தமான ஆன்மாவின் அறிகுறியா யுள்ளது. அதன் முன்னிலையில் வைத்தே சிவாசாரியர் பக்தனுக்குப் பிரசாதம் வழங்குவது அனுபவமுறையாகும். இந்த நந்தியைப் போல நீயும் பரிசுத்தனாயினாய் என்பது அதன் குறிப்பாகும்.

சாதாரண கிரியைகளில் ஒன்று என்ற தோரணையில் அர்ச்சனையைப் பற்றிக் கவனித்தோம். இனி பெருங்கிரியைகளிலும் ஒன்றைக் கவனிப்போம்.

ஆலயங்களில் நிகழும் பிரதான கிரியைகளில் ஒன்று திருக்கலியாணம். சுவாமிக்குமா கலியாணம் என்ற விநோதப் பார்வையில் இது வேடிக்கையாய்த் தெரியுமே தவிர, ஆன்மஞான நோக்கில் இக்கிரியை தன் பண்பாலும் பயனாலும் மிகுந்த மேம்பாடுடையதாய் முக்கியமான ஒரு யோக உண்மையின் அடிப்படையில் ஞானப்பேற்றுக்குச் சாதனமாய் இருத்தல் இனிது புலப்படும்.

உலக இயக்கம் முழுவதிலும் ஆண் சக்தி, பெண் சக்தி என்ற இரண்டின் தொழிற்பாடு இருத்தலை அணு ஆராய்ச்சியில் வைத்து விஞ்ஞானம் விளம்பரப்படுத்தி விட்டது. 'எலெக்ட்ரன்' ஆண் எனவும் 'நியூட்ரன்' பெண் எனவும் கொள்ளப்படுகிறது. அண்டப்படைப் பியக்கங்களிலும் பிண்ட (உடல்) உறுப்பியக்கங்களிலும் இதனை ஏகப்பட்ட

உண்மையாக ஒத்துக்கொண்டு விட்டார்கள். இத்தொடர்பில் விஞ்ஞானிகளின் காட்சிக்கு அகப்படாத மற்றொரு ஆண், பெண் சக்திகளின் தொழிற்பாட்டைத் தெய்வீக ஞான ஆராய்ச்சிச் சபையார் (Theosophic Society) தமது ஞான திருஷ்டி ஆராய்ச்சியிற் கண்டு கூறியிருக்கின்றார்கள். அணு பாகங்களாய் உள்ளவை ஆண் சக்தி பெண் சக்தியுள்ளனவாயினும் அவை சடங்கள்; தாமாகவே இயங்குஞ் சீவசக்தியுடையனவல்ல. ஆதலால், அவற்றைத் தொழிற்படுத்தி ஆட்டிப்படைக்கும் செந்நிறமான ஒரு சக்தியும், நீல (மங்கல்) நிறமான ஒரு சக்தியும், அவற்றுக்கு வேறாயிருக்கும் இரகசியம் அவர்கள் காட்சியில் வெளியாகியுள்ளது. அவற்றின் இயக்கத்தினாலேயே அனைத்தும் இயங்குவதாக அவர்கள் கண்டிருக்கிறார்கள். ஒளியியக்கத்திற்கூட இந்த ஒழுங்கு காணப்படுதல் ஒளிக்கதிர்ச் சிதறலில் வைத்து அவதானிக்கப்பட்டதாகவும் சொல்கிறார்கள்; ஒரு ஒளிக்கதிர் சிதறவைக்கப்படும்போது இடையிடையே கருமை ஒளியும் இருப்பதாகச் சொல்கிறார்கள். இவ்வாற்றல் செந்நிறச் சக்தியாகிய சிவமும் நீல (மங்கல்) நிறச் சக்தியாகிய அம்மையும் கூடும் கூட்டத்தினால் அனைத்தும் ஆகின்றன. அனைத்தும் இயங்குகின்றன என்ற உண்மை ஊர்ஜிதமாகின்றது. ஆலயங்களிலே விசேஷமாகக் கும்பாபிஷேகம் முடிந்தவுடன் திருக் கலியாணம் நடத்துகிறார்கள். கும்பாபிஷேகமானதன் மூலம் சுவாமி சாநித்தியப்பட்டதும் சிவத்தைச் சக்தியோடு சேர்த்தலினால் உடனடியாகச் சிருஷ்டி ஆரம்பமாகின்றது என்பது அதன் தாற்பரியம்.

ஆலயக் கிரியைகளின் நோக்கம் மிகமிக உயர்ந்தது. இருந்தும் காலத்திற்கேற்ற கோலமாக இம்மைக்குரிய சுக, செல்வ போகப்பேறுகள்தாம் ஆலய வழிபாட்டின் நோக்கமும் ஆலயக் கிரியைகளின் பலாபலனும் என்றெண்ணும் போக்கு இக்காலத்தில் மிகுந்து வருவதும் ஏதோ உண்மைதான். இந்தநிலை மிகத் தவறானது. இலௌகீக முன்னேற்றமே ஆலயக் கிரியை வழிபாடுகளின் இலக்கன்று. ஆன்ம முன்னேற்றமே அவற்றின் இலக்காகும். அந்த ஆன்ம முன்னேற்றத்திற்கு அனுசரணையாக அதன் அடிப்படையில் மற்றும் பேறுகளும் அதிகரித்து வரலாம். வந்தாற் கண்டுகொள்வதே தவிர, வராவிட்டாற் குறைப்பட்டுக் கொள்வதோ அவற்றுக் காகவே வழிபாட்டு முயற்சியை வீண் விரயமாக்குவதோ சமயப் பண்பாகாது.

***ஒளியில் விளைந்த வுயர்ஞான பூதரத்***
***துச்சியின்மேல்***
***அளியில் விளைந்ததொ ராநந்தத் தேனை***
***அநாதியிலே***
***வெளியில் விளைந்த வெறும்பாழைப் பெற்ற***
***வெறுந்தனியைத்***
***தெளிய விளம்பிய வாமுக மாறுடைத்***
***தேசிகனே.***

*நன்றி:*
*அன்புநெறி, கனடா*

# மானிடம் வென்றதம்மா

பண்டிதை செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம் B. A.
வவுனியா மகாவித்தியாலயம் – வவுனியா

சில நினைவுகள்..........

மண்ணில் மலர்ந்த மலர்கள் யாவும் மணம் பரப்பும் என்று கூற முடியாது. எனினும் சில மலர்கள் சேய்மைக் கண்ணும் மணம் பரப்பவல்ல ஆற்றல் உடையவை என்பதற்குப் பண்டிதமணி சிவத்திரு க. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களே சான்று,

*"தன்னுயிர் தான் அறப் பெற்றானை ஏனைய*
*மன்னுயிர் எல்லாம் தொழும்".*

என்ற வாசகத்தின் வழியில் ஓர் சிறப்பு மலர் திரு. கே. கே. சுப்பிரமணியம் அவர்களால் அவரது 85ஆவது அகவையின் நிறைவாக வெளியிடுவது சாலப் பொருத்தமானது. மனித விழுமியங்களின் அடிப்படையில் வாழ்க்கை அமைந்து விட்டால் அதுவே செம்மையான வாழ்க்கை.

பண்டிதமணி அவர்களுடன் எனக்குள்ள தொடர்பு மிக நெருக்கமானது. அடிக்கடி இலக்கிய சர்ச்சைக் கால நேரம் போவது தெரியாமல் இடம்பெறும். எந்த விடயத்திலும் அவருக்குள்ள ஆழ்ந்த புலமை அவரை ஒரு "நடமாடும் பல்கலைக்கழகம்" என்றே எண்ண வைக்கும். எந்த விடயத்தையும் தக்க ஆதாரங்களுடன் எடுத்து நிறுவுவார். மேலும் விளக்கம் வேண்டுமா? நூல்கள் எடுத்துக் காட்டுவார். அவர் வீடே சிறந்த ஒரு

நூலகம். அவரிடம் நூல்கள் பெற வருவோர் தொகை இத்தனை என்று அளவிட்டுக் கூறமுடியாது. நூலகத்தில் நூல்கள் அட்டவணைப்படுத்தப்பட்டிருப்பது போல அவரிடத்திலும் எண்ணற்ற நூல்கள் பட்டியற்படுத்தப்பட்டுள்ளன என்பது மிகைக் கூற்றன்று. ஆய்வு நூல்களா? இலக்கண நூல்களா? இலக்கிய நூல்களா எது எது தேவையோ அது அது கைவரப் பெற்றவர்கள் அது அதைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அவர் சுவாசிக்கும் மூச்சுக் காற்று தமிழ். அதன் விளைவே தமிழ் வளர்ச்சிக் கழகம். மாதந்தோறும் வெளிவரும் க. பொ. த. (சா/த) வினாத்தாள்களையும் வெளியீடுகளையும் பெற்றுக் கொள்ளும் வாடிக்கையாளர்களில் யானும் ஒருவர். தள்ளாத வயதிலும் துடிப்புடன் செயலாற்றுவார். ஐந்தாம் திகதிக்குள் மாதாந்த வினாத்தாள்கள் நாட்டின் சகல பாகங்களையும் சென்றடைந்துவிடும் என்பது என்னவோ உண்மை. பணம் குறிப்பிட்ட நேரத்தில் வந்தடையும் என்று எதிர்பார்க்க முடியாது. எனினும் வெளியீடுகள் காலந் தவறாது. உள்நாட்டு இடப்பெயர்வு அவரது வெளியீட்டுக்கு தடைக்கல்லாக அமைந்து விட்டது.

*"கல்வி தறுகண் இசைமை கொடையெனச்*
*சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"*

என்ற தொல்காப்பியரின் வாக்கு அவருக்கு இத்துணைப் பெருமையையும் தேடித் தந்துவிட்டது. அவரது விழாவை நேரில் கண்டுகளிக்க முடியாவிட்டாலும்

*"யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே"* என்ற கூற்றின்படி இன்னுரை வழங்கச் சந்தர்ப்பம் கிட்டியமையிட்டு இறும்பூதெய்துகிறேன். மானுடப் பண்பு வளர்ச்சியில் அவர் ஒரு அறிவுக் களஞ்சியம் அறிவியல் விருத்தி, இலக்கிய வளர்ச்சி, அழகுணர்ச்சி, ஒழுக்க வளர்ச்சி, ஆத்மீக உணர்வு ஆகியன அப்பெட்டகத்துள் அடக்கம். எதை எண்ணினாரோ அதையே செய்து முடிக்கும் வல்லாளர்.

*"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்*
*சொல்லிய வண்ணம் செயல்"*

அவரது புகழ் தமிழுள்ள வரை மணக்கட்டும்.

பேரறிஞர் வைத்தீஸ்வரக்
குருக்களின் அருளாசியுடன்

*திரு. கே. கே. நடராசா (முன்னாள் அதிபர்) திரு ஆ. சுந்தரேசுவரன். போன்றோர் ஆலயத் திருப்பணிகள் செய்துவருவதை அகிலமெங்கு முள்ள பக்தர்கள் பாராட்டு கின்றனர். சப்பரம்விட அறையும், மூன்று தேர்களும் அதற்கான தேர்முட்டி, திருக்குளத்திற்கு கிழக்கில் உள்ள குளத்தை மூடி கிணறு கட்டி இரண்டு இராச கோபுரத்துக்கும், மணிக்கூட்டுக் கோபுரத்துக்கும் வர்ணம் பூசி. அம்மன் வாசலில் ஒரு திருக்குளம் கட்டி பூர்த்தியா உள்ளது. இவை சிவன் செயல்.*

உ

சிவமயம்

# ஆண்டி கேணியான் துணை

வே. இராசநாயகம் - காரைநகர்

ஸ்ரீ வைத்தீஸ்வர குருக்கள் ஐயா அவர்களுக்கு ஓர் பாராட்டு மலர் வெளிவருவது பற்றி எம் பாராட்டையும் நன்றியையும் திரு. கே. கே. சுப்பிரமணியம் அவர்கட்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் முன்னர் பலர் மூலமாகவும் எனது தனிப்பட்ட முறையிலும் குருக்கள் ஐயாவைக் கேட்டபோது அவர் தமது குரு இத்தகைய விடயங்களை விரும்பவில்லை எனக் கூறி மறுத்துவிட்டார். குருக்கள் ஐயாவைக் கௌரவித்து இப்படி உபசாரம் செய்து மலர் வருவது நம் வருங்கால சந்ததியினருக்குக் குருக்கள் ஐயாவைப் பற்றிச் சொல்லி வைப்பது போல் ஆகும். ஜன்மத் தொடர்புகள் இன்று அவருடன் எனக்கு இருந்தாலும் நான் அவர்களைப்பற்றி எழுதத் தகுதியற்றவனாக இருக்கிறேன் என்பது எனது எண்ணம்.

குருக்கள் ஐயா கணபதீஸ்வரக் குருக்களின் மகனும் மங்களேஸ்வரக் குருக்களின் சகோதரரும் ஆவர். அவர் ஓர் பண்டிதர். ஆசிரியர். ஐயா அவர்கள் தமிழுக்கும், சமயத்திற்கும், சமூகத்திற்கும் செய்த தொண்டுகள் எழுதி அடங்காது. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு *"சிவத் தமிழ்ச் செல்வி"* என்ற பட்டத்தைத் தேர்ந்தெடுத்தவரும்

இவரே. சிவன் கோவில் ஆதீனகர்த்தா து. முருகேசு அவர்களின் மறைவையொட்டி உதயன் பத்திரிகையில் ஐயா அவர்கள் எழுதிய கட்டுரை இன்றும் நினைவு கூறத்தக்கது.

இவ் உத்தம குலத்தில் உதித்த கணபதீஸ்வரக் குருக்கள் மங்களேஸ்வரக் குருக்கள் இவ் மூவரும் காரைநகர் சிவன் கோயிலுக்குக் கிடைத்த முக்கனிகள் என்றே கூறலாம்.

தினகரன்பிட்டி வைரவர் கோவிலுக்கு விளக்கு ஏற்றி பூசை செய்தமையும் இக்கட்டான இந்நிலையில் ஆதீனகர்த்தா முருகேசுவுடன் ஒத்துழைத்து பஞ்சாராத்தி கொழுத்தி தீபம் எடுக்காது அர்ச்சித்தமையும் அன்று அங்கு உள்ளவர்களின் சொல்லைக் கேட்டு பெருமிதம் அடையாதவர்கள் யாரும் இல்லை.

குருக்கள் ஐயாவின் குணாதிசயங்கள், பேரறிவு, பெருந்தன்மை, பல தொண்டுகள் பற்றி எழுதுவதற்கு நான் அருகதையற்றவன். இந்நாட்டிலும் தாய்நாட்டிலும் இவருக்கு அதிக செல்வாக்கும் பேரறிஞர்களின் நட்பும் உண்டு.

ஐயா அவர்கள் நீடூழி வாழ்கவெனத் திண்ணபுர தில்லைக்கூத்தனைப் பிரார்த்திக்கிறேன்.

*வணக்கம்.*

***17. 10. 1992 முதறிஞர் மனைவியாரது உயிர் அவரது உடலைவிட்டுப் பிரிந்த கால், அவர் பின்வருமாறு அடியேனுக்கு எழுதினார். ஆவரையாரே அழிப்பர் எதுவன்றிச் சாவாரை யாரே தவிப்பவர்? - 20. 10. 92***

# “தீவகத்தின் ஞானச்செல்வர் பண்டிதர் க. வைத்தீஸ்வரரின் சைவத் தமிழ்ப்பணிகள்”

*வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், M.A.*
முதுநிலை விரிவுரையாளர்,
மொழித்துறை, சப்ரகமுவ பல்கலைக்கழகம்
பெலிஹுல்லோயா, இலங்கை.

மெலிந்த உருவம், குடுகுடுநடை, எவருடனும் பழகும் போதும் தமிழ்க்கல்வி, மானுடநேயம், புலமை வெளிப்பாடு பற்றிய செறிந்த பாங்குடனான நடத்தை என்னும் பண்பு நலன்களுடன் நட்புரிமை பாராட்டும் இனிய குணவியல்புகள் இயற்கையாகவே வாய்க்கப் பெற்றவர் காரைநகர்ப் பண்டிதர் சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்கள். நாவலர் அடிச்சுவட்டிலே தோய்ந்த உள்ளப்பாங்குடன் – அறிவாற்றல் பிரவகிக்கும் துடிப்பார்வத்துடன் கூடிய செயலீடுபாடும், நூலாராய்ச்சிப் பண்பும், அறிஞர் தொடர்பும், அன்பர்கள் நட்பும், பதிப்புப்பணியும், கருத்தாடல் நோக்கும் என்ற இவை, பண்டிதர் வைத்தீஸ்வரக் குருக்களின் மகத்தான குறிக்கோள்களாயமைந்திருக்கின்றன.

கடல் சூழ்ந்த இவ்வுலகிலே வாழும் போதே கல்விப்பணி, தமிழ்ப்பணி, இலக்கிய இலக்கணப்பணி, சைவப்பணிகள் புரிய வேண்டும் என்னும் ஆராத

வேட்கையுடன் தொழிற்படுவர். தமக்கெனவோர் குறிக்கோளை வரித்துக் கொண்டு இயங்கித் தொழிற்படுபவரென்ற வகையில் யாழ்ப்பாணத்துக் கல்விப் பாரம்பரியத்தினூடே செம்மையுறக் கற்று அதன் வழித் தமது குறிக்கோளைச் சாதித்து வாழ்பவர் பண்டிதர் வைத்தீஸ்வரர். குருத்துவ இலட்ஷணம் தன்னுட் பொதிந்து அணிசெய்ய அதனின்றும் மேவிய நட்பியற் கோட்பாட்டைத் தன்னளவிலே வெளிக்காட்டி மனமகிழ்வு பெறும்படியாக, ஏனையோரையும் அரவணைத்து வாழ்வதனையே 'செம்மை வாழ்வு' என்று எண்ணியவராய்த் திகழ்பவர் பண்டிதர் க. வை. அவர்கள். ஒருவகையிலே சுயநலக் குணம் தவிர்ந்து மானுடத்தின் மகத்துவத்தினை உணர்ந்து அதற்கு மதிப்பளித்து – அம்மானுடக் குண விசேடணங்களான விழுமியங்களுக்கு உயிர்கொடுத்து வாழ நினைப்பவர் இப்பெருந்தகை.

புகழ்மிக்க சந்ததியிலே, மற்றெவ்வுயிருக்கும் செந்தண்மைபூண்டொழுகும் அந்தணர் மரபிலே தோன்றியவர் பண்டிதர் க. வை. அவர்கள். இவரது தந்தையார் சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக் குருக்கள். தாயார் ஸ்ரீமதி சிவயோகசுந்தராம்பாள். பண்டிதரின் முன்னோர் திருவுத்தரகோசமங்கை ஆலயத்திலே அர்ச்சகர்களாக, பூசகர்களாகப் பணிபுரிந்து வந்துள்ளனர். திருவுத்தரகோச மங்கையில் ஏற்பட்ட கலகம் – கலவரம் காரணமாக இடம்பெயர்ந்து இராமேஸ்வரத்திற்கு வந்தார்கள். அங்கிருந்தபோதுதான் காரைநகர் வியாவில் ஐயனார் கோவிலைக் கட்டிய குளக்கோட்டு மன்னனால் (இற்றைக்கு ஏறத்தாழ இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்) காரைநகருக்கு வரவழைக்கப்பட்டார்கள்.

காரைநகர் கார்த்திகேயப் புலவரின் மகன் சிவசிதம்பர ஐயர். இவர் சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் மிக்க பாண்டித்யமுள்ளவர். கந்தபுராண மகேந்திர காண்டத்துக்கு உரை எழுதி வெளியிட்டவர்; விவேகி: தமிழ் நூல்கள் பலவற்றையும் செம்மையுறப் பதிப்பித்தவர். இவரின் மகன் மகேசசர்மா. இவர் வானசாஸ்திர நிபுணர். FRAS பட்டம் பெற்றவர். நொத்தாரிசாக இருந்தவர். இத்தகு பெருமைகளும் மாண்புகளுமுடைய சிவசிதம்பர ஐயரின் மகளார்தான் பண்டிதர் வைத்தீசுவரரின் தாயார். தந்தை வழி மரபிலும் தாய் வழி மரபிலும் அந்தண குலத்துதித்தவர் பண்டிதர் க. வை. அவர்கள்.

**இளமைக் கல்வி** அக்காலத்தில் காரைநகர் வலந்தலை வடக்கு அ. மி. த. பாடசாலையிலும், காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையிலும் எட்டாம் வகுப்பு வரை இடம்பெற்றது. முதலாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை இவர் காரைநகர் வலந்தலை வடக்கு அ. மி. த. பாடசாலையிலே கல்வி கற்றார். ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு (USLC) வரை காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் படிப்பை மேற்கொண்டார். தற்போது அளவெட்டி அருணோதயக் கல்லூரி என்ற பெயருடன் மிளிரும் கல்விச் சாலை அப்போது அளவெட்டி நாகபூஷணி வித்தியாசாலை என்றழைக்கப்பட்டது. திரு. க. வை. குருக்கள் அளவெட்டி நாகபூஷணி வித்தியாசாலையில் 'பிறிலிம்' வகுப்பிலே கற்றுச் சித்தி பெற்றார்.

நல்ல தெளிவான தமிழ்க் கல்வி கிடைக்க வேண்டும் என்று கருதுவோர் நல்ல பேராசான்களிடம் – தகைமையுள்ள கல்விமான்களிடம் – குருமாரிடம் சென்று கற்க வேண்டும் என்னும் மரபு – கொள்கை இன்றும் யாழ்ப்பாணத்திலே உண்டு. தேடி – நாடிச் சென்று தமிழ்க் கல்வி கற்றுத் திகழும் அறிவுஜீவிகள் வாழும் பூமி யாழ்ப்பாணம்; 'தமிழ் நிலம்' என்பதன் பொருள் இதுவேதான். பண்டிதர் க. வை. அவர்களது ஆசிரிய பரம்பரை நீண்டது: தனித்துவமிக்கது: நிரம்பிய புகழ் கொண்டது.

பெரும் புலவராய் விளங்கிய, காசு வாங்காமற் கற்பித்த சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரிடம் தமிழ் இலக்கிய இலக்கணங்களை வரன்முறையாகக் கற்ற காரைநகர்ப் பண்டிதர் சிவஸ்ரீ ச. பஞ்சாட்சரக் குருக்களிடம் கல்விபயிலும் பெருவாய்ப்பு ஆரம்பத்தில் இவருக்குக் கிடைத்தது. பண்டிதர் சி. சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் வைத்தீசுவரரின் ஆசிரியராயிருந்தார். அறிஞர் சி. சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் நடாத்தப்பட்டு வந்த செந்தமிழ்க் கலாசாலையின் அதிபராயிருந்த திரு. நாராயண ஐயங்காரின் மாணவர்.

பின்னர், சுன்னாகம் பிராசீன பாடசாலையைச் சேர்ந்த வேதவிசாரத P.V. சிதம்பர சாஸ்திரிகளிடம் சமஸ்கிருதமும், இலக்கணக் கடல் மகாவித்துவான் சி. கணேசையரிடம் தமிழுங் கற்று, சமஸ்கிருதத்தில் பிரவேச பண்டித பரீட்ஷையிலும் தமிழில் பால பண்டித பரீட்ஷையிலும் சித்திபெற்றார். அங்கு படித்த காலத்திலே வித்துவான் ச. கந்தையா பிள்ளையிடம் சைவசமய நூல்களைக் கற்றுத் தேறினார். சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரது மாணவர்களுள் ஒருவர் ச. கந்தையாபிள்ளை. இவர் சுவாமி விபுலாநந்தர், முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி

ஆகியோரின் ஆசிரியருமாவார். நாவலர் வழிவந்த நீண்டதொரு மரபுக் கல்விப் பாரம்பரியத்தினடியாக முகிழ்த்துக் கிளம்பி இன்றும் வாழ்ந்துவரும் பண்டிதர் க. வை. குருக்கள் அவர்கள் சிறந்த பண்டிதரும், பயிற்றப்பட்ட ஆசிரிய தராதரப்பத்திரப் பரீட்சையிலே சித்திபெற்ற ஆசிரியருமாவார்.

பண்டிதர் குருக்களவர்கட்குக் கிடைத்த – அமைந்த – பேராசான்கள் பற்றி அறியும் போது இன்றுள்ள நமக்குப் பெரு வியப்பு உண்டாகிறது. பழுத்த கல்விப் புலமையாளர்களை அவர் சந்தித்துள்ளார் என்பது மிகப் பிரதானம் பெறும் தனிச் சிறப்பம்சமாகும். அந்தத் தொடர்பில் Dr. சிவப்பிரகாசம் M.Sc., Ph.d; ச. சிதம்பரப்பிள்ளை B.A: B.Sc: புலவர்மணி நவநீத கிருஷ்ண பாரதியார்; வித்துவான் கார்த்திகேசு B.A., திரு. சு. நடேசபிள்ளை B.A: B.L, கொக்குவில் த. குமாரசாமிப்பிள்ளை; பேராசிரியர் வி. செல்வநாயகம் என்போரிடம் பாடங் கேட்கும் பெருவாய்ப்புப் பெற்றவர் நமது பண்டிதர் க. வை. குருக்கள் அவர்கள். இவர்களிடம் கற்கக் கிடைத்த பேறு பெரும் பேறு. "குரு – தலைவிதி" என்பது இங்கு சிந்திக்கத் தக்கது.

பண்டிதர் வைத்தீசுவரரது ஆசிரியப் பணி கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்தில் நடைபெற்றது. அங்கு அவர் கற்பித்த காலத்திலே கொழும்பு விவேகானந்த சபையாரால் இன்றும் நடத்தப்பட்டு வரும் அகில இலங்கைச் சைவ சமய பாடப் பரீட்சைக் குழுவில் ஒருவராக இருந்து சைவப்பணியாற்றும் பெருவாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. (இன்றுஞ் சில பண்டிதர்கள் தமிழ் வேறு/ சைவம் வேறு; இரண்டுக்கும் தொடர்பில்லை என்று

வன்மம் சாதிக்கும் நிலையில்) பண்டிதர் வைத்தீசுவரர் புரிந்த பணி மகோன்னதமானது. தமிழ் – சைவம் கலந்த பணி என்று குறிப்பிடுதல் மிகவும் பொருத்தமுடையது. அக்காலத்திலே மாலை நேரங்களில் தினகரன் பத்திரிகையில் செய்திப் பிரிவிலே பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்துச் சிலகாலம் தினகரன் செய்திப் பிரிவில் பணியாற்றினார். ஞாயிறு தோறும் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று அங்கிருந்த சைவத் தமிழ்க் கைதிகளுக்கு அறிவுரை வழங்கும் பணியில் ஈடுபட்டார். பின்னர் பல இடங்களிலும் அமைந்த பாடசாலைகளிலும் அதிபராகவும் பணியாற்றும் வாய்ப்புண்டாயிற்று. பண்டிதர் க. வை. குருக்கள் 1971இல் அதிபர் பதவியிலிருந்து ஒய்வுபெற்றுக் கொண்டார்.

இன்று 'காரைநகர்' என்ற பெயர் சொன்னவுடன் அனைவரது நினைவிலும் தோன்றுவது 'காரைநகர் மணிவாசகர் சபை' யாகும். அத்தோடு 'ஈழத்துச் சிதம்பரம்' எனப்படும் சிவன் – ஐயனார் கோயிலாகும். இன்று புகழ்க்கொடி நாட்டி ஆலய பரிபாலனமும் சமூக, சமய சேவையும் – மக்கட் தொண்டும் புரியும் கலாநிதி தங்கம்மா அப்பாகுட்டி அவர்களுக்குச் '*சிவத்தமிழ்ச் செல்வி*' எனும் கௌரவ விருதுப் பட்டம் வழங்கிக் கௌரவித்த சபை இந்த மணிவாசகர் சபையேயாகும். நாவலருக்குத் திருவாவடுதுறை ஆதீனம் பட்டம் கொடுத்துக் கௌரவித்தமை போன்று 'ஆதீனம்' செய்ய வேண்டிய பணியைச் 'காரை மணிவாசகர் சபை' செய்து முடித்தது. இப்பெருமை இன்றும் தமிழ் நெஞ்சங்களினால் சிலாசிக்கப்படுகிறது. இவற்றுக் கெல்லாம் பண்டிதர் க. வை. குருக்கள் சூத்திரதாரியாயிருந்தார்.

பண்டிதர் க. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்கள் 1940 ஆம் ஆண்டில் காரைநகர் மணிவாசகர் சபையை ஆரம்பித்தார். 1960இல் இவரே காரைநகர்த் தமிழ் வளர்ச்சிக் கழகத்தையும் ஆரம்பித்தார். காரைநகரிலுள்ள இவ்விரு நிறுவனங்களும் வைத்தீஸ்வரக் குருக்களின் இரு கண்கள் என்று சொன்னால் அது மிகையானதல்ல. "நாவலருக்குச் சைவமும் தமிழும் இரு கண்கள்" என்பது வழக்காகும். 'சபை' யும் 'கழகமும்' இன்றும் சிவத்திரு க. வைத்தீஸ்வரக் குருக்களது மகத்தான வரலாற்றினைக் கூறி நிற்கின்றன. 'சபை'யும் 'கழகமும்' பண்டிதரை நாடி நிற்கின்றன. பண்டிதரின் பணிகள் இவ்விரண்டினாலும் சமூகத்திற்குக் கிடைக்கின்றன. இந்த அத்தியந்தத் தொடர்புதான் பண்டிதமணி விளக்கும் 'தாடலை' என்ற சைவசித்தாந்த – அத்துவிதத் தொடர்பு. எப்பவோ முடிந்த காரியம்; பூர்வ புண்ணியத் தொடர்பு; பிரிக்க முடியாத கூட்டு. இதனை எண்ணிப் பார்க்கும் தெளிந்த நல்லறிவு நம்மவர்க்கு வாய்க்க வேண்டும்.

மணிவாசகர் சபையினூடாகவும், தமிழ் வளர்ச்சிக் கழகத்தினூடாகவும் பல்வேறு நூல்களை அச்சேற்றி வெளியிடும் பெருவாய்ப்பும் கிடைத்தது. இவற்றுட் குறிப்பிடத்தக்கது 'ஈழத்துச் சிதம்பர புராணம்' ஆகும். மிகவும் மதிப்பும் பெறுமதியும் வாய்ந்ததொரு புராணம் ஈழத்துச் சிதம்பரபுராணமாகும். 'திருவாதிரை மலர்கள்' ஐந்து இவரது அரும்பணியினால் வெளியிடப்பட்டன. இன்றும் காரை மணிவாசகர் சபை மார்கழி தோறும் திருவாசக விழா எடுத்து வருவது விதந்து குறிப்பிடவேண்டியுள்ளது. 'ஈழத்துச் சிதம்பரம்' தில்லை போன்று திகழ்வது. தென்னிந்தியச் சிதம்பரத் தலத்து

அபிஷேக ஆராதனை நடைமுறைகளும், வழக்காறுகளும், பூசைகளும் இங்கு காரைநகரிலும் நிகழ்த்தப்படும் நடைமுறையால் மிகவும் நல்ல பல பயன்கள் விளைந்துள்ளன. விரத மரபு; திருமுறை பேணும் மரபு; கோயில் விதி பேணும் மரபுகள்; உபசாரங்கள்; ஆலய வழிபாட்டு மரபு; விக்கிரக அபிஷேக மரபு; மங்கள இசை, பிரசங்க மரபுகள் என்பன பேணப்பட்டு இளந்தலை முறையினர் 'சைவப் பண்பாட்டைக் கண்ணாரக் கண்டு தெளிந்து, ஒழுகுவதற்குரிய வகையிலே இங்கு மணிவாசகர் சபையின் செயற்பாடுகள் நிகழ்ந்தேறுகின்றன. இவற்றுக்கான மேலான ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் மேற்கொள்பவர் பண்டிதர் க. வை. குருக்கள் ஆவார்.

காரைநகர் சைவமகாசபையின் பொன்விழா மலர், காரை மணிவாசகர் சபையின் பொன்விழா மலர் என்பன பண்டிதர் க. வை. குருக்களின் மேற்பார்வையிலும் பதிப்பாசிரியரென்ற முறையிலும் நேர்த்தியுடன் வெளியிடப்பட்டவையாகும். தாம் மேற்கொண்ட இப்பணிகளிலே மிகக் கருத்தூன்றிச் செயற்பட்டுச் சைவத்துக்கும் தமிழுக்கும் நல்லமுறையிலே போற்றத்தக்க பணிபுரிந்தவர் பண்டிதர் க. வை. குருக்கள். 'நூல் வெளியீடுகள்' தொடர்பில் இவருக்குக் கிடைத்த அறிஞர் தொடர்பு; சொற்பொழிவுகள் தொடர்பு; பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் தொடர்புகள் இவரது நோக்கையும் போக்கையும் பணியையும் விசாலித்தன.

தமிழறிஞர்களையும், ஆய்வாளர்களையும், விற்பன்னர்களையும், இலக்கியச் சிந்தனையாளர்களையும், சொற்பொழிவாளர்களையும் அணுகிப் பழகுவதிலும், கடிதத் தொடர்பு கொள்வதிலும், அழைப்பித்து அரவணைப்பதிலும்,

உபசரிப்பதிலும், கௌரவிப்பதிலும் பெரிதும் ஈடுபாடு கொண்டு, **தாம் பெரிதும் மனமகிழ்பவர் குருக்கள் ஐயா அவர்கள்.** மனித மகத்துவக் குண நலன்களிலேயுள்ள மகோன்னதங்களைக் கண்டு களி பேருவகை கொண்டு ஆனந்தம் கொள்பவர். சிறியேனைச் சந்தித்த போதெல்லாம் பெருந்தன்மையுடனும் பெருமனதுடனும் – பழுத்த ஞானப்பழமெனத் தோன்றிப் – பழைய உரையாசிரியர்கள், இலக்கிய வாசிரியர்கள், இலக்கணவாசிரியர்கள், தொல்காப்பியம், கம்பராமாயணம், திருக்குறள், திருக்கோவையார், திருவாசகம், திருமந்திரம், திருமுறைகள், நாவலர், கணேசையர், குமாரசுவாமிப் புலவர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, புலவர்மணி இன்னும் பேராசிரியர்கள் பற்றியெல்லாம் விளக்கங்கள் தந்து எம்மையும் 'தமிழ் நூல்கள்' படிக்கத் தூண்டு தலாயிருந்தார்கள். தாமே பழைய நூல்களையும் எமக்குத் தந்துதவினார்கள். 'உரைவளம்' காணவும் உதவினார்கள். பண்டிதர் க. வை. அவர்கள் மிருதுவானவர். 'கடுஞ்சொல்' கூறியறியாதவர். கோபங் கொள்ளாதவர்; பரம சாது; ஈரநெஞ்சினர்; தமிழாராய்விலே புலனைச் செலுத்துவதற்குப் பலரைத் தூண்டிநின்றவர் பண்டிதர் க. வை. குருக்கள் அவர்கள். செஞ்சொற் கொண்டல் சொ. சிங்காரவேலனார் அவர்களை வரவழைத்து மணிவாசகர் விழாவிலே சொற் பொழிவாற்றுவித்தார் பண்டிதர் க. வை. குருக்கள் அவர்கள். பேராசிரியர்கள், ஆதீனகர்த்தாக்கள் பலரது தொடர்பும் இவருக்கு இருந்தன.

பேராசிரியர்கள் விபுலாநந்த அடிகள், க. கணபதிப்பிள்ளை, வி. செல்வநாயகம்,சு. வித்தியானந்தன், க. தனஞ்செயராசசிங்கம், பொ. பூலோகசிங்கம், ஆ. வேலுப்பிள்ளை, க. கைலாசபதி, கா. சிவத்தம்பி,

சி. தில்லைநாதன், நா. சுப்பிரமணிய ஐயர், அ. சண்முகதாஸ், ஆ. சதாசிவம், கா. கைலாசநாதக் குருக்கள் போன்றோரிடத்திலும் மகாவித்துவான் சி. கணேசையர், பண்டிதர் ச. கந்தையபிள்ளை, முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி, வித்துவான் F. X. C. நடராசா, இரா. செல்வகணபதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் போன்றோரிடத்திலும், புலவர்மணி அ. பெரியதம்பிப்பிள்ளை, பண்டிதர் வே. மகாலிங்கசிவம், சோமசுந்தரப் புலவர், இளமுருகனார், வித்துவான் ந. சுப்பையாபிள்ளை, சோ. இராமசுவாமி சர்மா (மத்திய கல்லூரி), பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை, புலவர் பாண்டியனார், த. இராமநாதபிள்ளை முதலான சென்ற நூற்றாண்டறிஞர் பரம்பரையுடனும் நெருங்கிப் பழகியவர் பண்டிதர் க. வை. குருக்கள் அவர்கள்.

இலக்கிய, இலக்கண வித்தகங்களுடனும் சாத்திர, தோத்திர, சைவசித்தாந்த, புராணோதிகாச நுட்ப விளக்கங்களுடனுங் கொண்ட தருக்க நியாய விளக்கங்களுடன் உரையாடவல்ல திறனும் நுண்மாண நுழைபுலமும் பண்டிதர் க. வைத்தீசுவரக் குருக்களிடம் இயல்பாகவே காணப்பட்டன. இயற்றமிழ் வித்தகர் அவர். நடமாடும் சிந்தனைக் களஞ்சியம்; ஆழமான தமிழியலாய்வு நோக்குகள் கொண்ட பல்துறைத் தேடற் பண்பு கைவரப் பெற்ற சான்றோன். நம் காலத்தில் நமது கண் முன்னாற் கண்ட தமிழார்வத் துடிப்பு நிறை கல்விமான்; பல்வேறு குணநலக் கலவை கொண்ட கலைக் களஞ்சியம்; வேத சிவாகம பூஷணம்.

தமிழ் நாட்டிலே உள்ள திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், காசிமடம் என்பவற்றோடு நெருங்கிய தொடர்புகளைக் கொண்டவர் பண்டிதர் க. வை. குருக்களாவர். வைதிகமும், கல்வியும், கலையும், நூற்பணிகளும், தத்துவ விசாரங்களும் தமிழக ஆதீனத் தொடர்புகளால் புடம் போடப்பட்டன; நேர்த்திபட அமைந்தன.

'வசிட்டர் வாயால் ரிஷிப்பட்டம்' என்பதற் கொப்பத் தமது பேராசான் இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களிடமிருந்து தாம் பெற்றுக் கொண்ட 'நற்சான்றிதழ்ப் பத்திரம்' இன்றும் பண்டிதர் க. வை. குருக்களிடம் உள்ளது. இடப்பெயர்வும் அகதி வாழ்வும் கூடச் 'சான்றிதழை' மறக்க இடந்தரவில்லை. அந்தளவுக்குப் பண்டிதமணி மீது பேரன்பு கொண்டவர் குருக்களவர்கள். திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையின் தலைமைத் தமிழ்ப் பேராசானாகத் திகழ்ந்த பண்டிதமணி சி. க. அவர்கள் 27. 08. 1940 இல் எழுதி உபகரித்த நற்சான்றிதழ் வரிகள் – வாசகங்கள் – பாராட்டுக்கள் பின்வருமாறுள்ளன. அவற்றை இக்கட்டுரையிலே முழுமையாகத் தருகின்றோம். பண்டிதமணி எழுதுகிறார்:

"பண்டிதர் க. வைத்தீசுவரக் குருக்களோடு எனக்கு நல்ல பழக்கம் உண்டு. இவர் சுன்னாகத்தில் உள்ள வைதிக சைவ பிராசீன பாடசாலையில் வேதவிசாரதர் சிதம்பர சாஸ்திரிகளிடம் சமஸ்கிருதமும் வித்துவான் கணேசையர் அவர்களிடம் தமிழும் பழைய வரலாற்று முறையிற் படித்தவர். பிறகு பண்டித பயிற்சிக் கழகத்தில் மூன்று வருடம் பயிற்சி பெற்று பண்டித

பரீட்சையிலும் பூரண சித்தியெய்தியிருக்கிறார். இவரது தமிழ் விற்பத்தியை இவருடைய ஆசிரியர் கணேசையர் அவர்கள் சில சந்தர்ப்பங்களில் பாராட்டியதை நேரிற் கேட்டிருக்கிறேன். இவர் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர். நித்திய சந்தோஷி. நமது காலத்திலே ஒரு தக்க போதகாசிரியராய் விளங்குவாரென்று காத்திருக்கலாம். சைவானுஷ்டானம், தாழ்மை, நல்லவர்களின் சேர்கை என்னுமிவைகள் இவரிடத்தே பாராட்டத்தக்க குணவிசேஷங்கள்".

பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை.
(ஒப்பம்)

சைவாசிரிய கலாசாலை,
திருநெல்வேலி,
27. 08. 1940.

யாழ்ப்பாணத்துக் கல்வி அதிகாரிகள், கல்லூரிகளின் அதிபர்கள், ஆசிரிய கலாசாலைகளின் அதிபர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோருக்கெல்லாம் பண்டிதர் க. வைத்தீசுவரக் குருக்களை நல்லபடி தெரியும். இவர்களிடத்தே பழக்கமும், பரிச்சயமும் உண்டு. க. பொ. த. (சாதாரணதரப்) பரீட்சை எழுதும் மாணவர்களுக்கெனத் தமிழ் இலக்கியம், இலக்கணம், சமயம் என நூல்களைக் குறைந்த விலையில் அச்சிட்டுத் தமிழ்ப் பணி புரிந்தமையினாலும், எளிமையுடன் எவருடனும் அளவளாவிப் பழகியமையினாலும் இவரை இனங்கண்டு கொள்ளப் பெரிதும் சிரமம் இருக்கவில்லை. 'தமிழ் வளர்ச்சிக் கழகம்' இவரது நூல் வெளியீட்டுப் பணிக்கு

ஆதர்ஷமாயமைந்தது. இப்பணியானது (பாடநூல் வெளியீட்டுப் பணி) பண்டிதர் க. வை. அவர்களது வாழ்விலே தனித்துவமிக்கதாயும் அமைந்தது. நாவலர் மரபில், கல்விப் பணித் தொடர்பிலே நூற் பணி – பதிப்புப் பணி புரிந்தவர்களைத் தமிழ் கூறும் நல்லுலகம் ஒருபோதும் மறவாது என்பதற்கு இப்பெருந்தகை தக்கதோர் உதாரண புருஷராவார். இன்று, இப்பெரியாரின் விலைமதிப்பற்ற பெருஞ் சேவையால் உயர்வுபெற்றுச் சிறந்து விளங்கும் மாணவர் பலர் உலகின் பல பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள்; குறிப்பாகக் கனடாவில் வாழ்ந்து வருகின்றனர். நல்லாசானின் புகழென்பது – நன் மாணாக்கர்களை உருவாக்குவதிலேதான் பெருமையும் வலிமையும் பெறுகின்றது. அந்த வகையிலே பண்டிதர் க. வை. குருக்களின் 'போதகாசிரியத்துவம்' பெரிதும் பாராட்டப்படுகிறது. ஆசிரியன் எப்போதும் – என்றென்றும் ஆசிரியனே! பிறர் குற்றங் களைந்து நல்லறிவுச் சுடர் கொளுத்தும் பணிக்கு ஈடிணையில்லை. 'குரு' எனும் ஸ்தானம் இறைக்குரிய மதிப்புடையதென்பது நமது உயர் மரபு.

பண்டிதர் க. வை. குருக்கள் அவர்கள் 1992ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலே அகில இலங்கைக் கம்பன் கழகத்தினால் 'மூதறிஞர்' என்னும் கௌரவ விருது வழங்கப்பட்டு, பொன்னாடை போர்த்தப்பட்டும் பொற்கிழி வழங்கப்பட்டும் கௌரவிக்கப்பட்டார். அதே ஆண்டில் (1992இல்) இலங்கையிலே வெளிவந்த நூல்களுள் "ஈழத்துச் சிதம்பர புராணம்" மிகவும் சிறந்த முடிப்பினையுடைய நூலென்ற முறையில் முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டு அதனைப் பதிப்பித்த பண்டிதர் குருக்கள் அவர்களுக்குப் பாராட்டும் தகைமைச் சான்றிதழும் வழங்கப்பட்டன.

பெரியார், சான்றோன், நேசநெஞ்சன், கலாசாரசீலர் பண்டிதர் க. வை. குருக்கள் தற்போது காரைநகரிலே உடற்றளர்ச்சியுற்று எண்பத்தைந்தாண்ட கவையுற்று முதுமை நிலையிலும் உள்ளத்தால் இளைஞனை நிகர்ந்தவராய் இயங்குகிறார்; மனோ வேகமிக்கவராய் இன்றும் தொழிற்படுகிறார். இவர் இன்றும் நமது சமூகத்திலே உலவுவது நாம் செய்த பூர்வபுண்ணியமே! அதிலும் காரைநகர் 'மண்' செய்த புண்ணியம் மிகவும் பெரியது!!!

பற்றற்ற சான்றோனாகத் திகழும் பண்டிதர் க. வை. குருக்கள் ஐயா அவர்கள் தமது குடும்பம், மனைவி, மக்கள் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாதவர். அப்படி யாராவது கதை கொடுத்தாலும் அதனை வெகு சாதுரியமாக ஒரு வார்த்தையால் விலக்கி – சொந்த பந்தங்களைத் தூரத்தள்ளிவைத்து நடக்கும் சுபாவமிக்கவர். இக் குணநலத்தை நானும் சந்திப்புக்களின் போது அவதானித்துள்ளேன். எனினும் குடும்பப்பற்றும் – பாசமும் உள்ளவர் என்பது அவரது வாழ்வாலறியலாம். முனைப்புடன் அறிவாராய்ச்சி அறிஞர் உலகுத் தொடர்பு உயர்வுள்ளல் என்பவற்றில் மூழ்கித்திளைத்து இன்பங் காண்பவர் அவர். 'மூதறிஞர்' அவர்கள் எப்பொழுதும் ஆனந்தமயமாகவே திகழ்பவர். 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்பது அப்பரடிகள் வாக்கல்லவா! குருக்களின் 'பிறப்பு விசேடணம்' யாவரும் அறிந்த பேருண்மை. 'தோன்றிற் புகழொடு தோன்றுக' எனும் வள்ளுவர் வாக்குக்குரிய சான்று.

பண்டிதர் க. வை. குருக்களவர்களது மேதகு அறிவுச் சிறப்பு என்னவெனில், புதுமையும் நயமுங் கண்டு அதில் தாமும் மகிழ்ந்து பிறரையும் மகிழவைக்கும் உணர்வு நலனாகும். இப்பண்பு நலன் பழுத்த 'தமிழுள்ளம்' வாய்க்கப்பெற்றோருக்கே அமைவது. இன்றும் பண்டிதர் க. வை. குருக்கள் போன்றோரைக் கண்டும், கதைத்தும் வாழ்வது அர்த்தபுஷ்டி தரும் வாழ்வாகும்; தனியின்பம் தரவல்லதாம். பண்டிதர் க. வை. குருக்களவர்கள் **தீவகத்தின் ஞானச் செல்வர்களுள் ஒருவர்.** காரைநகர் மண்ணே இப்பண்டிதரையாவால் பெருமைபெறுகிறது. போதகாசிரியர்கள் பலருளர். நமது பண்டிதர் போதகாசிரியர் க. வை. குருக்கள் அவர்கள் "**ஞான சீலம் மிக்க போதகாசிரியர்**" என்றால் அப்பாராட்டுத் தகும். ஆய்வாளர் எவ்ரும் குருக்களைப் படித்து அனுபவிக்கத்தக்க அளவுக்குக் கருத்துவளம் கொண்ட நன்னூலாய்த் திகழ்பவர். இந்த ஞானச் செல்வரை வச்சிர தேகத்துடன் நீடு சுகானந்த வாழ்வருளிக் காக்க வேண்டும் என்று நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

*சுபம்*

Elathu Chithambaram with the famed shrine of Lord Natrajah owes its Present grandeur chiefly to the unbroken line of devoted priest-hood that for more than four generations

- Late **N. Sabaratnam,** Emiritus Principal, Jaffna Hindu College. (Karainagar)

ஈழத்துச் சிதம்பர ஆஸ்தான வித்துவான்

# என். கே. கணேசன் மறைவு குறித்து கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவர்கள் ஆற்றிய அஞ்சலி உரை

கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் J.P., B.A.

*கொழும்பு கம்பன் கழகம் 2. 12. 2001 வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடாத்திய இசைவேள்வியின் போது ஆற்றிய*

**அஞ்சலி உரை**

மறைந்த நாதஸ்வர மேதை என். கே. கணேசன் மூதறிஞர் அவர்களின் பெரும் அன்பையும் ஆசியையும் பெற்றவர். அத்துடன் அயலவர். கலைஞர்கள் தோன்றுகிறார்கள், மறைகிறார்கள். சிலர் பிறவிக் கலைஞர்களாகவே (Born Artiste) தோன்றுகிறார்கள். சிலர் தமது முயற்சியால், ஆற்றலால், ஆளுமையால் பார்போற்றும் கலைஞர்களாகிறார்கள். இருப்பினும் ஒரு சிலரே உச்ச நிலையை அடைகிறார்கள். மக்களின் மனதில் இடம் பிடித்துக் கொள்கிறார்கள்.

இது அவர்களது கலைகளில் கண்ட தனித்துவம், திறமை, ரசிகர்களை சுண்டியிழுக்கும் பாங்கு; மற்றது இங்கிதம் என்று கூறுவார்களே. கலைஞர்களுக்கு இது மிக அவசியமாகிறது.

எத்துணை திறமையிருந்தும் அவரிடம் இங்கிதம் – மனிதனுடன் பண்பாக, அன்பாகப் பழகும் பாங்கு இல்லாதவிடத்து, அவர் ஒரு புறக்கணிக்கப்பட்ட நிலையிலேயே காணப்படுவார்.

இந்நிலையில் நாம் இங்கு நினைவுகூர வந்திருக்கும் நீத்தார் பெருமை கூறவந்திருக்கும் இசை அறிஞர் பூரண தகைமைகளைக் கொண்டிருந்த இசை அறிஞர் என்றே கூறவேண்டும். இசைநாத மணி, இசைச்சக்கரவர்த்தி, மறைந்த நாதஸ்வர வித்துவான் காரைநகர் என். கே. கணேசன் இசை உலகிற்கு அரும்பணி ஆற்றியவர். வாழும் பொழுதே கௌரவிக்கப்பட்டார். பல இளம் கலைஞர்களுக்கு உதாரணமாக இருந்தவர். இவர் பெருமை கூறி அஞ்சலி செலுத்துவது நமது கடமைப்பாடுகளில் ஒன்றாகும்.

இதனைத் தவறாது இவ்விசை வேள்வியில் சேர்த்துக் கொண்ட கம்பன் கழகத்திற்கு முதற்கண் பாராட்ட வேண்டும். நாதஸ்வர வித்வான் காரைநகர் என். கே. கணேசன் அவர்களது இழப்பு இசை உலகிற்கு மாபெரும் இழப்பாகும். இவ்வருடம் ஜுலை மாதம் 28 ஆந் திகதி மரணமெய்தினார். காரைநகரையே பிறப்பிடமாகக் கொண்டவர் இவர். முதலில் தந்தையார் நல்லகண்ணு கம்பரிடமும், பின்னர் மூளாயைச் சேர்ந்த அமரர் ஆறுமுகம் நாதஸ்வர வித்துவானிடமும், பின்னர் மாவிட்டபுரம் அமரர் ராசா நாதஸ்வர வித்வானிடமும் நாதஸ்வர, இசையை முற்றாகக் கற்றார். முறையாகக் கற்றார். அளவையூர் நாதஸ்வரச் சக்கரவர்த்தி கலாசூரி

என். கே. பத்மநாதனை சம்பந்தியாகக் கொண்டார். இந்திய நாதஸ்வர தவில் வித்துவான்களோடு ஈழத்துச் சிதம்பர திருவாதிரை உற்சவ காலத்தில் இணைந்து வாசித்து பாராட்டுப் பெற்றவர். இவரது வாசிப்பு தனித்துவமானது. கேட்போர் மனதைக் கவரும் தன்மையது என்று கேள்விப்பட்டுள்ளேன். தமிழகத்தின் பிரால தவில் மேதைகளான அரித்துவாரம் மங்களம் A. K. பழனிவேல், திருவானப்புத்தூர் T. A. கலியமூர்த்தி, திருச்சேரை முத்துக்குமாரசாமி போன்றோரால் ஈழத்துச் சிதம்பரத்தில் பாராட்டுப்பெற்றவர்.

ஈழத்து சிதம்பர தேவஸ்தானத்தில் கூத்தபிரான் வீதியுலா வருங் காலத்தில் நாதஸ்வரம் வாசிப்பதை தமது முக்கிய கடமையாகக் கொண்டார். திரு. கணேசன் அவர்கள் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் ஆஸ்தான வித்வானாக, நாதஸ்வர மாமேதையாக 40 ஆண்டு காலமாக இருந்தவர். நாடு போற்றும் நன் மக்களையும் ஈன்று, நாதஸ்வர மேதை—தயாகப் பல பட்டங்களையும் பெற்று காரை மாதாவுக்குப் புகழ் சேர்த்த கைலாயக் கம்பர் கணேசன் அகவை 53 வரை வாழ்ந்தவர். நாதஸ்வர கலாநிதி, நாதஸ்வர இசைமணி. நாத இசைச் சக்கரவர்த்தி எனும் பல பட்டத்தால் கௌரவிக்கப்பட்டார். காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்பிகையின் ஆஸ்தான வித்துவானுமாவார்.

இலங்கை வானொலிக் கலைஞராகப் பங்குபற்றியவர். இவரது மக்களும் நாதஸ்வரம், தவில், வாய்ப்பாட்டில் புகழ்பூத்து நிற்கிறார்கள். சென்ற ஆண்டுகூட கம்பன் விழாவிற்கு வருகை தந்த மாம்பழம் சிவா குழுவினரை ஈழத்து சிதம்பர திருவாதிரை தேர் உற்சவத்திற்கு வாசிக்க வைத்த பெருமை அமரர் கணேசனையே சாரும். 1975ல் வலங்கைமான் சண்முகசுந்தரத்துடன் வாசித்துப் பாராட்டைப் பெற்றவர். இந்த வகையில் கவிச்சக்கரவர்த்தி கம்பர் வம்சத்து வழித்தோன்றலான திரு. நல்லக்கண்டு செல்லையா சம்பத்துவின் தம்பி, நல்லக்கண்டு கைலாயக் கம்பரின் மகனாகப் பிறந்து ஈழத்தில் புகழ்பூத்த கலைஞர் வரிசையில் இடம்பெற்று, தனது தெய்வீக இசை மூலம் இசைப்பணியாற்றி ஈழத்து சிதம்பர தேவஸ்தான ஆஸ்தான வித்துவானாகவுமிருந்த நாதஸ்வர மேதை திரு. என். கே. கணேசன் அவர்களது மறைவு தமிழ் மக்களுக்கும் கலைத்துறைக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும். அன்னாருக்கு அஞ்சலி செலுத்துவோம்.

*கம்பன் கழக அழைப்பை ஏற்று 02.12.2001 - கொழும்பு இராமக்கிருஷ்ண மண்டபத்தில் அன்னாரின் படம் திரைநீக்கம் செய்து படத்துக்கு மலர் மாலை அணிந்து திரு. கே. கே.சுப்பிரமணியம் கௌரவித்தார்.*

# அந்தணர் குலத்திலகம்

சங்கீத பூஷணம்
ப. முத்துக்குமாரசாமி
(ஆசிரியர் - இசைஏடு, சென்னை).

அலை எறிந்து ஆர்ப்பரிக்கும் கடல் சூழும் நன்னகராம் காரைநகரில் தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவனாய் ஈழ்த்துச் சிதம்பரம் என்னும் புண்ணியத் தலமதனில் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றான். இப்பெருமானுக்கு வழிவழியாகப் பூஜை, ஆராதனை செய்துவரும் அந்தணர் தம்மிடை அறிவும் – பக்தியும் – அன்பும் – பண்பும் நிறைந்தவராய் விளங்கிவரும் சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் வணக்கத்துக்குரியவர். ஈழத்துச் சிதம்பரம் பேரும் புகழும் பெற விளங்கும் திருத்தலம். கற்றோரும் – கலைவிற்பன்னரும் திருநீறு துலங்க இறைவனை வழிபடும் பக்தரும் – அறவோரும் – அந்தணரும் நிறைந்த திருநிலம். இங்கு அன்னதானமடம் உண்டு. அறவுரை கேட்கத் திருவாசகர் சபை உண்டு. மணிவாசகரின் திருவாசக விழாவில் தமிழ் நாட்டின் தலை சிறந்த சான்றோராம். உயர்திரு அ. ச. ஞானசம்கந்தன் திரு. கி. வா. ஜெகந்நாதன், திருமுருக கிருபானந்தவாரியார் போன்றோரும் இன்னும், பலரும் பங்கேற்றுச் சிறப்பித்துள்ளார்கள். இந்த விழாவின் பின்னணியில் நமது போற்றுதலுக்குரிய சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள்

விளங்கி வருகின்றார். சைவமும் தமிழும் தழைத்தோங்க ஆவன செய்வதில் தீரர் அவர் (மறைந்த இவரின் தந்தையார் சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்கள் அவர்கள் திருக்கேதீச்சரக் குருகுலத்தின் போஷகரா விளங்கியவர்). பல கோவில் கும்பாபிஷேகங்களை நடத்தியவர். கொழும்பு, பொன்னம்பலவாணேசர் திருக்கோவில் பிரதமகுரு – சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள் நவாலி பிரதிஷ்டா குரு சாமி விஸ்வநாதக் குருக்கள் போன்றோர் இவர் தமக்குப் நெருக்கமானவர்கள். சமய அறிவும் சாஸ்திர அறிவும், இலக்கிய அறிவும் நிரம்பிய இவருக்கு வயது எண்பத்தைந்து ஆகிறது. ஆயிரம் பிறைகண்ட அந்தண குலசீலர். இவர்தம் பெருமையைப் பாராட்டிச் சிறப்பிக்கவென்று ஒரு அன்பர் – அவர் வேறு யாருமல்ல – கலைஞானம் கைவரப் பெற்றவர் தமிழர் தம் பண்பாட்டின் விளக்கமானவர் சுந்தரப் புன்னகையின் சொந்தக்கரார் என் நட்புக்குப் பாத்திரமானர் உயர்திரு. கே. கே. சுப்பிரமணியம் அவர்கள்தான். கலைவிழா, கோவில் திருவிழா – இசைவிழா – மணிவாசகர் விழா இன்னும் என்னென்ன விழாவுண்டோ அங்கு அன்பர் சுப்பிரமணியம் அவர்களைக் காணலாம். ஈழத்தின் பல பகுதிகளிலும் பங்கு கொள்ள வந்த இந்தியக் கலைஞர்களை வரவழைப்பதிலும் – அரசிடம் பரிந்துரை செய்து உத்தரவு பெறுவதிலும் சுப்பிரமணியம் அவர்களின் பங்களிப்புச் சொல்லி முடியாது. அண்மையில் சென்னைத் தமிழ் இசைச் சங்கத்தின்

59வது ஆண்டுத் தமிழ் இசைவிழாவின் தொடக்க நாளன்று ( 21. 12. 2001 ) எனது "இசை ஏடு" இசை விழாச் சிறப்பிதழை வெளியிட்டவேளை, முன்வரிசையில் (V.I.P.) பரோபகாரமணி உயர்திரு கே. கே. சுப்பிரமணிம் அவர்கள் தனது நண்பர் ஹரித்துவாரமங்கலம் திரு. ஏ, கே. பழநிவேல் பேராசிரியர் சாரதா நம்பி ஆருறன் அவர்களுடன் அமர்ந்திருந்து பாராட்டியதை என்றும் மறக்கமுடியாது.

தமிழகத்தின் பிரபல கலைஞர்கள் பலரும் அவர்களைப்பற்றி விசாரிக்கத் தவறுவதில்லை. இவர்கள் சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களின் தொண்டினைப் பாராட்டி எடுக்கும் விழாவும் வெளியிட இருக்கும் வண்ணக் களஞ்சியமாம் தமிழ் மணம் கமழும் விழா மலரும் எட்டெட்டுத்திக்கும் புகழ்மணம் பரப்ப எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரத்தில் உறையும் நடராஜப் பெருமான் சிவகாமசுந்தரி பொற்றாள் வணங்குகிறேன்.

*வாழ்க பாராட்டுவிழா!*

*1995*

***அகில இலங்கைக் கம்பன் கழகம் பண்டிதமணி சி. கணபதிபிள்ளையின் நினைவுப் பரிசு முதறிஞர், சைவத்தமிழ் காவலன், பண்டிதமணி சிவஸ்ரீ க. வைத்தீசுவரக் குருக்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டது.***

# எங்கள் வைத்தீஸ்வரர்

கா. சதானந்த சர்மா
ஞானவைரவர் கோயில்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

யாழ்ப்பாணம் காரைநகரில் அந்தண குலத் திலகமாக விளங்கும் சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்கள் அவ்வூரிலே பிறந்து வளர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் அவர்கள் ஆசாரம், ஒழுக்கம், எளிமையான தோற்றம், இனிமையான பேச்சுத்திறன் என்பன நிறையப் பெற்றவர். யாவருடனும் அன்பாகப் பேசும் சுபாவம் இவருடைய குணாம்சங்களில் ஒன்று.

அந்தணர்களுக்கே உரிய ஓதல், ஓதுவித்தல், ஈதல், கற்றல், கேட்டல், கேட்பித்தல் என்னும் ஆறு கடமைகளும் மேற்கொண்டு ஏனையோருக்கு முன்மாதிரியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்து கடமைகளை நிறைவு செய்து தனது வயதான காலத்திலும் இந்து சமய, தமிழ் வளர்ச்சிக்காக உழைத்துக் கொண்டிருக்கிறார். மாணிக்கவாசகர் சபை உருவாகுவதற்கு முன்னின்று பணியாற்றிய குருக்கள் அவர்கள் அதன் மூலம் வருடாந்தம் திருவாசகப் பெருவிழா நடாத்தி வந்துள்ளார். "ஈழத்துச் சிதம்பர தல புராணம்" எழுதி பதிப்பித்தவர் ஆவார்.

தமது வாழ்நாள் முழுவதும் சிவப்பணியும் தமிழ்ப்பணியும் ஆற்றிவரும் குருக்கள் அவர்கள் கடந்த செப்டெம்பர் 22, 2001ல் தமது எண்பத்தைந்தாவது அகவை நிறைவு பெற்றார். எந்த விதமான புகழ்ச்சியையும் நாடாமல் அமைதியாகவும் அடக்கமாகவும் தமது பணிகளை ஆற்றிக் கொண்டு வருகின்றார்.

ஈழத்துச் சிதம்பர புராணச் சுருக்கம், தொடர்மொழிக்கு ஒருமொழி, எதிர் சொற்கோவை, பாரத இதிகாசத்தில் வரும் பாத்திரங்களின் குணவியல்பு, பெரிய புராண திருநகரப் படல உரை, உரை நடையாக்கம், மதிப்பீட்டுப் பயிற்சிக் கோவைகள், காரைநகரில் சைவசமய வளர்ச்சி என்பன ஐயா அவர்களால் ஆக்கப்பெற்ற நூல்களாகும்.

இவற்றை விட ஏறக்குறைய பதினைந்து நூல்கள் குருக்களால் பதிப்பிக்கப்பட்டவையாகும். இவை தவிர

காரைநகர் சைவமகா சபைப் பொன்விழா மலர்,
காரைநகர் மணிவாசகர் சபைப் பொன்விழா மலர்,
திருவாதிரை மலர்கள் – 04,
காரைநகர் வியாவில் ஐயனார் கோவில் கும்பாபிஷேக மலர்

என்பனவற்றின் தொகுப்பாசிரியராகவும் விளங்கி பெருந் தொண்டாற்றியுள்ளார். குருக்கள் கொழும்பில் ஆசிரியராக கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்தில் பணியாற்றிய காலத்தில் வெலிக்கடை, மாறை ஆகிய சிறைச்சாலைகளுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் சென்று அங்குள்ள சைவத்தமிழ்க் கைதிகளுக்கு சமயச் சொற்பொழிவாற்றி அவர்கள் தூய வாழ்வு வாழ்வதற்கு பேருதவி புரிந்தார்.

வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்கள் கூர்ந்த மதிநுட்பமும், சிறந்த சிந்தனை ஞானமும் உடையவர். அகில இலங்கைக் கம்பன் கழகம் 1993.ல் இவருக்கு "மூதறிஞர்" என்னும் பட்டம் வழங்கி, பொன்னாடை போர்த்தி, பொற்கிழி வழங்கிக் கௌரவித்தது.

அன்னார் கனடா சைவசித்தாந்த மன்றத்தின் காப்பாளராகவும் அன்பு நெறி சிறப்பு ஆசிரியராகவும் பணிபுரிந்து வருகின்றார். தமது இந்த முதுமை நிலையிலும் தமிழுக்கும் சைவத்துக்கும் இன்னும் தம்மாலான தொண்டுகள் எவ்வளவோ செய்ய வேண்டும் என்னும் பேரவாவில் இருக்கும் குருக்கள் அவர்கட்கு, எல்லாம் வல்ல தில்லைக் கூத்தன் ஸ்ரீ நடராஜப் பெருமான் இன்னும் பல்லாண்டுகள் நோய் நொடியின்றி வாழ்ந்து தொண்டுகள் புரிய அருள் புரிய வேண்டும் என்று பிரார்த்தித்து அமைகின்றேன்.

முற்றும்.

*இம் மலரைத் தொகுத்து வெளியிட பல விதத்திலும் உதவிய முன்னாள் இலங்கை மரக் கூட்டுஸ்தாபன முகாமையாளரும் திரு. R. பொன்னம்பலம் அவர்கள் (மூதறிஞர்பால் பெரும் அன்பும், பக்தியும் கொண்ட நேர்மையாளர்.)*

காரைநகர்

மணிவாசகர் சபை

## காரைநகர் மணிவாசர் சபைத் தலைவர் பண்டிதர் மு. சு. வேலாயுதபிள்ளை அவர்கள் பதிப்பு ஆசிரியருக்கு 20. 01. 2002 இல் எழுதிய மடலில் –

திண்ணபுரக் கூத்த பிரான் ஆருத்திரா தரிசன அபிஷேகத்திற்குப் முன் மணிவாசகர் விழாவின் இறுதிநாள் (29. 12. 2001) நிகழ்ச்சி தங்களின் வேண்டுகோளின்படி "திருவாசகத் தேனிசை விருந்து" சாகித்திய இசைப் பேரரசு திரு. நா. மு. வி. நவரெத்தினம் (தலைவர், இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்) குழுவினரால் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியை அங்கு கூடியிருந்த பக்தர்கள் பெரிதும் பாராட்டினர். இத்தகைய விருந்தை அளிப்பதற்கு ஆலோசனையும் ஆதரவும் நல்கிய தங்களை எமது சபை போற்றுகின்றது. காலத்தினாற் செய்த உதவிக்குச் சபை என்றென்றும் கடமைப்பட்டுள்ளது.

## திருவாசகத் தேனிசை விருதில் பங்குபற்றிய கலைஞர்கள்

சாகித்திய இசைப்பேரரசு

திரு. நா. மு. வி. நவரெத்தினம் - பாட்டு
தலைவர், இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்

இசைஞான தீபம்

திரு. உ. இராதாகிருஷ்ணன் - வயலின்

லயஞான திலகம்

S. மகேந்திரன் - மிருதங்கம்
வித்துவான் சண்முகசுந்தரம் - கஞ்சிரா
செல்வன் ஏ. ரமணன் - முகர்சிங்
செல்வன் ந. பரந்தாமன் - தம்புரா



உ
*சிவமயம்*
*மணற்காடு அம்பாள் துணை*
*ஓம் சாயிராம்!*

# *நன்றியுரை*

எம் பெருமைக்குரிய அம்மை அப்பனான சிவபூசைச் செல்வர் கணபதிப்பிள்ளை கந்தப்பு, கந்தப்பு வள்ளியம்மை எம்மை வளர்த்து, ஆளாக்கி வாழவைத்த தெய்வங்களுக்கும், 43 ஆண்டுகளாக என் வாழ்வில் உறுதுணையாக இருந்த, பல தியாகங்கள், சாதனைகள் புரிந்த என் அன்பு மனைவி சரசுவதி (புவனம்) – (பகவான் ஸ்ரீ சத்திய சைபாபா பக்தை) அவர்கட்கும், என் அருமைப்பிள்ளைகளுக்கும், பாசமுள்ள மருமக்களுக்கும், எங்கள் பிரியமான பாசமிகு பேரப்பிள்ளைகட்கும், ஐந்து தசாப்பங்களாக எங்கள்பால் அன்பும் நல்லாசியும் வழங்கி, எங்கள் நல்வாழ்வுக்கு ஓர் கலங்கரை விளக்குமாகத் திகழ்ந்த, மூதறிஞர், சைவத்தமிழ் காவலன், பண்டிதமணி, பிரம்மஸ்ரீ க. வைத்தீசுவரக் குருக்கள் அவர்களது 85வது அகவைப் பூர்த்தி பற்றிய இந் நூலைத் திண்ணபுரக் கூத்தபிரான் திருவடியில் சமர்ப்பிக்கின்றோம். இந் நூல் உருவாகக் காரணமாயிருந்த எல்லோருக்கம் என் நன்றி உரித்தாகுக.

அவர் பல்லாண்டு பல்லாயிரம் ஆண்டு வாழக் கூத்தபிரான் அருள்புரிவாராக. இம்மலருக்கு அருளாசிகள், வாழ்த்துச் செய்திகள், கட்டுரைகள் அனுப்பி ஊக்கப்படுத்திய அறிஞர் பெருமக்களுக்கும், சிறந்த முறையில் அச்சிட்டு வழங்கிய யுனி ஆர்ட்ஸ் நிறுவனத்தினருக்கும் அதன் உரிமையாளர் திரு. பொ. விமலேந்திரன் அவர்களுக்கும் எங்கள் இதயங் கலந்த நன்றி நன்றி நன்றி!

*சிவ சிவ*
*திருச்சிற்றம்பலம்.*

*கே. கே. சுப்பிரமணியம்*



## கே. கே. சுப்பிரமணியம்

இந்நூலைப் பதிப்பித்து வெளியிடும் 70 வயது இளைஞர் திரு. கே. கே. சுப்பிரமணியம் 6-10-1929இல் ஈழத்து யாழ் மாவட்டக் காரைநகரில் பிறந்தவர்.

40 ஆண்டுகள் இலங்கை சுங்க இலாகாவிலும். 5 ஆண்டுகள் இலங்கை முதலீட்டுச் சபையிலும் (பி. ஓ. ஐ.) உயர் பதவி வகித்தவர்.

உலகெங்கும் வாழும் சைவ சமய அருளாளர்கள், சிவாச்சாரியர்கள், இசை அறிஞர்கள், தமிழ்ச் சான்றோர்களின் அன்பையும் நட்பையும் மூலதனமாகக் கருதி வாழ்பவர்.

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் நடராசர் தாள் மலர்களிலும் மணற்காடு முத்துமாரி திருவடிகளிலும் அளப்பரிய ஈடுபாடு மிக்கவர்.

சமாதான நீதிபதி, இரசிக கலாமணி, அருள்நெறித் தொண்டர், பரோபகாரமணி, சிவதர்மசுரபி முதலிய பல அரிய விருதுகளுக்குச் சொந்தக்காரர்.

இம்முறை சிதம்பரத்தில் 28.12.2001 வெள்ளிக்கிழமை ஆயிரங்கால் மண்டபத்தில் ஆருத்திரா தரிசனத்திற்கு முதல் நாள் கௌரவிக்கப்பட்டவர்.

துணைவியார் திருமதி சரஸ்வதி (புவனம்) சுப்பிரமணியம், மங்கையர்க்கரசியாக, மாதர் குல மாணிக்கமாகத் திகழ்பவர்.

வாசுகி, சுரேசன், குருபரன், குகசுதன், ஞானவேல் ஆகிய அன்புப் பிள்ளைகள் கே. கே. எஸ். அவர்களின் நற்பண்புகளுக்குச் சான்றாகப் பெருவாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

எளிமை, அடக்கம், அளப்பரிய சிவபக்தி, தமிழ் அன்பு, இன்முகம் என்பன இப்பெரியாரின் புகழ் தாங்கும் தூண்களாக உள்ளன.

*கே. கே. எஸ். என்ற மூன்றெழுத்தை அறியாத யாழ்குடாத் தமிழர்கள் உலகில் எவரும் இலர்.*

'செந்தமிழ்வாரிதி'
முனைவர் இரா. செல்வக்கணபதி
மயிலாடுதுறை.

GRAPHIC DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 330195.